# விதைகள்...

பகுதி-15

# விதைகள்...

பகுதி-15

## உங்களுடன் சில நிமிடங்கள்...:

*"மாரியும் உறைந்த மழையும் வானத்திலிருந்து இறங்கி, அவ்விடத்துக்குத் திரும்பாமல் பூமியை நனைத்து அதில் முளை கிளம்பி விளையும்படிச் செய்து, விதைக்கிறவனுக்கு விதையையும், புசிக்கிறவனுக்கு ஆகாரத்தையும் கொடுக்கிறது எப்படியோ, அப்படியே தன் வார்த்தையை அனுப்பி, அது வெறுமையாக தன்னிடத்திற்கு திரும்பாதபடி, தான் விரும்புகிறதை செய்து, அனுப்பின காரியமாகும்படி வாய்க்கச் செய்கிற (ஏசா. 55: 10, 11)."* பிதாவாகிய தேவனுக்கு மகிமையுண்டாகத் தக்கதாக விதைகள் 15–ஆவது பாகத்தை எழுதுவது எனக்கு நல்லதாகக் கண்டது. பிதாவின் வாயிலிருந்து புறப்பட்டு வருகிற கர்த்தர் இயேசுவின் (வார்த்தை – வார்த்தையானவர்) நாமத்தில் உங்களை வாழ்த்தி வரவேற்கிறோம்! *"புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி; அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார். ... 2 கொரி. 3:6"* *"நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாதலால், மிகவும் தாராளமாய்ப் பேசுகிறோம்."*

*"... கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற தேவனுடைய சபைக்கும் (உலகம் முழுவதுமாக பரவியிருக்கிற தேவ சபைக்கும்), எங்களுக்கும் தங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும்... (1 கொரி. 1:2)"* எழுதுகிறேன்.

இதை வாசிக்கத் துவங்கியிருக்கும் நீங்கள் யாராக இருந்தாலும் சரி; இதுவரையிலும் நீங்கள் கடந்து வந்த வாழ்க்கைப் பாதை எப்படிப்பட்டதாக இருந்தாலும் சரி; உங்களுக்கு இருக்கிற பிரச்சனைகள் எதுவாக இருந்தாலும் சரி; உங்களுக்குச் சாதகமாக இந்த வார்த்தைகள் வந்து கொண்டிருக்கிறது. இது உங்களுக்கு ஒரு திருப்புமுனை. ***Turning point!*** சகலமும் புதிதாகும் காலமிது! இனி காலம் செல்லாது; கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான் என்ற வாக்குத்தத்தம்; தேவ பிள்ளைகளின் வாழ்க்கையில் நிறைவேறுவதற்காக வேகமாக வந்து கொண்டிருக்கிறது.

***"உங்களின் தோல்விப் பயணங்களுக்கு முடிவு கட்டி; வெற்றிப் பாதைக்கு கை நீட்டும் பாதைகாட்டியாக பிதாவாகிய தேவன் (யெகோவா) வந்து கொண்டிருக்கிறார். பூமியின் சாபங்களால் ஏற்பட்ட வேதனைகளுக்கு முடிவு கட்டி; புதிய மாற்றங்களை உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்த வசந்த காலப் பூக்களோடு கர்த்தர் இயேசு வந்து கொண்டிருக்கிறார். தேவனைப் பற்றிய அறிவில்லாததினால் சுயமான தீர்மானங்கள் எடுத்ததினால் ஏற்பட்ட இருளில் பூத்த கருப்பு மலர்களை அகற்றி; ஒளிமயமான எதிர்காலத் திட்டத்திற்கான வரைபடத்துடன் (draft) பரிசுத்தாவியானவர் வந்து கொண்டிருக்கிறார்."***

வெல்வெட் விரிப்பை விரிக்க வேண்டாம், சந்தன மாலையும் வாங்க வேண்டாம்! உங்களிடம் என்ன இருக்கிறதோ அதனோடு அவரை (அவர்களை – ***trinity)*** வரவேற்கத் தயாராகுங்கள். ஏனென்றால் நாம் அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப் போவது; அது எதுவாக இருந்தாலும் சரி, அவற்றையெல்லாம் நம் தகுதிகளின் அடிப்படையில் அல்ல, அவருடைய கிருபையினடிப்படையில் மட்டும் தான் பெற்றுக்கொள்ளப் போகிறோம்.

**உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.**


எங்கள் முகவரி:

சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

5-A/233, கால்டுவெல் காலனி, 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008

தொலைபேசி: +91-461-2377889
அலைபேசி: +91-0-94424 66250 & +91-0-90034 56506

Email : sovereignjesus@gmail.com
Web : www. tamilchristian.com/ebooks

**Our Address:**

**Sis. LATHA DAVID**

**SOVEREIGN JESUS MINISTRIES**

**5-A/233, CALDWELL COLONY,
2nd STREET (EAST),
TUTICORIN-628 008**

**Ph.: +91 - 461 - 3209737
Mobile: +91-0-94424 66250 & +91-0-90034 56506**

Email : sovereignjesus@gmail.com
Web : www.tamilchristian.com/ebooks

## என் கேள்விக்கென்ன பதில்?:

நிலையில்லாத இந்த உலக மேடையில் நானும் வந்ததென்ன? நான் ஏன் பிறந்தேன்? நாட்டுக்கு நலமென்ன புரிந்தேன்? என்று தேவனில்லாத உலக மனிதனின் மனதில் கூட கேள்வி எழும்புகின்றது. ஆனால் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கிற நாம்; அவருடைய பிள்ளைகள் என்று அழைக்கப்படுகிற நாம்; பூமியில் அவருடைய வேலையைச் செய்து கொண்டிருக்கிற நம் மனதில் மட்டும் எந்த கேள்வியுமே எழும்புவதில்லை. அப்படியே கேள்விக்குறிகள் தலையை நீட்டினாலும் அதன் தலையில் "நச்" என்று ஒரு குட்டு குட்டி உட்கார வைத்து விடுகிறோம்! எதற்கு வீண் வம்பு? நாம் எதையாவது கேட்டுவைக்கப் போய்; பாஸ்டருக்கு எரிச்சல் வந்து விடுகிறது, அல்லது கோபம் வந்து விடுகிறது! தவறாக நினைத்து விடுகிறார், சண்டை ஆரம்பிக்கிறது, பிறகு? பிறகென்ன கேள்வி கேட்ட அப்பாவி விசுவாசி கேள்விக்குறிகளைத் தூக்கி தோளில் தொங்கவிட்டபடி சபையை விட்டு பரிதாபமாக வெளியேறுவார்; அல்லது வெளியேற்றப்படுவார்!! கேள்விகளை மூட்டையாகக் கட்டி ஒரு மூலையில் போட்டுவிட்டு; அடுத்த சபைக்கு போய்விடுவார்.

அங்கே போய் தேவனை ஆராதிக்க ஆரம்பிக்கிறார்... நான் பாவி தான்... அடிமை நான் ஆண்டவரே! இந்தப் பூமி எனக்கு சொந்தமில்லை... பாவி நீ போகும் போது கூட வருவதென்ன?... பொன்னும் வேண்டாம், பொருளும் வேண்டாம்... அது இது என்று பாடி ஆராதித்துக் கொண்டேயிருக்கிறார்கள்! தேவ பிள்ளைகளின் இந்த அறியாமையின் இருட்டில் பல அதிர்ச்சி தருகிற காரியங்கள் பூமியின் மீது நடந்து விட்டன; இப்போதும் நடந்து கொண்டிருக்கின்றன, அது என்ன?

## ஏன் நடந்தது? எப்படி நடந்தது? என்ன நடந்தது?:

தேவனை அறிந்து கொண்டு, அவருடைய திட்டத்தில் இருக்கிற தேவனுடைய பிள்ளைகளாகிய நாம் அனுபவிப்பதற்காக தேவன் படைத்த சகலவிதமான நல்ல, நன்மையான காரியங்களெல்லாம் கைதவறிப் போனது தான் அந்த அதிர்ச்சியான காரியம். பூமியை சுதந்தரிப்பாய் என்று விசுவாச சந்ததியினரான நமக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தமும் கைதவறிப் போனது. (சங். 37:29 & ரோமர் 4:13) பூமியைச் சொந்தமாக்க, நமக்குக் கொடுக்கப்பட்ட வேதத்தின் பிரமாணங்கள், கற்பனைகள், கட்டளைகள், ஆலோசனைகள் எல்லாமே கை நழுவிப் போய்விட்டன. கடைசியில் பூமியே அவர்கள் ஆளுகைக்குள்ளாகப் போய்விட்டது. தேவனையறியாத உலக ஜனங்கள்; வேதப்பிரமாணங்களைப் பிரயோஜனப்படுத்தி; எல்லாவற்றையும் தங்களுடைய கால்களுக்குக் கீழே கொண்டு வந்துவிட்டார்கள்.

பிறகென்ன... அவற்றையெல்லாம் வைத்து பூமியைத் தங்களுடைய சுய அறிவின்படி ஆளுகை செய்கிறார்கள்; தங்களுடைய பலனால் பூமியை நிரப்பியும் வருகிறார்கள்! தேவனில்லாத உலக மக்கள் சிரித்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவஜனங்களின் நிலவரமோ பிறர் சிரிக்கும் அளவுக்கு மோசமாக உள்ளது ***(shamefully and shockingly)*** இதையெல்லாம் வேடிக்கை பார்க்கும் கூட்டத்திலேயே எவ்வளவு காலம் தான் உட்கார்ந்திருப்போம்? இந்தப் பூமி நமக்கில்லை, அவங்களுக்குத்தான் என்று தப்பாக நினைக்கும் கூட்டத்துக்குள்ளாக எத்தனை நாட்கள் தான் உட்கார்ந்திருக்க முடியும்? *அவன் புத்திரர் எழும்பி, தேசத்தை சுதந்தரித்துக் கொண்டு, உலகத்தைப் பட்டணங்களால் நிரப்பாதபடிக்கு,... (ஏசா. 14:21)* தடுத்து நிறுத்த வேண்டிய காலம் வந்து விட்டது! இன்னமும் பொறுப்பில்லாமல் உலகத்தின் செழிப்பையெல்லாம் அவர்கள் வாரிக்கொண்டுப் போக விட்டுக் கொடுத்துக் கொண்டிருப்போமானால்; தேவனுடைய வேலையைச் செய்ய முடியாதபடி அவர்களே நமக்கு தடைகற்களாயிருப்பார்கள். நம்முடைய முற்பிதாக்கள் தங்களுடைய அறியாமையினால் தங்களுடைய ஆசீர்வாதங்களை அவர்களுக்கு விட்டுக் கொடுத்ததன் விளைச்சலைப் பார்த்து வருகிறோமே. வட இந்தியப் பகுதிகளில் இயேசுவை அறிவிக்கக்கூடாது என்கிறார்கள். சுவிசேஷக் கூட்டங்களை நடத்தவிடாதபடி தடைகள் செய்கிறார்கள்; நடத்தினால் போய் மிரட்டுகிறார்கள். தேவ ஊழியக்காரர்களுக்கு பாதுகாப்பில்லை. அவர்களுடைய உடமைகளைத் தீ வைத்துக் கொளுத்துகிறார்கள்; ஏன் ஊழியக்காரர்களையும், அவர்களுடைய பிள்ளைகளையும் சேர்த்தே கொளுத்தி விடுகிறார்கள். மதம் மாற்றுத் தடை சட்டம் போடுகிறார்கள். ஞானஸ்நானம் கொடுக்கக்கூட இவங்களிடம் போய் அனுமதி கேட்டுக் கொண்டு நிற்க

வேண்டியதாயிருக்கிறது. சுவிசேஷத்தை உள்ளேயே நுழைய விடாத இரும்புத்திரை நாடுகள் இன்றளவும் இருக்கின்றன. நம்முடைய சுதந்திரத்தை உலகத்தாரின் கையில் விட்டுக் கொடுத்த நம்முடைய அறியாமையின் போக்கினாலேயே, இந்த அநியாயங்களெல்லாம் நடக்கின்றன என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள்.

நம்முடைய பிழைப்பையும் கெடுத்து, வாழ்க்கையையும் கெடுத்து, தேவனுடைய வேலைகளையும் கெடுத்து, உலகத்தையும் கெடுத்துப் போடுகிற இவர்களைக் குறை சொல்லி எதுவும் ஆகப்போவதில்லை. அவர்களின் மனக்கண்களைக் குருடாக்கி; அவர்களை ஆட்டி வைக்கும் சத்துருவைத் (பிசாசு – பேய் – பூதம் – சாத்தான்!) தான் சொல்லணும். நம்முடைய ஆண்டவர் நமக்காகப் படைத்த இந்த அழகான உலகத்தில், அவரைப் பற்றி சொல்ல விடாமல், அவருடைய வேலையைச் செய்ய விடாமல் தடுத்து நிறுத்த இவன் யார்? இயேசுவை அறிவிக்கக்கூடாது என்று தடை சொல்ல அவனுக்கு என்ன தகுதி இருக்கிறது? நேருக்கு நேராக அவன் மூக்கு உடைகிற மாதிரி கேளுங்க சார்! இந்த வைராக்கியம் ஒவ்வொருவருக்கும் வரணும் பிரதர்!

யாரோ எனக்கு பில்லி சூனியம் வைத்து விட்டார்கள்; என் படுக்கையறைக்குள்ளே இரண்டு பேயைப் பார்த்தேன், தகடைப் பார்த்தேன், எலுமிச்சைப் பழத்தைப் பார்த்தேன், கோழி இரத்தத்தைப் பார்த்தேன்... இப்படியே சொல்லிச் சொல்லி எத்தனை நாளுக்குத்தான் சாத்தானுக்கு அனல் மூட்டி உயிர் கொடுத்துக்கொண்டிருப்பீர்கள்?(!). அவனுடையவர்கள் ஜோராக வாழ்ந்து கொண்டிருக்க; நாம் எத்தனை நாளைக்குத்தான் இப்படி ஜீரோவாகவே இருந்து கொண்டிருப்போம்?

## நாம் ஜோராக வாழ்ந்து அவனை ஜீரோவாக்குவோம்!:

***"சகலத்தையும் அவனுக்கு (மனிதனுக்கு) கீழ்ப்படுத்தினார் என்கிற விஷயத்தில், அவர் அவனுக்கு கீழ்ப்படுத்தாத பொருள் ஒன்றுமில்லை; அப்படியிருந்தும், இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம். (எபி. 2:8)"*** பூமியின் மீது பாவமும், சாபமும் ஆட்டம் போட்டுக் கொண்டிருக்கிறது; அவற்றின் கால்களுக்கு கீழ் மனிதன் இருக்கிறான். வியாதியும் தரித்திரமும் தேவனுடைய பிள்ளைகளைப் பின்னி எடுக்கிறது! வெளியே வர பெரிய அளவில் எந்த முயற்சியும் இல்லை. ஏதோ பெயருக்குச் சில முயற்சிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாக...

உலகத் தோற்றத்திற்கு முன்னதாகவே தேவன் நமக்காக ஆயத்தம் பண்ணின ஆசீர்வாதங்களை அவர்கள் வசமாகவே விட்டு வைத்துக் கொண்டிருந்தோமானால் என்ன நடக்கும் என்பதைக் கவனியுங்கள்; ***"... அப்பொழுது அவர்களில் நீங்கள் மீதியாக வைக்கிறவர்கள் உங்கள் கண்களில் முள்ளுகளும் உங்கள் விலாக்களிலே கூர்களுமாயிருந்து, நீங்கள் குடியிருக்கிற தேசத்திலே உங்களை உபத்திரவப்படுத்துவார்கள். எண். 33:55"*** ஏதேனில் துவங்கி இன்று வரை தேவஜனங்கள் தங்களுடைய ஆசீர்வாதத்தின் அருமை தெரியாமல் அவற்றைத் தாரை வார்த்துவிடுவதே, தேவ இராஜ்ஜிய வேலையில் பெரிய முட்டுக்கட்டையாக இருந்து வருகிறது.

தேவனையறியாத உலக ஜனங்கள் நமக்கு எதிரி கிடையாது. அவர்களைத் துரத்தவோ, அழிக்கவோ சொல்லி வேதம் நமக்கு ஆலோசனை கொடுக்கவில்லை. அவர்களுக்கும் சுவிசேஷம் சொல்லி கிறிஸ்துவுக்குள் வரவழைக்கத்தான் ஆலோசனை கொடுக்கிறது. வேத வசனங்களை ஆராய்ந்து பார்க்காமல்; சும்மா தினம் ஒரு அதிகாரம் வாசித்து விட்டு மூடி வைத்துக் கொண்டிருந்தோமானால் ஒரு நாளும் எழும்ப முடியாது; மண்ணோடு மண்ணாக மட்கியே போய்விடுவோம்! தன்னுடைய பிள்ளைகள் பூமியில் ஒரு குறைவுமில்லாமல் வாழ்ந்து; தன்னுடைய திட்டத்தை வெற்றியாக முடிக்க வேண்டுமென்பதற்காக, தேவன் ஏற்படுத்தின சகல நன்மைகளும், ஆசீர்வாதங்களும், ஐசுவரியங்களும் அவர்களுடைய எல்லைகளுக்குள் போய் சேர விடக்கூடாது, குவிய விடக்கூடாது என்று தான் சொல்ல வருகிறோம்.

## கேளுங்கள்... (கேள்வி) கொடுக்கப்படும்... (பதில்)!:

ஏன் அவர்களும் மனிதர்கள் தானே? அவர்களும் நன்றாகத்தானே இருக்க வேண்டும்?

என்பது நியாயமான கேள்வி தான். சரியான பதில் கொடுக்கப்படாத கேள்விகள் மீண்டுமாக முளைத்துக் கொண்டேயிருக்கும். இனிமேல் கேள்விகள் முளைத்தெழும்பாத அளவில் பதில் கொடுக்க தேவன் உதவி செய்வாராக. *Yes,* பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் நன்றாக இருக்க வேண்டுமென்பது தான் தேவனுடைய விருப்பம். அதனால் தான் எல்லோருமே நன்றாக வாழக்கூடிய சாத்தியக்கூறுகளை பூமியில் ஏற்படுத்தி வைத்திருக்கிறார்; எந்தவொரு மனிதனையும் ஆசீர்வதிக்கவே செய்கிறார். *... அவர் தீயோர் மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார். (மத். 5:45)* அதனால்தான் தேவனையறியாத ஜனங்கள் கூட நல்லவர்களாயிருப்பதையும், நன்றாக வாழ்ந்திருப்பதையும் எப்போதும் எங்கும் பார்த்து வருகிறோம். இது எப்படி சாத்தியமாயிருக்கிறதென்று மனதுக்குள் கேள்வியும் கேட்டு; மழுப்பலான பதில்களையும் சொல்லி வருகிறோம்! கேள்விக் கேட்பவர்களுக்கு ஏதாவதொரு பதிலைச் சொல்லிச் சமாளிக்கிறோம்! ஆனால் கேட்கப்படும் கேள்விகளுக்கு மீண்டும் மீண்டும் கேள்விகள் தோன்றாத அளவில்; மிகச் சரியான பதிலைக் கொடுக்கச் சொல்லியே வேதம் நமக்கு ஆலோசனை கொடுக்கிறது.

*அவனவனுக்கு இன்னின்னபடி உத்தரவு சொல்லவேண்டுமென்று நீங்கள் அறியும்படிக்கு, உங்கள் வசனம் எப்பொழுதும் கிருபை பொருந்தினதாயும் உப்பால் சாரமேறினதாயுமிருப்பதாக. கொலோ. 4:6.* என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனிருப்பதாலும், இயேசுவே எனக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமாயிருப்பதாலும், கிறிஸ்துவின் சிந்தை எனக்கு உண்டாயிருப்பதாலும் சரியான பதில் கொடுக்க எனக்கு சாத்தியங்கள் உண்டாயிருக்கின்றன. எந்தவொரு மனிதனும் நல்லவனே; சந்தேகமேயில்லை! தேவன் அவரைப் போலவே அவரிலிருந்து உருவாக்கின மனிதன் எப்படி கெட்டவனாக இருக்க முடியும்? *No chance!* தேவனை அறியாத ஜனங்களும் சுபாவத்தின்படி நல்லவர்கள் தான். தேவனுடைய திட்டத்தில் இல்லாத, தேவனை அறியாத ஜனங்கள் தான் உலகத்தில் பெரிய அளவில் *(majority)* இருக்கிறார்கள்; அவர்களில் அநேகர் மிக மிக நல்லவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அவர்கள் பல நல்ல காரியங்களை செய்து (நன்மையானவைகளை விதைத்து) பூமியின் செழிப்பை வளைத்துப் போட்டுக் கொண்டார்கள் என்பதிலும் எந்த சந்தேகமுமில்லை! செழிப்பைக் கோட்டை விட்ட தேவபிள்ளைகள் இன்றளவும் இதைப் பற்றிய விழிப்புணர்ச்சி *(awareness)* இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்பதும் சந்தேகத்துக்கிடமில்லாதபடி உண்மை!

***"... நியாயப்பிரமாணமில்லாத புறஜாதிகள் சுபாவமாய் நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறபோது, நியாயப்பிரமாணமில்லாத அவர்கள் தங்களுக்குத் தாங்களே நியாயப்பிரமாணமாயிருக்கிறார்கள். அவர்கள் மனச்சாட்சியும்கூட சாட்சியிடுகிறதினாலும், குற்றமுண்டு, குற்றமில்லையென்று அவர்களுடைய சிந்தனைகள் ஒன்றையொன்று தீர்க்கிறதினாலும், நியாயப்பிரமாணத்திற்கேற்ற கிரியை தங்கள் இருதயங்களில் எழுதியிருக்கிறதென்று காண்பிக்கிறார்கள். ரோ. 2:14, 15"*** அவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்களே, அதனால் நன்றாக இருக்கட்டும் என்ற நல்லெண்ணத்துடன் நமக்குள்ள எல்லாவற்றையும் அவர்களிடமே கைநழுவ விட்டுக்கொண்டிருந்தோமானால் தேவனுடைய திட்டம் எப்படி நிறைவேறும்? இதுவரையில் தேவனுடைய ஒரு மிகப் பெரியத் திட்டம் ***project***; அவரைப் பற்றிய சரியான அறிவில்லாத அவருடைய பிள்ளைகளின் கையில் சுக்கு நூறாகிப் போனதற்கான காரணம் இது தான்!

## தேவ பிள்ளைகளிடமிருந்து களவு போன வேத பிரமாணங்கள்!

ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட உலக ஜனங்கள் நன்றாக இருப்பதால் தேவசித்தம் நிறைவேறப் போவதில்லை; நாம் நன்றாக இருந்தால் தான் அவருடைய விருப்பம் நடக்கும், பூமியும் செழித்து ஏதேனாகும். அவர்கள் நல்லவர்களாக இருப்பதால்; நன்மை செய்கிறார்கள். அந்த விதைகள் விழுந்து, முளைக்கிறது ...விளைச்சல் அவர்களிடத்திற்கே திரும்பப் போய்விடுகிறது! இந்த சுழற்சி தொடர்கதையாகிப் போனது; தேவனுடைய பூலோகப் பொறுப்புகளும் ***assignment***ம் தவிடுபொடியாகி தூசி மண்டலமாக பூமியைச் சுற்றி வருகிறது! நல்லவர்களாக + நன்றாக இருக்கும் விஷயத்தில் நாம் உலக ஜனத்தை மேற்கொள்ள *(overcome)* வேண்டும்.

அவர்கள் நல்லவர்களாக + நன்றாக இருக்கும் விஷயத்தில் தங்களுடைய மூளையறிவை, சுயத்தை, புயபலத்தை நம்பியிருப்பதைப் போல் நாம் இருக்காமல் தேவனுடைய ரீதியில் முயற்சிக்க வேண்டும். இயேசுவையே நம் ஞானமாக்கிக் கொண்டு, அவருடன் இணைந்து, அவருடைய வார்த்தைகளைக் கொண்டு செயல்பட வேண்டும்.

பிரச்சனைகளைக் கண்டுபிடித்து அவற்றைச் சரி செய்கிற வேலையில் தான் நாம் இருக்கிறோம். தேவனுடைய ஆசீர்வாதங்களை (செழிப்பை) உதறித் தள்ளியதால் ஏற்பட்ட பேரிழப்புகள்; அதனால் ஏற்பட்ட குறைபாடுகள் ஒன்றல்ல, இரண்டல்ல... உடனே சரி செய்வதற்கு. அதற்கு காலங்கள் ஆகலாம். காலம்... அது ஒரு பிரமாணம். ஓடிக்கொண்டே இருப்பது அதனுடைய இயல்பு. ஓடி விட்ட ஒரு நொடிப்பொழுதைக்கூட திரும்பவுமாக மீட்டெடுப்பதென்பது முடியாத காரியம். அதனால் காலத்தோடு ஒத்திசைந்து ஓடி ஓடி வேலை பார்க்க வேண்டியது மிக அவசியம். மனுக்குலத்தின் வீழ்ச்சிக்கான காரண காரியங்களை ஆராய்ந்து; அவனுடைய எழுச்சிக்கான விதைகளைப் பொறுக்கியெடுத்து; அவற்றை விதைக்க வேண்டிய வேலை நம்முடையது. மனுக்குலத்தின் வெற்றிக்கான விதைகள் வேதத்தில் எங்கும் இறைந்து கிடக்கின்றன. வாக்குத்தத்தமென்னும் உறைகள் ***(covers)*** அவைகளுக்கு போடப்பட்டிருக்கின்றன.

## செழிப்பிற்கான விதைகளைக் கையிலெடுத்து; செழிப்பை நோக்கி பயணிப்போம்!:

ஒரு செழிப்பை ***(prosperity - succeed - flourish - especially financially) (grow in a healthy way) (strong, health, and full of energy)*** நோக்கி பயணிக்கிற நாம் அதற்கான விதைகளை விதைத்தே ஆக வேண்டும்; வேறு வழியில்லை. விதைப்பும் அறுப்பும் மாறாத பிரமாணம். தேவன் அதை பூமியின் மீது நியமித்து விட்டார்; பூமியையும் அதன் நிறைவையும் இந்த விதைப்பும் அறுப்பும் பிரமாணத்தின் மீது தான் ஏற்படுத்தி இருக்கிறார்; மாற்று முறை கிடையாது. தேவனைப் போன்ற மனிதன் தனக்கு என்ன தேவையோ அதைப் பூமியின் மீது விதைத்து, விளைய வைத்து, அறுவடை செய்துகொள்ளும் அதிகாரத்தை தேவனிடமிருந்து பெற்றிருக்கிறான். விதைப்பும் அறுப்பும் பிரமாணம் முழு அளவில் அவனுடைய முயற்சிகளின் மத்தியில் இயங்குகிறது. நமக்கு என்ன வேண்டுமோ அதன் விதைகளில் சிலவற்றைக் கொண்டு போய் விதைக்க வேண்டும்.

பீன்ஸ் வேண்டுமா? சில பீன்ஸ் விதைகளை விதைக்க வேண்டும். பீன்ஸ் வேண்டுமென்று ஆசைப்பட்டால் கிடைக்காது. பீன்ஸ் கிடைக்குமென்று விசுவாசித்தால் மட்டும் கிடைத்து விடாது! சில பீன்ஸ் விதைகளை எடுத்துக் கொண்டு போய் நிலத்தில் ஊன்ற (விதைக்க) வேண்டும். விசுவாசித்தால் மட்டும் போதாது; விசுவாசத்துக்கேற்ற கிரியைகளையும் நடப்பிக்கும் போது; விசுவாசமும் கிரியையும் கைகோர்த்துக் கொள்கிறது. *விசுவாசம் அவனுடைய கிரியைகளோடு கூட முயற்சி செய்து, கிரியைகளினாலே விசுவாசம் பூரணப்பட்டதென்று ... யாக். 2:22* ***(His faith and his actions worked together; his faith was made perfect through his actions).*** விசுவாசம் ஒரு மாபெரிய ஆவிக்குரிய சக்தியாக இருந்தாலும்; கிரியை தான் அதற்கு இயக்க ஆற்றலைக் ***(actuation)*** கொடுக்கிறது. செயல்பாடு ***(Action)*** முக்கியம் என்பதில் முழு நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். பீன்ஸ் கிடைக்குமென்று விசுவாசிக்கிறோம்; நல்லது, அது மிகவும் நல்ல காரியம்! ஆனால் அந்த விசுவாசத்திற்கேற்ற விதைகளைக் (பீன்ஸ் விதைகளை) கொண்டு போய் விதைக்காவிட்டால்; விசுவாசம் வேலை செய்யாதே! பீன்ஸ் விதைக்காத நிலத்தில் பீன்ஸ் விளையாது. விதைக்காத வயல்களில் அறுவடை நடப்பதில்லை. கிரியையில்லாத விசுவாசம் ஆவியில்லாத சரீரத்தைப் போல் செத்துப்போய் படுத்துக் கிடக்கும். செத்துப் போன பிரேதம் எதுவுமே செய்வதில்லை; சீக்கிரமாக அதை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் தான் நடந்து கொண்டிருக்கும்.

இயேசுவை விசுவாசித்த போதிலும் விதைப்பின் பிரமாணம் தெரியாததினால், அதைப் பற்றின வெளிப்பாடு இல்லாததினால், அதை யாரும் போதிக்காததினால்... செழிப்பு கைவிட்டுப் போனது. தேவனையறியாத ஜனங்கள் இந்த விதைப்பும் அறுப்பும் பிரமாணத்தின்படி செயல்பட்டு பூமியைத் தங்களுடைய ஆளுகைக்குள்ளாகக் கொண்டு வந்து விட்டார்கள். இதைத்தான் இயேசு: ***“... ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள்***

*தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள். லூக். 16:8"* என்றார். இப்போது நாம் அவர்களை விட புத்திசாலித்தனமாகச் செயல்பட்டு பூமியின் செழிப்பை நமக்குச் சொந்தமாக்க வேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம். அப்படி பூமியின் செழிப்பை நம் கைக்குள் கொண்டு வந்து விட்டோமானால்; நிச்சயமாகவே பூமி சீரமைக்கப்பட்டு எந்தவொரு குறைவுமில்லாத ஏதேனாகி விடும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

உலகத்தார் செழிப்படைய முயற்சிக்கும் வழிகளை நாம் முயற்சித்தால்... ஒரு வேளை ஓரளவுக்கு வெற்றி வரலாம்; ஆனால் தேவனுடைய திட்டம் நிறைவேறாது. மூளையறிவு, தன்னம்பிக்கை, புய பலம் போன்றவைகளுக்கும் விசுவாசத்திற்கும் சம்பந்தம் கிடையாது. அவர்கள் அப்படித்தான் முயற்சிக்கிறார்கள். நாமோ இயேசுவை நம்முடைய ஞானமாகக் கொண்டு; அவர் மேல் நம்பிக்கை வைத்து, அவரோடு இணைந்து, அவரை முன்னிறுத்தி, அவருடைய கிருபையை நம்பி, அவருடைய பலத்தை நம்பி வேலை பார்க்கிறோம். நமக்கு என்னென்ன தேவையோ எல்லாம் இயேசுவிடமிருந்து வற்றாத ஜீவநதியாக வந்து கொண்டேயிருக்கிறது. ஆனால் உலகத்தார் பூமியைச் சீரமைக்க தாங்கள் எடுக்கும் முயற்சிகளுக்கு தேவையானவற்றை தங்களுக்குள் இருந்தே பெற்றுக் கொள்கிறார்கள். எந்தவொரு மனிதனும் தேவனைப் போலவே உருவாக்கப்பட்டிருப்பதால்; இயற்கையாகவே அவர்களுக்குள்ளும் கொஞ்சம் நீரூற்று இருக்கிறது. அவர்கள் முயற்சி ஓரளவுக்கு சாத்தியமாகிறது. உள்ளே இயேசு இல்லாததினால் தேவையான காரியங்கள் தொடர்ச்சியாக வந்து கொண்டேயிருக்காமல் நின்று போகிறது... நதி வற்றி, நிலம் காய்ந்து போகிறது... பிறகு நதி பாய்ந்த இடங்களில் நிலம் வெடிக்க ஆரம்பிக்கிறது ... காலப்போக்கில் அது பாலைவனமாகிறது... பாலைவன சூறாவளிப் புயல்கள் மணலை வாரி இறைக்க ஆரம்பிக்கின்றன.

## பாலைவனச் சூறாவளிகளை நாம் தான் நிறுத்தியாக வேண்டும்:

பூமியை ஒழுங்குப்படுத்த நாம் தான் முயற்சிகள் எடுக்க வேண்டும். அதற்குத் தேவையான காரியங்கள் எல்லாம் நம்மிடம் தான் இருக்கின்றன. பிதாவாகிய தேவன் சகலத்தையும் உருவாக்க உபயோகித்த கர்த்தர் இயேசுவே நமக்குள் தான் இருக்கிறார். *"கர்த்தர் தமது கிரியைகளுக்கு முன் பூர்வ முதல் என்னைத் (ஞானம்) தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். நீதி. 8:22. ("The Lord created me first of all, the first of his works, long age. I was made in the very beginning, at the first, before the world began.)"* இதில் ஞானம் என்று குறிப்பிடப்படுவது இயேசுவைத்தான் என்பதை 1 கொரி 1:31 ல் பார்க்கிறோம். அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். இயேசு இல்லாதபடி தேவன் எதையும் பூமியின் மீது உருவாக்கவில்லை. இயேசுவே ஞானமாக இருப்பதால்; அந்த ஞானத்தை தேவன் நேர்த்தியாக உபயோகித்து பூமியின் மீது எல்லாவற்றையும் கச்சிதமாக செய்து முடிப்பதை ஆதி. 1 ஆம் அதிகாரத்திலிருந்து பார்த்து வருகிறோம். அப்படிப்பட்ட இயேசு மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருப்பதை கொலோ. 1:27–ல் பாருங்கள். அண்டசராசரத்தையும், வானத்தையும், பூமியையும், அதிலுள்ள எல்லாவற்றையுமே உருவாக்க தேவன் உபயோகித்த ஞானமாகிய இயேசுவே நமக்குள் இருக்கும் போது; நம்மால் முடியாத காரியம் என்று ஒன்று இருக்க முடியுமா? நிச்சயமாக இல்லை. இல்லவே இல்லை.

இந்த இரகசியம் தெரியாத காரணத்தினால் தான் பூமியைச் சீரமைக்க உலகத்தார் எடுக்கும் முயற்சிகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதுமல்லாமல்; குறை சொல்லியும் வருகிறோம். தேவனுடைய ஜனங்கள் செய்ய வேண்டிய வேலைகளையெல்லாம் உலகத்தார் செய்து கொண்டிருப்பதைப் பார்த்து; அதுவெல்லாம் அவர்களுடைய வேலை என்று நினைத்து கொண்டோம். தேவன் தன்னுடைய பிள்ளைகள் அனுபவிப்பதற்காக வைத்திருந்த எல்லா நன்மைகளையும் அவர்கள் வைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து; செழிப்பு அவர்களுக்குரியது என்று தப்பு தப்பாக நினைத்துக் கொண்டோம். அது மட்டுமல்லாமல் தேவனுடைய பிள்ளைகள் செழிப்பாக இருப்பது தவறு என்ற தவறான எண்ணத்தையும் *(image)* கூட மனதுக்குள்ளேயே வளர்த்தும் கொண்டோம். அதையே உபதேசமாக சபைக்குள்ளும் கொண்டு வந்து; சபைக்குள் இருந்த செழிப்பையும் காவு கொடுத்துவிட்டார்கள்.

அரசியல்... அதற்கும் சபைக்கும் சம்பந்தமில்லை; அது உலகத்தாரின் பகுதி என்று ஒதுக்கித்

தள்ளிவிட்டார்கள். காலப்போக்கில் அரசியல், ஒரு கூவம் நதி போலாகி நாற்றம் எடுத்தது. தேவனையறிந்த நாம் காலாகாலத்தில் அரசியலில் குதித்து; ஆட்சியைக் கைப்பற்றியிருந்தால் பாலையும் தேனையும் ஓட வைத்திருக்கலாம். நாம் செய்ய வேண்டிய காரியத்தைத் தேவனற்ற உலக மக்களின் கைகளில் கொடுத்ததால்; இப்போது அங்கே சாக்கடையாறு ஓடுகிறது! ஒரு மிகச் சிறந்த ஊடகமான ***(media)*** திரைப்படத் தொழிலையும் ***(Film Industry - cinema)*** உலகத்தார் கைப்பற்றிக் கொண்டார்கள். ஆரம்பத்தில் சுவிசேஷம் அறிவிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்ட இந்தத் தொழில் நுட்பம் ***(Technology)*** காலப்போக்கில் உலகச் செய்திகளை அறிவிப்பதற்கேதுவாக மாறினது. இக்காலங்களில் பூமியின் மீது நடக்கிற பல்வேறான காரியங்களைத் தொகுத்துத் தருகிறார்கள். இரண்டரை அல்லது மூன்று மணி நேரம் இருக்கையிலிருந்து எழும்பாமல் மனிதர்களை உட்கார வைப்பதற்காக அதற்கு ஒரு கதையுருவம் கொடுக்கப்படுகிறது. நல்லது தான்; ஆனால் அவர்களால் வெறும் ***scan report*** மட்டுமே கொடுக்க முடிகிறது; சிகிச்சை ***(treatment)*** கொடுக்க முடிவதில்லை. பிரச்சனைகளை மட்டுமே காட்டி; அழ வைத்து, சோகத்தை பணமாக்குவதால், பிரச்சனைகளையே பூதாகாரப்படுத்துவதால் என்ன பிரயோஜனம்?

இந்தத் தொழில் நுட்ப ஊடகத்திற்குள் ***(Media technology-ல்)*** தேவனுடைய பிள்ளைகள் நுழைந்தால்... பரிபூரண சுவிசேஷத்தை அதன் வழியாகக் கொண்டு செல்லலாம். நானாக இருந்தால் இந்த விதைகள் புத்தகங்களுக்கு உருவம் கொடுத்திருப்பேன்! இந்தத் தொழில் நுட்ப உலகம் ***(Film Industry)*** நம் கைகளில் இருந்தால் தேவ சாயலான மனிதர்கள், குட்டி குட்டி இயேசுகள், விதைப்பும் அறுப்பும், தேவ பிள்ளையே, நீ யார்? வாருங்கள் கெத்சமேனே! சிலுவையிலறையப்பட்ட இயேசு, மகிமையின் நம்பிக்கை, லீபனோனின் செழிப்பு போன்ற தலைப்புகளில் சினிமாக்கள் எடுத்து ஜமாய்த்திருக்கலாம்! பூமியின் மீது காணப்படுகிற சகல நன்மைகளும், புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளும், நாகரீக முன்னேற்றங்களும் நமக்காகத்தான்! தேவனைப் பற்றியும், அவரைப் போலவேயிருக்கிற நம்மைப் பற்றியும் சரியான அறிவில்லாத காரணத்தினால் அவைகளெல்லாம் நம் கையிலிருந்து வழுக்கி விழுந்தன; அதன் மேலேயே கால் வைத்து நாமும் வழுக்கி விழுந்தோம்!

தங்கம் பறிபோன கதையும் இப்படித்தான். விக்கிரகக் கோவில்களில் தங்கச் சிலைகளையும், தங்கத் தளவாடங்களையும் பார்த்த நம்மவர்கள்; அவைகளெல்லாம் உலகத்தாருக்கு என்று நினைத்து ஒதுக்கி விட்டார்கள். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களில் ஒன்று தான் பொன்! (நவரத்தினங்கள், மாட மாளிகைகள், கோட கோபுரங்கள், அரண்மனைகள், விலையுயர்ந்த பட்டாடைகள், கோடி கோடியாக பணம், தோட்டம் துரவுகள், சொத்து சுகங்கள், நிரம்பி வழியும் களஞ்சியங்கள் இவைகளெல்லாம் கூட நமக்காக வாக்குப் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் தான்!) 14 வருடங்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை யோசேப்பு சேமித்து வைத்ததை ஆதியாகமத்தில் வாசித்துப் பாருங்கள். வாக்குப் பண்ணப்பட்ட காரியங்களை நாம் சுதந்தரிக்காவிட்டால் (நமக்கு சொந்தமாக்கி எடுத்துக் கொள்ளாவிட்டால்) அவைகள் அங்கே தான் போகும்! வேறு வழி கிடையாது! உலகத்தில் இரண்டு விதமான கூட்டத்தார்கள் இருக்கிறார்கள். ஒன்று வாக்குத்தத்தங்களைப் பெற்றுக் கொள்ள தகுதியுடைய தேவனுடைய பிள்ளைகள் (தேவ சபையினர்). இரண்டாவது தேவனையறியாத – சாத்தானுடைய தூதர்களை வழிபடுகிற – விக்கிரக வணக்கக்கூட்டத்தாராகிய – தேவனற்ற – உலக ஜனங்கள்! உலகத்தின் சகல நன்மைகளும் இந்த இரண்டு கூட்டத்தாரின் எல்லைகளுக்குள்ளாகத்தான் இருந்தாக வேண்டும்; அங்கே அல்லது இங்கே! இங்கே! அல்லது அங்கே... தேவ பிள்ளைகள் எல்லாவற்றையும் புறக்கணித்து, உதறித் தள்ளிவிட்டார்கள் ***(missing)*** அவைகள் அங்கே போய்விட்டன!

## அங்கேயிருப்பதை இங்கே கொண்டு வருவோம்!:

இப்படியாக, நமக்கு வாக்குப்பண்ணப்பட்ட நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான நன்மைகள் தேவ ஜனங்களின் அறியாமையின் இருளில் சுவடு தெரியாமல் அந்தப் பக்கம் போய்விட்டன! சகல நன்மைகளையும் அவர்களுடைய வழிகளில், அவர்களுக்குத் தெரிந்த உலக ரீதியிலான முயற்சிகளினடிப்படையில் இழுத்துக் கொண்டார்கள். இப்போது அவைகள் அவர்களின் பாதுகாப்பில் ***(custody)*** இருக்கிறது. ***...பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காகச் சேர்த்து வைக்கப்படும். நீதி. 13:22. (... the wealth of sinners will go to righteous men.) ...***

*பாவஞ்செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்துவிட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்து குவித்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார்; ... பிர. 2:26 (... he makes sinners work, earning an saving, so that what they get can be given to those who please him.)* எப்படியோ நமக்காக தேவன் ஏற்படுத்தின நன்மைகள் எல்லாம்; அவருடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்காக அவர்களுடைய ஆளுகைக்குள் நமக்காக காத்திருக்கின்றன! தேவனுடைய பிள்ளைகள் தாங்கள் யார் என்று அடையாளம் கண்டு கொண்டு; தேவனுடைய இரகசியச் செயல்களைத் தெரிந்து கொண்டு; வாக்குப்பண்ணப்பட்ட செழிப்பை விசுவாசித்து, அவற்றை வாயில் வைத்து அறிக்கையிட்டு, விசுவாசத்திற்கேற்ற முயற்சிகளைச் செய்து; பெற்றுக் கொள்வதற்கேதுவாக வரும் வரையிலும் அவைகள் பொறுமையோடு வழி மேல் விழி வைத்துக் காத்திருக்கின்றன!

சகல நன்மைகளையும் நம்முடைய பாதுகாப்பில் ***(custody)*** கொண்டு வருவது தான் இப்போது நம்முடைய முக்கிய வேலையாக இருக்கிறது. நாம் இந்தப் பூமியின் ஐசுவரியங்களை நமக்குச் சொந்தமாக்கி, செழித்தோங்கி வாழ்ந்திருந்து; நம்முடைய பிள்ளைகளுக்கும் இந்தக் காரியத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும். அவர்களும் சுதந்தரிக்க ***(possess)*** வழியேற்படுத்த வேண்டும். தாவீது தன் மகன் சாலமோனுக்காக விதைத்தது போல (தாவீது விதைத்தது இக்கால மதிப்பின்படி சுமார் 6000 கோடி மதிப்புள்ளது.) வாசித்துப் பாருங்கள் 1 நாளாகமம் 29:3 மற்றும் 1 நாளாகமம் 29:4ஆம் வசனங்களை. *இன்னும் என் தேவனுடைய ஆலயத்தின் மேல் நான் வைத்திருக்கிற வாஞ்சையினால், பரிசுத்த ஆலயத்துக்காக நான் சவதரித்த அனைத்தையும் தவிர, எனக்குச் சொந்தமான பொன்னையும் வெள்ளியையும் என் தேவனுடைய ஆலயத்துக்கென்று கொடுக்கிறேன்.*

*அறைகளின் சுவர்களை மூடுவதற்காகவும், பொன் வேலைக்குப் பொன்னும், வெள்ளி வேலைக்கு வெள்ளியும் உண்டாயிருக்கிறதற்காகவும், கம்மாளர் செய்யும் வேலை அனைத்திற்காகவும், ஓப்பீரின் தங்கமாகிய மூவாயிரம் தாலந்து தங்கத்தையும், சுத்த வெள்ளியாகிய ஏழாயிரம் தாலந்து வெள்ளியையும் கொடுக்கிறேன். ( ஒரு தாலந்து = 34 கிலோ)* நாமும் நம் பிள்ளைகளுக்காக விதைத்து வைக்க வேண்டும். (சங். 25:13). விதைக்கப்பட்ட விதைகள் வளர்ந்து விளைச்சலைக் கொண்டு வரும் வரை வாக்குத்தத்தக் கதவோரங்களில் பொறுமையாக காத்திருக்க வேண்டும்.

தேவனற்ற உலக மக்கள் உலகத்தின் செழிப்பைத் தங்களுக்குத் தெரிந்த உலக வழிகளில் சம்பாதித்து வைத்திருக்கிறார்கள். அவைகளெல்லாம் வேதப்பிரமாணங்களின்படி, நியதிகளின்படி சம்பாதிக்கப்பட்டவைகளல்ல. பல்வேறு அநீதியான வழிகளில் சம்பாதிக்கப்பட்டவைகள் தான் அவை. அவர்கள் நல்லவர்களாக இருந்து நேர்மையாகவே சம்பாதித்தவைகளாக இருந்தாலும் அவைகள் சுத்தமானவைகள் அல்ல. இயேசு இல்லாமல், அவரை முன்னிறுத்தாமல், அவர் மூலமாக பெற்றுக் கொள்ளாமல் இருக்கிற எதுவுமே அநீதியான உலகப் பொருட்கள் தான்! கர்த்தரை நம்பி நன்மை செய்யச் சொல்லித்தான் வேதம் நமக்கு ஆலோசனை தருகிறது. கர்த்தர் இல்லாமல் செய்யும் நன்மையெதுவும் சரியாக வராது. என்னையல்லாமல் உங்களால் எதுவுமே செய்ய முடியாது என்று இயேசு அடித்து சொல்லியும் விட்டார்! அதனால் அவைகளெல்லாம் நம்முடைய விசுவாசம் + விசுவாச அறிக்கை + விசுவாச கிரியைகளுக்கேற்ப; வாக்குத்தத்தங்களின் வழியாக பரிசுத்தமாக்கப்பட்டு நம்மிடம் வந்து சேரும் வரை பொறுமையாயிருப்பது மிக மிக அவசியமாயிருக்கிறது.

பொறுமையிழக்கிறவன் வளரும் முன்னதாகவே செடியைப் பிடுங்கிப் பார்க்கிறான்! அவசரத்தால் தான் செய்த மதியீனமான காரியத்தை நினைத்து மனம் வருந்தி செடியை திரும்ப நட்டாலும்; எதிர்பார்த்திருந்த அளவுக்கு வளராது, பலனையும் தராது, சில வேளைகளில் காய்ந்து போனாலும் போகலாம். அதனால் இந்த விதைப்பும் அறுப்பும் பிரமாணத்தை மிக எச்சரிக்கையுடன் கையாள்வது அவசியம்! (சங். 37:9)

## செழிப்பிற்கான விதைகளைத் தேடுவோம்... பொறுக்குவோம்...

***தேவனை விசுவாசித்து, அவருடைய ஆலோசனைகளினடிப்படையில் செழிப்படைய வேண்டும் என்று பயணிக்கிற நாம்; அவசரப்படாமல், பதறாமல், அமைதலோடு, பணிவோடு***

செயல்பட வேண்டியதாயிருக்கிறது. (meek, gentle, mild, soft) (சங்.37:11) நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; அதனால் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டே தீருவேன் என்ற வைராக்கியம் கண்டிப்பாக வேண்டும். (சங். 37:22). வாழ்ந்து காட்டுவோம்; அதிலும் Number one (in the first place) வாழ்ந்தே தீருவோம் என்று சவாலிட வேண்டும். (சங். 37:29). நாம் தேவனைப் போலிருக்கிறபடியால்; அவரைப் போலவே செயல்பட்டுப் பூமியைச் சொந்தமாக்க வேண்டும். விதைகளை விதைக்கும் தேவன் எந்த ஒரு இடத்திலும் அவசரப்படவில்லை என்பதை அறிந்து கொள்ளுவோம். விதை வளர்ந்து, விளைந்து தன் பலனைத் தர காலப்பிரமாணம் உதவி செய்கிறது. விதைப்புக்கும் அறுப்புக்கும் இடையே உள்ள காலகட்டம் மிகவும் முக்கியமானது. நம்முடைய விசுவாசம் & விசுவாச அறிக்கை & விசுவாசத்துக்கேற்ற முயற்சிகள் எல்லாம் இந்தக் காலக்கட்டத்தில் தான் பரீட்சிக்கப்படுகிறது.

தேர்வு (examination) எழுதிக்கொண்டிருக்கும் நன்கு படிக்காத ஒரு மாணவனின் செயல்பாடு (reaction ஐ) பார்க்க முடிகிறது! இருதயத் துடிப்பு சீராக இருக்காது, இரத்த அழுத்தம் அதிகமாகும், உள்ளே பயம், வெளியே பதட்டம், கைகளில் நடுக்கம்... இன்னும் என்னவெல்லாமோ சேர்ந்து... ஒரு வழியாகி வெளியே வருவான். இந்தக் காலகட்டத்தில் இரண்டு காரியங்கள் நடக்கிறது. 1. விசுவாசம் அடிவாங்குகிறது; அந்த அடி அறிக்கையின் மீதும், விசுவாசக் கிரியைகளின் மீதும் நடக்கிறது. 2. விசுவாசம் அதிகமாகிறது, தொடர்ச்சியாக வெற்றியின் அறிக்கை, அதற்கேற்ற நடவடிக்கைகள்! இதில் இரண்டாவது காரியம் வாய்க்க கர்த்தர் நமக்கு உதவி செய்கிறார் என்பதை சங். 37:34ல் பார்க்கிறோம்.

தேவனுடைய திட்டத்தைப் பூமியில் நிறைவேற்றுவதற்காக; செழிப்பை நோக்கி பயணிக்கிற நாம்; அதற்கேற்ற விதைகளை விதைத்துத்தான் ஆகவேண்டும். மந்திரத்தால் மாங்காய் காய்க்காது; தேவன் நம் கண்ணைக் கட்டி வித்தை நடத்துகிறவரல்ல; கண்களுக்குப் பிரகாசம் கொடுத்து; விதை விதைத்து மாங்காயை அறுவடை செய்யும் வழிமுறைகளைச் சொல்லித் தருகிறவர்!

## சோகக்கதைகளைத் தீ வைத்துக் கொளுத்துவோம்!:

தனக்குக் கொடுக்கப்பட்ட சுயாதீனத்தை முதல் மனிதன் தவறாக பயன்படுத்திய போது பூமிக்கு நடந்த சோகக் கதையை சங். 102: 25, 26 ல் பார்க்கிறோம். ***நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; ... அவைகள் அழிந்துபோம், (disappear, vanish, fade, evaporate, go, dissolve, melt, wane, withdraw, ebb, depart, flee, recede, dematerialize, dissipate) ... அவைகளெல்லாம் வஸ்திரம் போல் பழமையாய்ப் போம்; (exhaust, fatigue, sap, drain, fray, deplete, trash) ... சங். 102: 25, 26.***

திடீரென்று பூமியின் மீது எதிர்பார்க்காத என்னவெல்லாமோ நடக்கின்றன. பூமியிலுள்ள சகல காரியங்களும் நாளடைவில் மகிமையிழந்து ஒளிமங்கிப் போய்க்கொண்டேயிருக்கின்றன; முடிவில் காணாமலும் போய்விடுகின்றன. சாபத்தால் புதையுண்டு போன காரியங்களைக் கண்டுபிடிக்க முடியாமலும் போகின்றன. சகல காரியங்களிலும் ஏதாவதொரு குறைவு காணப்படுகிறது; பூரணமானது எதுவுமில்லை. தேவன் படைத்திருந்த காரியங்கள் ஒவ்வொன்றும் மறுசுழற்சி காரணமாக மாற்றத்திற்குள்ளாகி தேய்பிறையாகிப் போகின்றன; கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிப் போன கதையாய்! சாவு, அழிவு என்பது தொடர்கதையாகிப் போனது. மனிதன் தன்னையுணராமல், தன் பொறுப்பை உணராமல், கடமையிலிருந்து நழுவி ஓடிப்போவதிலேயே குறியாக இருக்கிறான்; தேவனின் திட்டத்திலிருந்து பின்வாங்கிப் போகிறான்; வாழ்வே மாயம் என்று சாக்குப் போக்குச் சொல்லுகிறான்.

மனிதன் ஏதேனை விட்டு வெளியேறிய நாள் முதற்கொண்டு சாபத்தில் உழல்கிறான், சாபத்தோடு சுழல்கிறான். இயற்கையோடு (பூமியின் மீதிருக்கும் காரியங்கள்) மல்லுக்கட்டி வாழ்க்கை நடத்துகிறான். இயற்கை மனிதனுக்குச் சாதகமாக இல்லாததினால்; அதைத் தாக்கி, அழித்து, மறுசுழற்சிக்குள்ளாக்கி, தன்னுடைய ஞானத்தால் புதிய புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தொடர்ச்சியாகக் கண்டுபிடித்து சாதனைகள் படைத்து வருகிறான். பூமியும் கசக்கிப் பிழியப்படுகிறது; சகித்துக் கொள்ள முடியாத பூமி மனிதனை எதிர்த்துத் தாக்குதல் நடத்துகிறது! (இதைத்தான் இயற்கை சீற்றங்கள் என்றழைக்கிறோம் – ***natural disaster - e.g. earthquake, tsunami)*** கர்ப்பவேதனையோடு அழும் இயற்கையின் ஊமையழுகை யாருக்கும்

கேட்கவில்லை!

நிறையத் திட்டங்கள் போடுகிறான், விடாமுயற்சிகள் செய்கிறான், கடுமையாக உழைத்து வாழ்க்கையில் நிறைய மாற்றங்களைக் கொண்டு வருகிறான். நினைத்ததை நடத்தி முடிக்கிறான், முடிவில் வெற்றிக் கொடி நாட்டுகிறான். இதுவெல்லாம் மிக மிக நல்ல காரியங்கள் தான். இதையெல்லாம் மனிதன் செய்யாமலிருந்திருந்தானானால் இதற்குள்ளே வாழ வழியில்லாமல் மனுக்குலமே அழிந்து இல்லாமல் போயிருக்கும்; நீங்களும் நானும் இருந்திருக்க மாட்டோம். அதனால் நிச்சயமாக மனிதனின் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியதே. என்றாலும் இவையெல்லாவற்றிற்கும் பின்னணியில் ஒரு கண்ணுக்குத் தெரியாத சோகம் இழையோடுவதையும் பார்க்க முடிகிறது. பூமியும் அதன் நிறைவும் கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கப்பட்டு வருகிறது என்பதே அந்த சோகக் கதை (இல்லையில்லை சோக நிஜம்!)

**தேவனற்ற உலக ஜனங்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்ள நாம் இடம் கொடுத்ததினால்; அறியாமையால் நமக்குள்ள எல்லாவற்றையும் அவர்களிடம் தாரை வார்த்ததினால்; பூமியின் கதை சோகக்கதையெழுதும் எழுத்தாளர்களின் கைகளில் போய் சிக்கிக் கொண்டது. இப்படிப்பட்ட கதைகளுக்கு முதலில் தடையுத்தரவு போட வேண்டும். இந்தச் சோகக்கதையை மாற்றி சந்தோஷக்கதையாக எழுதும் வேலையைத்தான் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார்.** இது தான் தேவனுடைய திட்டம்; இதை முடிக்கும் வேலையை நம்முடைய பொறுப்பில் விட்டிருக்கிறார். ஆரம்பத்தில் இருந்ததைப் போன்ற எந்த வித குறைவுமில்லாத பூமியை உருவாக்குவதே தேவனுடைய திட்டம். இன்னும் விவரமாகச் சொல்லப்போனால் ஆரம்பத்திலிருந்ததைவிட மிகச் சிறப்பாக மாற்றும் திட்டம். ஒரு குறிப்பிட்ட இடத்தில் தான் ஏதேன் இருந்தது; நாமோ பூமி முழுவதையுமே ஏதேனாக்க வேண்டும். அன்று விழுந்த சாத்தான் பூமியில் நடமாடிக்கொண்டிருந்தான்; நாம் உருவாக்கப்போவதோ சாத்தானே இல்லாத பூமி!

## இயேசு + நாம்!:

பூமியைக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்து; அதைப் பண்படுத்திக் காத்துக் கொண்டு; தங்களின் பலனால் பூமியை நிரப்பும் வேலையை மனிதனிடம் ஒப்படைத்தார் தேவன். இதையெல்லாம் செய்யவேண்டுமானால் முதலில் பூமியை நமக்குச் சொந்தமாக்க வேண்டும். இந்தப் பூமி இப்போது தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற முடியாத உலகத்தாரிடம் சிக்கிக்கொண்டு முழிக்கிறது. அவர்களும் பூமியைக் கீழ்ப்படுத்த முயற்சிக்கிறார்கள் தான்; என்றாலும் அது இயேசு இல்லாத முயற்சிகள் என்பதால் அவர்களால் முடியாமல் போகிறது. *"... என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது (you can do nothing without me) என்று அவர் சொல்லியிருக்கிறாரே! (யோவா.15:5)"* அப்படியானால் இயேசு இல்லாமல் இந்தப் பூமியை கீழ்ப்படுத்தவும் முடியாது, ஆளுகை செய்யவும் முடியாது, பண்படுத்தவும் முடியாது, காத்துக் கொள்ளவும் முடியாது, தன் பெலனால் பூமியை நிரப்பவும் முடியாது என்று பார்க்கிறோம். மட்டுமல்ல இந்தப் பூமியை நாம் நமக்கு சொந்தமாக்க வேண்டுமானாலும்; அது இயேசுவின் உதவியால்; அவருடன் சேர்ந்து முயற்சித்தால் தான் நடக்கும்.

## உலகம் பிறந்தது நமக்காக!:

உலகம் பிறந்தது எனக்காக, ஓடும் நதிகளும் எனக்காக, மலர்கள் மலர்வது எனக்காக... என்று; நமக்குரியதையெல்லாம் திருடிக்கொண்டு போனவர்கள் பாடின பாட்டு இன்றும் என் காதில் தொனிக்கிறது! உலகமும் அதிலுள்ள எல்லாமும் நமக்காகத்தான் என்ற இரகசியம் நம் மக்கு மண்டையில் ஏற இத்தனை காலம் பிடித்தது!

***...உலகத்தைச் சுதந்தரிப்பான் என்கிற வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்காவது அவன் சந்ததிக்காவது (நமக்காக) நியாயப்பிரமாணத்தினால் கிடையாமல் விசுவாசத்தினால் வருகிற நீதியினால் கிடைத்தது. (ரோம. 4:13)*** ஆபிரகாமின் விசுவாச சந்ததியினரான நமக்கு (புதிய உடன்படிக்கையின் பிள்ளைகளாகிய நமக்கு) இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. வாக்குத்தத்தங்களை புதிய விசுவாச பிரமாணத்தின்படிதான் பெற்றுக் கொள்ள முடியும். ஏனென்றால் வாக்குப்பண்ணப்பட்டவைகளை நாம் பெற்றுக் கொள்ள வேண்டுமானால்; அதற்கு

முதலாவது தேவை விசுவாசம் தான்! நியாயப்பிரமாணத்தை விசுவாசத்தினால் இயக்க ***(actuate)*** முடியாது. அதனால் வாக்குத்தத்தங்களை நியாயப்பிரமாணத்தின் மூலம் சுதந்தரிக்கவும் முடியாது. அதனால் தான் இந்த வாக்குத்தத்தத்தை ஆபிரகாமுக்கு விசுவாசத்தினால் வரும் புதிய நீதியின் பிரமாணத்தின்படி கொடுத்தார். ஆபிரகாமின் விசுவாச வம்சாவழியினராகிய நமக்கும் அது வந்து சேர்ந்தது. இக்காலங்களில் அது நிறைவேறுதலுக்குள்ளாகியும் வருகிறது. அந்த வம்ச வழியில் வந்த நீங்களும் நாங்களும் பாக்கியசாலிகள்!

பூமியும் அதன் நிறைவிலுள்ள சகல ஆசீர்வாதங்களும் நமக்குத் தான் சொந்தம். அதாவது பூமியின் செழிப்பு நமக்குச் சொந்தமானது. அதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால்; அதைப் பற்றின அறிவு அவசியம். அறிந்து கொள்ள வேண்டுமானால்; செழிப்பைப் பற்றின பிரசங்கங்கள் அவசியம். எதைப் பிரசங்கிக்கிறோமோ அதைத்தான் சபைக்குள் அனுப்புகிறோம். தேவ சபையிலுள்ளவர்களும் எதைக் கேட்கிறார்களோ; அதை எடுத்தும் கொள்கிறார்கள். தரித்திரப் பிரசங்கங்களைக் கேட்டுக் கேட்டு அதையே எடுத்துக் கொண்டார்கள். தரித்திரத்தை விசுவாசித்தார்கள், அதையே பேசினார்கள், அதை நோக்கியே பயணித்தார்கள், முடிவில் அதுவே வந்து சேர்ந்தது.

## புரட்சிகரமான பிரசங்கங்கள் செய்வோம்; புதியதோர் உலகம் செய்வோம்!:

இப்போது வேறு மாதிரியாக பிரசங்கம் பண்ண ஆரம்பித்திருப்பது சபை வரலாற்றின் மிக முக்கியமான திருப்பு முனையாகும். தேவபிள்ளைகள் சகல ஆசீர்வாதங்களையும் பெற்று; செழிப்படைந்து, அதை விதைத்து, அதன் பலனால் பூமியை நிரப்ப வேண்டுமானால்; ஆசீர்வாதங்களைக் குறித்த பிரசங்கங்கள் அவசியம். அதாவது செழிப்பைப் பிரசங்கிப்பது மிக அவசியம். அதைப் பிரசங்கிக்க வேண்டுமானால் அதைப் பற்றின வெளிப்பாடுள்ளவர்களால் தான் முடியும். இந்தக் காலத்தில் தேவன் இப்படிப்பட்ட செழிப்பின் வெளிப்பாட்டைப் பெற்றவர்களை எழுப்பிக் கொண்டிருக்கிறார். பிரசங்கத்தை கேட்பவர்களின் இருதயத்தில் ஞான எழுப்புதல் உண்டாகிறது. (எழுப்புதல் பற்றி நிறைய பிரசங்கங்கள் கேட்டிருக்கிறோம். ஆனால் தலையும் புரிந்திருக்காது, வாலும் புரிந்திருக்காது. ஆனால் உண்மையில் எது எழுப்புதல் என்ற உண்மை இப்போது விளங்க ஆரம்பித்திருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன்.)

**செழிப்பின் பிரசங்கங்கள் என்று முத்திரைக் குத்தப்பட்டு புறக்கணிக்கப்பட்ட இந்த பிரசங்கங்களே இக்கால தேவ இராஜ்ஜியக் கட்டுமான வேலையின் மூலைக்குத் தலைகல்லாயிற்று!** இயேசுவின் மூலமாக நமக்கு கொடுக்கப்பட்ட ஆபிரகாமின் ஆசீர்வாதங்களை (செழிப்பை – அதாவது சகல விதமான நன்மையான காரியங்களை) புறக்கணிப்பவர்கள்; இயேசுவையே புறக்கணிப்பதாகத்தானே அர்த்தம் ஆகிறது? இந்தப் பூமியைக் கீழ்ப்படுத்த, ஆளுகை செய்ய, பண்படுத்த, காத்துக் கொள்ள என்னென்ன தேவையோ அதுவெல்லாம் வாக்குத்தத்தமாக ஆபிரகாமின் ஆசீர்வாதத்திற்குள்ளாகத்தான் இருக்கிறது. அவற்றையெல்லாம் புறக்கணிப்பவர்கள் சுவிசேஷ ஊழியம் செய்யவே லாயக்கில்லாதவர்களாகி விடுகிறார்கள். **பூமியின் மீது தேவன் நமக்காக படைத்த சகல விதமான நன்மைகளையும் வேண்டாம் என்று ஒதுக்கித் தள்ளுபவர்கள்; இந்தப் பூமியின் மீது எதற்காக ஊழியம் செய்கிறார்கள்? இவர்களுடைய ஊழியத்தின் நோக்கம் *(motive)* என்ன? யோசித்துப் பாருங்கள்!** இந்தப் பூமி இப்போது இருப்பதைவிட இன்னும் மோசமாக, உருப்படாமல் போக வேண்டும் என்பது தானே இவர்களுடைய நோக்கமாக இருக்க முடியும்?(!)

பூமியின் செழிப்பை உதறி விட்டு; ஆனால் பூமியின் மீதே நடந்து கொண்டு(!) அந்தரத்தில் மிதந்து கொண்டு ... (சந்திரனில் மனிதன் நடப்பதைப் போல ... !) ஊழியம் செய்வதால்; பூமி கீழ்ப்படிய மறுக்கிறது; தலைமேல் ஏறி ஆட்டம் போடுகிறது. பூமியின் சாபம் மனிதனை ஆட்டிப்படைக்கிறது. பண்படுத்துவதற்கு முன்னதாகவே முள்ளையும் குருக்கையும் விளைவிக்கிறது; மனிதனுக்குச் சாதகமாக இல்லை! முதல் மனிதன் பூமியை சாபத்துக்குள் தள்ளிய நாள் முதற்கொண்டு; அதற்குப் பாதுகாப்பு இல்லை. மனிதனே மனிதனுக்கு எதிராக எழும்பும் அதிசயங்களால் பூமி நிறைந்திருக்கிறது! தேவனைப் போலவே படைக்கப்பட்ட ஒரு ஆவி (மனிதன் என்பவன் ஒரு ஆவி தான்!) தன்னைப் போலவேயிருக்கும் இன்னொரு ஆவிக்கு விரோதமாக எழும்பும் ஒரு காரியம் மிகவும் அதிர்ச்சி தரக்கூடிய, ஆச்சரியமான, மிகவும் வேதனைக்குரிய காரியமாகும்.

## ஞான எழுப்புதல் தேவை!:

**செழிப்பைப் பற்றிய ஒரு ஆவிக்குரிய விழிப்புணர்வை *(spiritual awareness)* சபை இக்காலங்களில் பெற்றுக்கொண்டு வருவதையே எழுப்புதல் என்கிறோம்!** *"...கர்த்தரால் ஞானமடைந்து அந்த வேலைகளைச் செய்ய வரும்படி தங்கள் இருதயத்தில் எழுப்புதலடைந்த ஞான இருதயத்தாராகிய எல்லாரையும் **(skilled men)**, மோசே வரவழைத்தான். யாத். 36:2."* எல்லோரும் தினமும் அதிகாலையிலேயே தங்களிடத்தில் உள்ள சிறப்பான காரியங்களைக் கொண்டு வருகிறார்கள். ஆலயம் கட்டுவதற்குத் தேவையான அளவுக்கு காணிக்கை வந்த பிறகும்; ஜனங்கள் கொண்டு வருவதை நிறுத்தவில்லை! அளவுக்கதிகமாக காணிக்கை வருகிறது என்று மோசேயிடம் முறையீடு ***(complaint)*** செய்து; ஜனங்கள் காணிக்கை கொண்டு வருவதை நிறுத்த வேண்டியதாயிருந்தது! இதைத்தான் எழுப்புதல் என்கிறோம்! பழைய உடன்படிக்கையை அடித்தளமாக ***(basement)*** ஆகக் கொண்டு செய்யப்பட்ட; கைகளால் கட்டப்பட்ட ஒரு தேவாலய வேலையில் மக்களுக்கு இந்த அளவுக்கான தரிசனம் ***(faculty - vision)*** இருந்திருக்குமானால்; ... புதிய உடன்படிக்கையை விதையாகக் ***(core)*** கொண்டு; கைவேலையில்லாத ஆவி ரீதியிலான தேவாலய வேலையைச் செய்கிற நம்முடைய செயல்பாடுகள் ***(tendency)*** எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதைச் சற்று யோசித்துப் பார்ப்போம்!

அவர்கள் செய்தது; இக்காலத்தில் நாம் செய்து வருகிற தேவ இராஜ்ஜிய கட்டட வேலையின் அறிமுக வேலை தான் ***(introduction)!*** **(6,00,00,000,00,00,000,00,00,000) ஆறு கோடி, கோடி, கோடி டன் எடையுள்ள இந்தப் பிரமாண்டமான பூமியைக் குறித்த தேவனுடைய திட்டத்தை நம்மிடம் பகிர்ந்து கொடுத்து *(assign - allocate)* நம்முடன் சேர்ந்து வேலை செய்கிறார் என்றால்; நம்முடைய வேலை *(task - role)* எவ்வளவு பிரமாண்டமானது என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.** நாம் யார்? எந்த அளவுக்குத் தேவனுக்கு முக்கியமானவர்கள்? எந்த அளவுக்கு அவர் நம்மை உபயோகிக்கிறார்? போன்ற கேள்விகளுக்குப் பதிலைத் தெரிந்துகொள்வது; நம்முடைய வேலையை இன்னும் அதிகமாக உற்சாகப்படுத்தும் ***(motivate).*** தேவனைப் பற்றின அதிகப்படியான அறிவு நம்மை உற்சாகமாக வேலை பார்க்கத் தூண்டும் ஊக்க மருந்தாக இருக்கும் ***(stimulate).*** நம்முடைய ஊழியமும் உயிரோட்டமுள்ளதாக ***(animation - excitement - thrilling)*** இருக்கும்.

தேவனுடைய இராஜ்ஜியத்தின் வேலைகளை இந்தப் பூமியில் நிறைவேற்ற ஞானம் அவசியம் என்று பார்க்கிறோம். இயேசுவே ஞானமாக இந்தப் புதிய உடன்படிக்கையின் பிள்ளைகளாகிய நமக்குள் எழுந்தருளியிருப்பது; தேவ திட்டம் சிறப்பாக நடக்க மிகவும் முக்கியமான ஒரு காரியம். சரி, இப்போது ஒரு வசனத்தின் மூலம் நம் தேவன் இயேசுவை அறிந்து கொள்ள முன்னேறுவோம். *அவரே (இயேசுவே) தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார். 1 கொரி. 1:31.* ஞானமில்லாவிட்டால் ஞானத்தைக் கேட்டு தேவனிடம் ஜெபிக்க வேண்டும் என்று வீட்டில் அம்மா சொல்லிக் கொடுத்திருப்பார்கள். கர்த்தருக்கு பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம் என்று ஞாயிறு வேதாகமப் பள்ளியில் சொல்லிக் கொடுத்தார்கள். தேவன் எனக்குத் தந்த ஞானத்தினால் நான் இதைச் செய்தேன், அதைச் செய்தேன் என்று உற்சாகமாக பிரசங்க நேரத்தில் சாட்சி கொடுத்ததுமுண்டு. இவையெல்லாம் மிக மிக நல்லது தான்; நம்முடைய ஆவிக்குரிய முன்னேற்றத்திற்கு இதுவெல்லாம் மிகவும் பிரயோஜனமாக இருந்தது என்பதும் மறுக்க முடியாதது தான். ஆனால் இயேசுவே... நமக்கு ஞானமானார் என்பது இவையெல்லாவற்றையும் விட மிகவும் வல்லமையுள்ள செய்தியாகும். ***(...God had made Christ to be our wisdom)*** உலகத்தாரும் தங்களுக்குள் இருக்கிற ஞானத்தினால் தான்; தங்களுக்குத் தெரிந்த அளவில் இந்தப் பூமியைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்து வருகிறார்கள். தங்களுக்குத் தெரிந்த உலக வழிகளில்; பெருமளவில் குறுக்கு வழிகளில், தவறான வழிகளில் இந்தப் பூமியை சுதந்தரித்து, ஆக்கிரமித்து, பட்டா போட்டு, வீடு கட்டி வருகிறார்கள்! சிறுபான்மையான கூட்டத்தார் தவறான வழிகளில் போகாவிட்டாலும்; அவர்களுக்குள் இயேசு ஞானமாக வெளிப்படாததினால்; தேவ திட்டத்திற்கு வெளியிலேயே நிற்கிறார்கள்.

தேவனுடைய திட்டத்திற்குள் இருக்கிற நாம் தான் இப்போது பொறுப்பாளிகளாக இருக்கிறோம். தேவனைப் பற்றியும், அவருடைய திட்டத்தைப் பற்றின வெளிப்பாடுகளைப் பெற்ற; அதை இந்தப் பூமியில் நிறைவேற்றி முடிக்க வேண்டிய அவசர நிலையில் இருக்கிறோம்.

பூமியை சுதந்தரிப்பாய் என்று ஆபிரகாமின் விசுவாச சந்ததியாருக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் நிறைவேறுதலுக்குள்ளாகும் காலகட்டத்துக்குள்ளாக வந்துவிட்டோம். அதனால் இயேசுவிடம் ஞானத்தை கேட்டு வாங்கியல்ல, அவருடைய ஞானத்தை உபயோகித்து அல்ல, அவரையே ஞானமாக்கிச் செயல்படுவோம். *...இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; ... கலா. 2: 20* என்று சொல்லுவோம். அதனால் இனி என்னுடைய ஞானமல்ல, கிறிஸ்துவே ஞானமாக எனக்குள்ளிருந்து செயல்படுகிறார் என்று சொல்லுவோம்!

## பசி தாகம்!:

***"இயேசு அவர்களை நோக்கி: நான் என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்து (the will of God) அவருடைய கிரியையை முடிப்பதே (... finish the work he gave me to do) என்னுடைய போஜனமாயிருக்கிறது. யோவா. 4:34"*** என்று சொல்வதைப் பார்க்கிறோம். பிதாவாகிய தேவனுடைய திட்டத்தை (சித்தத்தை – மனதின் விருப்பத்தை – அவருடைய நோக்கத்தை) நிறைவேற்றுவதே தன்னுடைய உணவு ***(food - nutritious substance)*** என்று சொல்லும் அளவுக்கு அதை முக்கியப்படுத்துவதைப் பார்க்கிறோம். உணவில்லாவிட்டால் உயிரில்லை; உயிரில்லாவிட்டால் மனிதனே இல்லை. ஆவி மனிதன் குடியிருக்கிற இந்த பூமிக்குரிய கூடாரமாகிய சரீரம் உயிரோடு இருக்கத் தேவையான காரியங்களை; ***(protein, minerals, vitamins, and so on.)*** தான் சாப்பிடுகிற உணவிலிருந்து தான் எடுத்துக் கொள்கிறது. சரீரத்திற்குள் குடியிருக்கிற ஆவி மனிதன் ***(inner man)*** தான் உயிரோடிருக்கத் தேவையான காரியங்களை தேவனுடைய வார்த்தைகளிலிருந்து எடுத்துக் கொள்கிறான். இப்படியாக மனிதன் இந்தப் பூமியின் மீது நடமாடி வாழ்கிறான். நம்மைக் குறித்த தேவனுடைய திட்டங்களுக்கு இந்த அளவில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று தேவன் நம்மில் எதிர்பார்க்கிறார். இயேசு எந்த அளவுக்கு அதை முக்கியப்படுத்தினாரோ; அதே அளவில் அவரைப் போலிருக்கிற நாம், அவருடைய நாமம் தரிப்பிக்கப்பட்டிருக்கிற நாம் அதை முக்கியத்துவப்படுத்த வேண்டும்.

**இந்த உலகத்தை சொந்தமாக்குவதில் எப்போதும் பசி தாகத்துடன் இருக்க வேண்டும். நம்முடைய சிந்தனையோட்டத்தில் எப்போதும் இதைக்குறித்ததான காரியங்களையே மிதக்க விட வேண்டும் *(floating)*. சூழ்நிலைக் கடல்களைப் பார்த்ததும் நம்முடைய தரிசனக் கனவுகள் மூழ்கிப் போய்விடாதபடி; அந்தத் தரிசனங்களுக்கு விசுவாச நீச்சலைக் கற்றுக் கொடுக்க வேண்டும்!** இந்தப் பூமியிலுள்ள சகல விதமான நன்மைகளையும் நம்முடைய எல்லைகளுக்குள்ளாகக் கொண்டு வந்து இறக்குமதி செய்வதில் ஒரு வியாபாரக் கப்பலின் வேகம் வேண்டும்! ஆனால் அதற்கு வேதம் சொல்லும் அணுகு முறைகளையே ***(Biblical methods)*** பயன்படுத்த வேண்டும். ஏதேனின் செழிப்பை அடைய, ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் இருக்கும் பெட்டியைத் ***(suitcase)*** திறக்க, சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் ஆசீர்வாதங்களை பதிவிறக்கம் ***(download)*** செய்ய வேதமே நமக்கு வழிகாட்டுகிற கையேடாகும் ***(manual)***! பூமியின் மீது காணப்படுகிற சகல காரியங்களைப் பற்றின தகவல்களும் ***(informations)***; அவற்றையெல்லாம் கையாளக்கூடிய ஆலோசனைக் குறிப்புகளும் ***(instructions)*** அதில் நிறைந்துள்ளன.

## *Bible (manual)*!:

புதிதாக கார் வாங்கும் ஒருவன்; அதற்கான இயக்கும் விபரங்களை ***(manual)*** திறந்து கூடப் பார்க்காமல் கார் ஓட்டினால்... ? ஒன்றும் ஆகாது; டிரைவர் தானே காரை ஓட்டுகிறார் என்று சமாளிக்கலாம். உண்மை தான்; ஓரளவுக்கு சமாளித்து நாட்களையும், காரையும் ஓட்டலாம். ஆனால் என்றாவது ஒரு நாள் மரத்தின் மீது மோதி கேள்விக்குறிகளோடு கார் நிற்கும் போது... காருக்கும் அடி, உள்ளேயிருக்கிற ஆளுக்கும் அடி! வாழ்க்கையும் அப்படித்தான். நம்முடைய வாழ்க்கைக்கான கையேடை அலமாரியில் புத்தகங்களோடு புத்தகமாக அடுக்கி வைத்து விட்டு; வாழ்க்கையை ஓட்டினால்... ஆரம்பத்தில் எல்லாம் நன்றாகத்தான் இருக்கிறது, சந்தோஷமாக நாட்கள் நகருவதைப் போலத்தான் தெரிகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் எங்கோ, ஏதோ ஒன்று அடிவாங்குகிறது! அடி விழுந்த இடத்தில் விரிசல் உண்டாகிறது, இரண்டாகப் பிளக்கிறது. ஏதேதோ பசையை கொண்டு வந்து ஒட்ட வைக்கிறோம்; ஒட்டிக் கொண்டது தான், என்றாலும் முன்னிருந்தது போல் இல்லை. திரும்பவுமாக ஏதாவதொரு பிரச்சனையின் மீது

மோதி நிற்கும் போது; ஒட்டிய இடத்திலிருந்து இரண்டாகப் பிளந்து போகிறது; கடைசியில் ஒன்றுக்கும் உதவாமலும் போய்விடுகிறது.

வேதம் இல்லாமல் நாம் பூமியைச் சுதந்தரிக்கவும் முடியாது; அதன் மீது தேவனுடைய திட்டத்தை நிலை நிறுத்தவும் முடியாது என்பதைத் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும். வேதத்தை ஆராய்கிற மனிதன் எப்படி இருப்பான் என்பதை சங். 1:3 ல் பார்க்கலாம். *"They are like trees that grow beside a stream, that bear fruit at the right time, and whose leaves do not dry up. They succeed in everything they do. (Good News Bible)"* வேத வாசிப்பு – தியானம் – ஆராய்ச்சி போன்ற காரியங்கள்; ஒரு மனிதனை, தேவ திட்டத்திற்கு ஏற்றவனாக மாற்றுகிறது. எந்தப் பொருளானாலும் சரி; அதைத் தயாரிப்பவர்கள் அதற்கான இயக்க குறிப்புகளை ***(manual*** ஐ) அச்சிட்டு, கூடவே கொடுப்பதற்கு மறப்பதில்லை. அப்படியிருக்க, நம்முடைய கற்பனா சக்திக்கு எட்டாத, அளவிட முடியாத விண்வெளியையும், பூமியையும், அதிலுள்ள யாவற்றையும் உருவாக்கிய தேவன்; மனிதனின் வாழ்க்கைக்குத் தேவையான இயக்க குறிப்புகளைக் ***(manual)*** கொடுக்காமல் எப்படி வாழச் சொல்லுவார்?

இயக்க குறிப்புகளை ***(Manual*** ஐ) எடுத்துப் படித்துப் பார்க்காமல்; தேவனைக் குறை சொல்லுவதால் யாருக்கென்ன லாபம்? *"என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக் கொடுத்தேன்; அவைகளை அந்நிய காரியமாக எண்ணினார்கள். ஓசியா 8:12"* உண்மை தான்; இயக்க குறிப்புகள் ***(manual)*** இருந்தும்; அப்படி ஒன்று இருக்கிறது என்ற விவரம் கூட தெரியாமல், அதைத் திறந்து கூடப் பார்க்காமல், வாசிக்காமல், வாழ்க்கையின் ***steering*** ஐப் பிடித்து வண்டியை ஓட்டி பழகி விட்டார்கள்! அப்படி ஓட்டியதன் பலாபலன்களைத்தான் நாம் பூமியெங்கும் பார்த்து வருகிறோம். அறிவியல் முன்னேற்றத்திலும், விண்வெளி ஆராய்ச்சியிலும், நாகரீகத்திலும், உலக அறிவிலும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு முன்னேறியிருக்கும் மனிதனால்; எங்கே நிம்மதி? என்று கேள்வி கேட்பவனுக்கு பதில் சொல்ல முடியவில்லை! ஏனென்றால் வாழ்க்கையில் எழும்பும் பிரச்சனைகளைச் சரிசெய்யக்கூடிய தகவல்கள் அடங்கிய ***manual (Bible)*** அவர்களிடம் இல்லை! ஆனால் நம்மிடம் வேதம் ***Bible*** இருக்கிறது; அதனால் இனிமேலாவது அவர்களின் சாதனைகளைப் பார்த்து வாயைப் பிளந்து கொண்டிருக்காமல்; வேதத்தை திறந்து பார்ப்போம்!

## வாழ்க்கையே ஒரு நிமிஷம் நில்!:

தாறுமாறாக ***(zigzag)*** ஓடிக்கொண்டிருக்கும் காரை (வாழ்க்கையை!) கொஞ்சம் நிறுத்துவோம். அதனிடம் கொஞ்ச நேரம் தனியாகப் பேசுங்கள். இதுவரையிலும் யாராரிடமோ தொண்டை காய்ந்து, வறட்டு இருமல் வருமளவுக்கு பேசுபேசென்று பேசியிருக்கிறோம்! பலன்? பூஜ்யம் தான்! பற்றாக்குறைக்கு வேலியிலிருந்த ஓணான்களைப் பிடித்து மடியில் போட்டுக் கொண்டது தான் மிச்சம்! இனிமேலாவது நம்முடைய வாழ்க்கையுடன் பேசி; சரி செய்ய வேண்டியவைகளை சரி செய்வோம். இதை எப்படிச் செய்வது? வேத வசனங்களை ***switched-on*** செய்து; அதன் வெளிச்சத்தில் வாழ்க்கையை ஆராய வேண்டும்.

*"கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம், போதகசிட்சையே ஜீவ வழி. நீதி. 6:23 (Their instructions are a shining light; their correction can teach you how to live.)"*

*"உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. சங். 119:105 (Your word is a lamp to guide me and a light for my path.)'*

*"அதிக உறுதியான (more confident) தீர்க்கதரிசன வசனமும் நமக்கு உண்டு; பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள் இருதயங்களில் உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்தில் பிரகாசிக்கிற விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது (pay attention to it) நலமாயிருக்கும். 2 பேது. 1:19"*

இப்படியாக நம்முடைய வாழ்க்கையின் மீது, டார்ச் அடிக்கக்கூடிய வசனங்கள் வேதத்தில் ஏராளம் உண்டு. அதன் வெளிச்சத்தில் வாழ்க்கையை உற்றுப் பார்க்க வேண்டும்; அதனுடன் பேச்சுக் கொடுக்க வேண்டும். பிரச்சனைகளின் காரண காரியங்களை ஆராய வேண்டும்.

அதன் ஆரம்பத்தையும் முடிவையும் கண்டுபிடிக்க வேண்டும். ஆதியாகமம் 1, 2 அதிகாரங்களை படிக்கும் போது; தேவன் எப்படி அழகாக, மிக நேர்த்தியாக பூமியையும், அதிலுள்ள யாவற்றையும் வடிவமைக்கிறார் என்பதைப் பார்க்க முடியும். நுண்ணோக்கியை வைத்துப் பார்த்தாலும் எந்த சிறு குறைவையும் கண்டுபிடிக்க முடியாத அளவில் மனிதனுக்காக எல்லாவற்றையும் தேவைக்கும் அதிகமாக அவர் உண்டாக்கி வைத்தார். தொலைநோக்கியை வைத்து ஆராய்ந்தாலும் முடிவுக்கு வர முடியாத அளவில் அவருடைய மகிமை அவற்றில் வெளிப்படுவதைப் பார்க்க முடிகிறது.

இதுவரையிலும் சந்தோஷப்பூக்களால் மலர்ந்திருந்த நம்முடைய முகத்தில்; ஆதியாகமம் 3 ஆம் அதிகாரத்தைப் படிக்கும் போது; வேதனையினால் சுருக்கங்கள் விழுவதை உணர முடியும்! பூமியின் சகல பிரச்சனைகளுக்குமானத் துவக்கத்தை இங்கே கண்டுபிடித்து விடலாம். பூமியின் முதல் மனிதன் (& மனுஷி) எப்படி பூமியின் மீது பிரச்சனைகளை துவக்கி வைத்தார்கள் என்பதை அதில் பார்க்க முடியும். அதினால் பூமி எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டது என்பதையும்; தேவன் அவற்றை மீண்டுமாக சரி செய்ய எடுத்த முயற்சிகளையும் பார்க்க முடியும். உடனே எல்லாம் சரியாகிவிடவில்லை தான்; என்றாலும் சரியாக்குவதற்கானச் சாத்தியக்கூறுகளை ஏற்படுத்தி வைக்கிறார்.

தன்னுடைய ஒரே மகனை (இயேசுவை) – அதாவது தன்னுடைய வல்லமை பொருந்திய வார்த்தைகளை மனுஷனாக்கி இந்தப் பூமிக்கு அனுப்பி; மீண்டுமாக ஆரம்பத்திலிருந்ததைப் போன்ற குறைவில்லாத பூமியை – குறைவில்லாத மனுஷனை உருவாக்கத் திட்டமிட்டார். உடனே அதை செயல்படுத்தினார். ஆவியான வார்த்தைகளை, கண்காணும் மனுஷ ரூபத்தில் மாற்றி பூமிக்கு அனுப்புவது அப்படியொன்றும் இலேசான காரியமாயிருக்கவில்லை. தேவனுடைய வார்த்தைகள் யுகாயுகங்களை, தீர்க்கதரிசிகளின் வாய்களின் (நாக்குகளின்) வழியாக கடந்து வரவேண்டியதாயிற்று. அதற்குள்ளாகப் பூமியின் மீது சுமார் 4000 வருஷங்கள் காலப்பிரமாணத்தின்படி ஓடியது. தேவனுடைய வார்த்தைகள் இயேசுவாக வெளிப்படுவதற்குள்ளாக எத்தனையோ தடைகளைத் தாண்ட வேண்டியதாயிருந்தது. இயேசு மனிதனாகப் பிறந்து விடக்கூடாது என்பதற்காக சாத்தானும் தன்னுடையவர்களின் மூலமாக கூடவே ஓடி வந்து கொண்டேயிருந்தான்.

காலங்கள் ஓட ஓட... நாட்களும் ஓட ஓட, சாபச் சீர்கேடுகளின் விதைகள் துளிர் விட்டு உலகமெங்கும் பரவ ஆரம்பித்தன. அந்த நச்சுச் செடியின் விதைகளை பாவமானது, மனிதர்களின் மூலமாக எடுத்துச் சென்று பூமியெங்கும் விதைத்தது! பாவத்தினால் வியாதியும், தரித்திரமும் முளைவிட்டு செழிப்பாக வளர ஆரம்பித்தன! ஒரு கசகசா பழத்தில் கடுகை விட சுமார் நூறு மடங்கு சிறியதான விதைகள் ஏராளமாக இருக்கும். ஒவ்வொரு கசகசா விதையிலிருந்தும் ஒரு புதிய கசகசா செடியை வளர்க்க முடியும். ஒவ்வொரு பழத்திலும் சராசரியாக 3,000 விதைகள் இருக்கும். இதிலுள்ள எல்லா விதைகளுமே செடிகளாக வளருமானால்... ! இந்த கசகசா செடியைச் சுற்றிலும் அது வளர்வதற்கு வசதியான விளைநிலம் இருக்குமானால்; ஒவ்வொரு விதையும் வளர்ந்து; அடுத்த கோடைக்காலத்திற்குள் 3,000 செடிகள் வளர்ந்து விடும்! இனிமேல் போடப்போகிற கணக்குத்தான் மிகச் சுவையானது ***(arousing curiosity - excitement).*** தொல்லை பிடித்த வேலை தான் என்றாலும்; பொறுமையாக எண்ணிக் கணக்கிட்டால்; ஒரு வேத சத்தியத்தை இந்த உதாரணத்தின் மூலம் விளங்கிக்கொள்ள முடியும்.

இந்த 3,000 கசகசா செடிகள் ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சமாக ஒரு பழமாவது இருக்கும் (பல சந்தர்ப்பங்களில் அதிகமாகவே இருக்கும். என்றாலும் அதை நாம் புறக்கணித்து விட்டு; ஒரு செடியில் ஒரு பழம் மட்டும் பழுப்பதாக வைத்துக் கணக்கிடுவோம்). ஒவ்வொரு பழத்திலும் 3,000 விதைகள் இருக்கும் என்பதால்; இரண்டாம் ஆண்டின் முடிவில் குறைந்த பட்சமாக 3,000 ***X*** 3,000 = 90,00,000 கசகசா செடிகள் வளர்ந்துவிடும்! இப்படியே கணக்கிட்டுக் கொண்டே போவோம். மூன்றாம் ஆண்டின் முடிவில்

90,00,000 ***X*** 3,000 = 2,700,00,00,000 செடிகள் முளைத்துவிடும்!

நான்காம் ஆண்டின் முடிவில்... 2,700,00,00,000 ***X*** 3,000 = 81,00,000,00,00,000

ஐந்தாம் ஆண்டின் நிறைவில்... 81,00,000,00,00,000 ***X*** 3,000= 2,430,00,00,000,00,00,000 (!)

பூமியின் மீதிருக்கும் மொத்த நிலப்பரப்பு 13,50,00,000 சதுர கிலோ மீட்டராகும். (அதாவது 1,35,00,000,00,00,000 சதுர மீட்டராகும்.) ஐந்தாம் ஆண்டில் முடிவில் இருக்கக்கூடிய கசகசா செடிகளை விட இது ஏறக்குறைய 2,000 மடங்கு குறைவானதாகும்! ஆக, ***the conclusion of the whole matter*** எல்லா கசகசா விதைகளும் செடிகளாகுமானால், ஒரு கசகசா பழத்திலுள்ள விதைகளிலிருந்து தோன்றக்கூடிய செடிகள் ஐந்து ஆண்டுகளில் பூமியின் நிலப்பரப்பு முழுவதையும் மூடிவிடும்! சதுர மீட்டருக்கு 2,000 செடிகள் வீதம் அடர்த்தியாக மண்டிவிடும்!

இப்படித்தான் தேவன் படைத்த எந்த வித குறைவுமில்லாத பூமியின் மீது விழுந்த ஒரு பாவ விதை தன் வேலையைக் காட்டியது; சாபம் பூமியை மூடிக்கொண்டது! கசகசா செடி பூமி முழுவதுமாக வளர்ந்து மூடாதபடிக்கு பல காரியங்கள் அதைத் தடை செய்கின்றன. விதைகளின் பெரும் பகுதி மண்ணில் ஊன்றி செடியாகுமுன்னதாகவே அழிந்து விடுகின்றன, சத்துக்குறைவான மண்ணில் புதையுண்டு அழிந்து போகின்றன, வளர்கின்ற செடிகளில் பெரும் பகுதி வேர்விட முடியாதபடி பிற செடிகளால் நசுக்கப்படுகின்றன, விலங்கினங்களால் மேயப்படுகின்றன. ஆனால் முதல் மனிதனின் பாவத்தால் வேர்விட்டுப் பரவிய சாபத்தைத் தடுத்து நிறுத்த போதியத் தடைகள் இல்லாமல் போனது. ஆனால் உலகத்தோற்றமுதல் எல்லாக் காலகட்டத்திலுமே ஒரு குறிப்பிட்ட தேவனுடைய ஜனங்கள்; பூமியின் சாபங்களை அகற்ற தேவையான விசுவாச முயற்சிகளை எடுத்துக் கொண்டுதான் இருந்தார்கள். அதனால் தான் பரலோக தேவன் பூமியின் மீது இன்றளவும் செயல்பட முடிகிறது; பரலோகக் காரியங்களினால் பூமியை இயங்க வைக்கவும் ***(manipulate)*** முடிகிறது.

இந்தப் புதிய ஏற்பாட்டின் காலத்தில் – புதிய உடன்படிக்கையின்படி இயங்குகிறவர்களாகிய நம் கையில்; இந்த சாப விளைச்சலை முற்றிலுமாக அகற்றிப் போடும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்கான சகல ஆற்றலையும் நமக்குள் வைத்துத்தான் ***(install)*** தேவன் நம்மை அனுப்புகிறார். ஒரு சுவிசேஷக் கூட்டத்தில் பிரசங்கம் கேட்டு நாம் இரட்சிக்கப்படும் போது இந்தக் காரியத்தைத் தேவன் நமக்குள் நடப்பிக்கிறார். ஆனால் நமக்குள் இருக்கிற இந்த மாபெரும் தெய்வீக சக்தியைப் பற்றி எதுவுமே தெரியாமல் தேவபிள்ளைகள் காலத்தை வெகுதூரத்துக்கு ஓட்டிக் கொண்டு வந்து விட்டதால்; சாபம் எக்கச்சக்கமாக விளைந்து பரவியது கசகசா விதைச்செடிகளைப் போலவே!

இந்தச் சாபத்தை தடுத்து நிறுத்தி உலக மக்களை வாழ வைக்கவே தேவன் நம்மைத் தெரிந்து கொண்டு; இதைப் பற்றிய இரகசியங்களை வெளிப்படுத்தி, தன்னுடைய ஆற்றலை, அறிவை, புத்தியை, விவேகத்தை, அன்பை, சகல தெய்வத்துவ பரிபூரணத்தையும் நமக்குள்ளாக வைத்து, அபிஷேகித்து, வழிநடத்தி, ஆலோசனை தந்து, நம்முடன் பேசி... இன்னும் என்னென்னவெல்லாம் செய்ய முடியுமோ அவையெல்லாவற்றையும் செய்திருக்கிறார். சிலுவையில் தன்னுடைய குமாரன் இயேசுவின் மூலமாக இதையெல்லாம் முடித்து வைத்தார். “முடிந்தது” என்று இயேசுவின் வாய்மூலமாகவே இதையெல்லாம் அறிவித்தும் ***(declaration)*** விட்டார்.

## சாபக் கதிர்வீச்சுக்களை *Switch off* செய்வோம்!:

*அவர்கள் நெடுங்காலம் பாழாய் கிடந்தவைகளைக் கட்டி, பூர்வத்தில் நிர்மூலமானவைகளை எடுப்பித்து, தலைமுறை தலைமுறையாய் இடிந்து கிடந்த பாழான பட்டணங்களைப் புதிதாய்க் கட்டுவார்கள். ஏசா. 61:4.* இந்தத் தீர்க்கதரிசன வார்த்தை நம்மைக் குறித்துத்தான் சொல்லப்பட்டிருக்கிறது என்பதை இதற்கு முன்பாக வரும் 3 வசனங்கள் மூலமாக அறிந்து கொள்ளலாம். நாம் என்ன செய்ய வேண்டும்; எதற்காக நாம் அபிஷேகிக்கப்பட்டிருக்கிறோம்? என்பதைப் பற்றிய விவரங்களும் அதில் இருக்கின்றன. அவற்றை நாம் செய்யும்போது; தேவனுடைய திட்டம் பூமியின் மீது நிறைவேறும். எங்குமுள்ள இருள் அகற்றப்பட்டு; ஒழுங்கும் பரிபூரணமும் மனிதர்களின் வாழ்வில் உருவாகும்.

*“கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்; சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயங்கட்டுதலையும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலைக் கூறவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச்சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல்*

*செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்."(ஏசா. 61: 1, 2, 3)* இந்தப் புதிய உடன்படிக்கையின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நம்மைக் குறித்ததான தீர்க்கதரிசனம் தான் இது! இக்காலங்களில் இப்படிப்பட்ட ஊழியங்களைச் செய்வதற்காகத்தான் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த வசனங்களினடிப்படையில் ஊழியத்தை நிறைவேற்றினால் தான்; பூமியைக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்ய முடியும்... பண்படுத்திக் காத்துக் கொள்ளவும் முடியும். அதாவது பூமியை சுதந்தரிக்க (சொந்தமாக்க) முடியும்.

இந்தத் தீர்க்கத் தரிசன வசனம்; இயேசு இந்த பூமியில் வாழ்ந்த காலத்தில் முதன்முதலாக நிறைவேற ஆரம்பித்ததை கீழ்வரும் வசனங்களின் மூலமாக நிதானிக்கலாம். *"அப்பொழுது ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகம் அவரிடத்தில் கொடுக்கப்பட்டது. அவர் புஸ்தகத்தை விரித்தபோது; கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார், என்று எழுதியிருக்கிற இடத்தைக் அவர் கண்டு, வாசித்து, ...உங்கள் காதுகள் கேட்க* ***இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று*** *என்றார். (லூக். 4: 17–21)"*

## Bring good news to the poor:

கர்த்தர் இயேசுவின் மேலிருக்கிற அதே அபிஷேகம் தான் நம் ஒவ்வொருவர் மேலும் இருக்கிறது. அவர் துவங்கி வைத்த இந்த ஊழியத்தின் தொடர் ஓட்டத்தில் தான் இன்றைக்கு நாம் இருக்கிறோம். இயேசுவின் மூலமாகத் துவக்கி வைக்கப்பட்ட இந்த நற்செய்தி இன்றைய தினம் வரைக்கும் அறிவிக்கப்பட்டு வருகிறது. லூக். 4:17–21 ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ; அதைச் செய்யும் போது தான் தேவனுடைய திட்டம் சரியான விதத்தில் பூமியின் மீது நிறைவேறும். இந்த வசனங்களில் சொல்லப்பட்ட ரீதியில் சுவிசேஷம் அறிவிக்கப்படாததினால் தான்; தேவனுடைய திட்டம் இன்னும் நிறைவேறாமல் தத்தளிக்கிறது. சுவிசேஷம் என்றாலே நற்செய்தி என்று தான் அர்த்தம் ***(... he has chosan me to bring good news to the poor.)*** தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் (நல்ல செய்திகளை) பிரசங்கிப்பதற்காகவே நமக்கு அபிஷேகமும், வெளிப்பாடும், ஆவிக்குரிய வரங்களும், நாவிலிருந்து வெளிப்படும் வல்லமையுள்ள வார்த்தையும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. தரித்திரத்திலிருப்பவர்களிடத்தில் போய்; தரித்திரம் அவர்களை விட்டு அகற்றப்படுவதற்கேதுவாக பிரசங்கிக்க வேண்டும். மட்டுமல்ல, அவர்கள் ஐசுவரியவான்களாக மாறுவதற்கேதுவான விசுவாச செயல்பாடுகளையும் கற்றுக் கொடுக்க வேண்டும்.

பணம் இல்லாதவர்கள் மட்டுமல்ல, வியாதிகளோடும், சாபத்தீடான காரியங்களோடும், பிசாசினாலுண்டான பலவிதமாக உபத்திரவங்களோடு வாழ்கின்ற எந்தவொரு நபரும் தரித்திரனே! அதனால் பொருளாதாரத்தை மட்டுமல்ல; கிறிஸ்துவின் மூலமாக நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற சகல விதமான ஆசீர்வாதங்களையும் ஒன்றுவிடாமல் பிரசங்கிக்க வேண்டும். சாபத்தின் மீது எதிர்தாக்குதல் நடத்தத் தெரியாமல்; எதிர்காலத்தைப் பற்றிய எந்தவொரு சிந்தனையும் ***(idea*** ம்) இல்லாமல், சஞ்சலத்தோடு காலத்தை ஓட்டுபவர்களை ஆற்றித் தேற்றத்தான் இந்தச் சுவிசேஷம்! வியாதியோடிருப்பவனுக்குத் தேவை; சுகமாக்கக்கூடிய மருந்து தானே தவிர, இன்னும் கொஞ்சம் வியாதிக் கிருமிகள் அல்ல! வியாதிக் கிருமிகளை அள்ளி ஜோல்னா பை நிறையத் திணித்துக் கொண்டு போய்க்கொண்டிருக்கும் சுவிசேஷகர்களுக்குத்தான் இப்போது முக்கியமாக சுவிசேஷம் தேவை!

## Recovery of sight to the blind:

மனிதன் என்றாலே முதலில் ஞாபகத்துக்கு வருவது; கண்களால் பார்க்கக்கூடிய அளவில் இருக்கிற அவனுடைய சரீரம் தான். தேவனைப் போலவே ஆவி ரூபத்திலிருக்கிற மனிதன்; பூமியில் தங்குவதற்கேதுவாக அமைக்கப்பட்ட கூடாரம் தான் சரீரம் என்ற ஒரு அடிப்படையான ***(fundamental)*** காரியம் கூட தெரியாமல் தான் சுவிசேஷம் அறிவிக்கிறார்கள். சரீரத்தை

மனிதன் என்று நினைத்துக் கொண்டு; அந்த கண்ணோட்டத்திலேயே பிரசங்கமும் செய்கிறார்கள். இப்படிப்பட்ட பிரசங்கங்களைச் செய்பவர்களும், அதைக் கேட்பவர்களும், தங்களுடைய முழுக் கவனத்தையும் உடம்பின் மீது திருப்பி விடுகிறார்கள். நடை உடை பாவனைகளில் சில மாற்றங்களைச் செய்து கொள்வதின் மூலமாக; மனிதர்களைத் திசை திருப்பி, கூட்டிக் கொண்டு போய், திக்குத் தெரியாத காட்டுக்குள் விட்டுவிட்டார்கள்! (மத். 15:14) அங்கேயிருந்து வெளியே வருவதற்கான ஒரு வரைபடத்தை *(layout)* அவர்கள் கையில் கொடுப்பது தான் சுவிசேஷம்! உள்ளான ஆவி ரீதியிலான மனிதனில் உள்ள கண்கள் பார்வையடைய (பிரகாசமுள்ள மனக்கண்கள்) ஜெபிக்க வேண்டும்! *(recovery of sight to the blind)*

## *Freedom to those in prison:*

நியாயப்பிரமாண சட்டதிட்டங்களால் கட்டப்பட்டு; ஜெயிலில் போலீஸ்காரர்கள் மத்தியில், களியும், கூழும், கஞ்சியும் சாப்பிட்டு விட்டு தூங்கிக் கொண்டிருப்பவர்களை விடுதலையாக்க வேண்டும். (அப். 12:6) அவர்களை வெளியே கொண்டு வர வேண்டும் (அப். 12:10) நம்மிடமுள்ள வெளிச்சத்தை அவர்களின் இருண்ட மூலைகளில் பிரகாசிக்கச் செய்து; சத்தியத்தை அவர்கள் அறிந்து கொள்ளும்படி செய்ய வேண்டும். (அப். 12:7) இதையெல்லாம் செய்ய வானத்திலிருந்து தூதர்கள் இறங்கி வருவார்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டு நிற்கக்கூடாது; நிச்சயமாக நாம் தான் செய்தாக வேண்டும்!

## *The time has come:*

எந்தவிதத்திலும் ஒரு பரிபூரணத்தையும், விடுதலையையும், வெற்றியையும் கொண்டுவர முடியாமலிருந்த நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி முடித்து; அதை ஒரு முடிவுக்கு கொண்டு வந்தார் தேவன். இயேசுவின் மூலமாக இந்தக் காரியத்தை சிலுவையில் நிறைவேற்றினார். இந்தப் பழைய பிரமாணத்தின் *(law)* படி யாராலும் இயங்க முடியவில்லை, யாரையும் இயக்கவும் முடியவில்லை. காரணம் ஆதாம் மூலமாக தொன்று தொட்டு, சந்ததி வாரியாக வந்துகொண்டிருந்த பாவ சுவாவம்; அதாவது பாவம் என்கிற பிரமாணம் தன் வேலையைக் காட்டியது. புவியீர்ப்பு விசையின்படி செயல்படுகிற ஆப்பிள் பழத்தால் மரத்திலிருந்து கீழே தான் விழ முடியுமே தவிர பிரமாணத்தை மீறி அதனால் மேல் நோக்கிப் போக முடியாது! பாவம் என்கிற பிரமாணம் இயக்கும் போது மனிதனால் பாவத்தைத்தான் செய்ய முடியும்.

அதனால் தான் நியாயப்பிரமாணத்தின்படி நல்ல காரியங்களைச் செய்ய பழைய ஏற்பாட்டின் மக்கள் முயற்சி செய்தும் தோற்றுப் போனார்கள். எவ்வளவுதான் முயற்சித்தாலும் முடியாது என்பதை அவர்களே செய்முறைப் பயிற்சியின் *(practically)* மூலம் புரிந்து கொள்ளட்டும் என்று தான் தேவன் மோசேயின் மூலமாக இந்தப் பிரமாணத்தை எழுதிக் கொடுத்தார்.

நியாயப்பிரமாண முயற்சிகளினால் சோர்வடைந்து போன மனிதர்களுக்கு; அதை நிறைவேற்றும் ஆற்றலைக் கொடுக்கவே இயேசு வந்தார். அதெப்படியென்றால்; நியாயப்பிரமாணத்தை தானே நிறைவேற்றி முடித்ததின் மூலமாக; அதற்கு கிறிஸ்துவின் பிரமாணம் என்ற பெயரைக் கொடுத்தார். கிறிஸ்துவின் மூலமாக இயங்குகிற இந்தப் பிரமாணம்; அவர் நமக்குள் வாசம் செய்வதால் நமக்குள்ளாகவும் இயங்க ஆரம்பித்தது. இதனால் பாவப்பிரச்சனைக்கு ஒரு முடிவு கட்டப்பட்டது. தங்களுடைய கிரியைகளை மட்டுமே நம்பி முயற்சியெடுத்த பழைய பிரமாணத்தின் மக்களைப் போல கஷ்டப்பட வேண்டிய அவசியமில்லாதபடி; இந்தக் கிருபை பிரமாணம் உதவி செய்தது. பழையவைகளை ஒழித்துக் கட்ட இந்தப் புதிய பிரமாணம் வழி ஏற்படுத்திக் கொடுத்தது.

*“... நன்மை செய்ய விரும்புகிற என்னிடத்தில் தீமையுண்டென்கிற ஒரு பிரமாணத்தைக் காண்கிறேன். ரோமர். 7:21”* என்று குழம்பிப் போய் இருக்கிறவர்களுக்கு பதில் சொல்ல வந்தது இந்தப் புதிய பிரமாணம்! *“...என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னை சிறையாக்கிக் கொள்ளுகிறது. ரோமர். 7:23”* என்று புலம்பும் சிறைக்கைதிகளை விடுதலையாக்க வந்தது இந்த விடுதலையின் பிரமாணம்! *“நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?”*

என்று உதவிக்காக கதறிக்கொண்டிருந்தவர்களைக் காப்பாற்ற வந்தது இந்தச் சிலுவையின் பிரமாணம்!

மனிதர்களை பாவம் செய்ய வைத்து; கீழே இழுத்து மண்ணோடு மண்ணாக மட்கிப் போகச் செய்து கொண்டிருந்த இந்தப் பிரமாணத்திற்கு பதிலாக; அவர்களைப் பாவம் செய்யாதபடி தடுத்து நிறுத்தக் கூடிய வேறொரு பிரமாணத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிருந்தது. அந்த வேலையைச் செய்து முடிக்கவே இயேசு வந்தார். வந்த வேலையை வெற்றிகரமாக செய்தும் முடித்தார். தனக்குள்ளாக இப்போது இயங்கிக் கொண்டிருப்பது பழைய பாவ பிரமாணம் அல்ல; இயேசுவின் மூலமாக ஏற்படுத்தப்பட்ட புதிய பரிசுத்தப் பிரமாணம் என்பதை அறிந்து கொண்டாலே போதும்; மனிதனால் பாவத்தில் நிலைத்திருக்க முடியாது. பாவம் செய்து கொண்டிருந்தாலும் உடனடியாக அதை நிறுத்தி விடுவான். அடுத்தக் கட்டமாக அந்தப் பாவ சூழலிலிருந்து வெளியே குதித்து வந்து விடுவான். அதற்கடுத்த கட்டமாக பாவ சூழல்களை ***(temptation)*** உருவாக்குகிற திசையின் பக்கம் தலைவைத்துக் கூட படுக்க மாட்டான்; அல்லேலூயா!

இப்படிப்பட்ட சத்தியங்களைத் தொடர்ச்சியாக சொல்லிக்கொண்டு வரும் போது; தேவனுடைய திட்டம் பூமியின் மேல் நிறைவேறும். கேட்பவர்கள் விடுதலையாகி; இந்த வேலையில் ***(task)*** நம்முடன் சேர்ந்து கொள்வார்கள். சுவிசேஷம் பரவ பரவ, அதன் நற்செய்திகள் நாலாபக்கத்திலும் விரிந்து படர ஆரம்பிக்கும். கிறிஸ்துவின் சேனையில் ஆட்கள் அதிகமாக அதிகமாக; சாத்தானின் சேனையில் ஆட்கள் குறையத் துவங்கும். கொஞ்சம் கொஞ்சமாக ஆட்கள் வரவர அங்கே ஆட்கள் குறைந்து கொண்டே வந்து; முடிவில் ஒருவர் கூட மேற்படியானின் (சாத்தானின்) சேனையில் இருக்க மாட்டார்கள்! அல்லேலூயா!!

கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கிறது; இதெல்லாம் நடக்கிற காரியம் தானா? என்றால் ...நடக்கும், என்று தான் வேதமும் சாட்சியிடுகிறது. தீர்க்கரிசன வார்த்தைகளின் எதிரொலிகள் அலையலையாகச் சுழன்று காலத்தைக் கடந்து வந்து கொண்டேயிருக்கிறது.

*... பூமியனைத்தும் அவருடைய மகிமையால் (glory, Magnificence, great beauty, bliss of heaven, elaborate, impressive, excellent, outstanding) நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள். ஏசா. 6:3.*

*என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் (knowledge, awareness, information) நிறைந்திருக்கும். ஏசா. 11:9.*

*கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச்செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தர வெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப் போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீத சத்தமும் அதில் உண்டாயிருக்கும். ஏசா. 51:3. (... though her land is a desert, I will make it a garden, like the garden I planted in Eden. Joy and gladness will be there, and songs of praise and thanks to me.)*

*... நான் என் தூதனை அனுப்புகிறேன், அவன் எனக்கு முன்பாகப் போய், வழியை ஆயத்தம் பண்ணுவான்; மல். 3:1. (... I will send my messenger to prepare the way for me...)*

*காலங்கள் நிறைவேறும்போது விளங்கும் நியமத்தின்படி பரலோகத்திலிருக்கிறவைகளும் பூலோகத்திலிருக்கிறவைகளுமாகிய சகலமும் கிறிஸ்துவுக்குள்ளே கூட்டப்பட வேண்டுமென்று, தமக்குள்ளே தீர்மானித்திருந்த தம்முடைய தயவுள்ள சித்தத்தின் இரகசியத்தை எங்களுக்கு அறிவித்தார். எபே. 1: 9, 10. (God did what he had purposed, and made known to us the secret plan he had already decided to complete be means of Christ. This plan, which God will complete when the time is right, is to bring all creation to gether, everything in heaven and on earth, with Christ as head.)*

*நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் (new earth and the new heavens) எனக்கு முன்பாக நிற்பது போல, உங்கள் சந்ததியும், உங்கள் நாமமும் நிற்குமென்று கர்த்தர் சொல்லுகிறார். ஏசா. 66:22*

## நம்மைக் குறித்த தேவனுடைய திட்டம்? அது ஏதேன் தோட்டம்!:

நம்மைக் குறித்த தேவனுடைய திட்டம் ஒரு ஏதேன் தோட்டம் என்றார் ஒரு மூத்த போதகர்! தீர்க்கதரிசனத்தை நிறைவேறுதலுக்குள்ளாக நடத்திச் செல்லும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவர் நம்மை நிர்க்கதியாக விடுவதில்லை என்பதையும் நினைவில் வைத்துக் கொள்வோம். பூமியின் மீது தன்னுடைய பரிபூரணமான திட்டத்தை நிறைவேற்றி முடிப்பதில் தேவன் அதிக கவனத்துடன் இருக்கிறார். *(ரோமர். 9:28)* ***(Lord will quickly settle his full account with the world).***

அதைப் பூமியின் மீது முடிப்பதற்காக தன்னுடைய சித்தத்தை, மனவிருப்பங்களை பல இடங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். தேடிக் கண்டுபிடித்து தெரிந்தெடுத்து விழுங்க வேண்டும்! அவைகள் நம்முடைய இருதயத்திற்குள்ளாகப் போய் விழுகின்றன. எழுத்தின் ரூபத்தில், வார்த்தையாக உள்ளே போகும் காரியங்கள்; உள்ளே போனதும் நம்முடைய சிந்தனை மண்டலத்தில் படங்களாக மாறுகின்றன. ***(image - a mental picture (e.g:) a visible impression obtained by a camera, telescope, other device or displayed on a video screen)***

அதற்குப் பிறகு அந்தப் படங்களை மீண்டுமாக வார்த்தைகளாக்கி உச்சரிக்கும்போது; வெளியேறும் வார்த்தைகள் மீண்டுமாக அதற்குரிய உருவத்தை அடைய தீவிரிக்கிறது. பேசிய வார்த்தைகளின்படியே உருவாகும் என்று நாம் விசுவாசிக்கும்போது; நம்முடைய விசுவாசம் அதற்குரிய கிரியையை நடப்பிக்க விரைகிறது. வெறும் விசுவாசத்தோடு நின்று விட்டோமானால்; நம் கனவுகள் செத்துப் போய்விடும்! நம்முடைய கனவுகளுக்கு உயிரோட்டம் கொடுத்து; அதை நிஜமாக்க வேண்டுமானால்; விசுவாசத்தோடு கிரியையும் தன் கைகளைக் கோர்த்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இரண்டும் சேர்ந்து முயற்சி செய்யும்போது நிழல் நிஜமாக ஆரம்பிப்பதைப் பார்க்க முடியும்; பார்த்துப் பார்த்துப் பூரித்துப் போகவும் முடியும்! *"விசுவாசம் அவனுடைய கிரியைகளோடேகூட முயற்சி செய்து, .... யாக். 2:22"* ***(His faith and his actions worked together)***

விசுவாசம் பல விதங்களில் கிரியைகளை நடப்பிக்க முயற்சியெடுக்கிறது. அதாவது ***Actions! (The process of doing something to achieve an aim (target))*** தேவன் மேல் இருக்கும் விசுவாசத்தினடிப்படையில் செய்யப்படும் எந்த செயல்பாடுகளும் அவருடைய திட்டத்தை நோக்கியே முன்னேறுகின்றன. தேவனுடைய திட்டம்? அது நன்மையானது, பரிபூரண ஆசீர்வாதங்கள் நிறைந்தது, அன்பு மிகுந்தது; பிரச்சனைகளில்லாதது; இவைகளெல்லாம் தான் ஏதேனில் காணப்பட்டது. தேவன் தன்னிலிருந்து தானே பிரித்தெடுத்து; தன்னைப் போலவே உருவாக்கிய மனுக்குலத்தின் மீது பேரன்பு வைத்தார். தன்னுடைய ஆசை கனவுகள் எல்லாவற்றையும் செழிப்பாக மாற்றி ஏதேனுக்குள் கொண்டு வைத்தார். தேவனுடைய பரிபூரணமான அன்பின் வெளிப்பாடுதான் செழிப்பு! பூமியின் காணப்படுகிற சகலவிதமான நன்மைகளின் தொகுப்பு தான் செழிப்பு! அவருடைய அன்பின் அகலம், நீளம், ஆழம், உயரம் போன்றவை கிறிஸ்துவின் மூலமாக சிலுவையில் வெளிப்பட்டது. தேவனுடைய திட்டத்தை (மனவிருப்பங்களை) பூமியின் மேல் நிலைநிறுத்த; என்னென்ன தேவையோ எல்லாவற்றையும் சிலுவை மூலமாக அந்த அன்பு கொண்டு வந்தது.

ஏதேன் தோட்டத்திலிருந்த எல்லாவற்றையும் மீண்டுமாக நம்மிடத்தில் கொண்டு வந்து சேர்ப்பதற்காகவே இயேசு வந்தார். ஏதேனுக்குள் சகல விதமான நன்மைகளும் பரிபூரணமாக, தேவைக்கு அதிகமாகவே இருந்தது. இப்போது நாம் பூமியின் மீது காண்கிற சாபச்சீர்கேடுகள் எதுவுமே அங்கே இல்லை. **இப்போதிருக்கிற பூமியில் தேடினாலும் கிடைக்காத சகல விதமான நன்மைகளும் அங்கே இருந்தது! சுமாராக 1,00,000 (1 லட்சம்) நன்மைகள் அங்கே இருந்ததாக வைத்துக் கொள்வோம். ஒரு லட்சம் நன்மைகளையும் சேர்த்து ஒட்டுமொத்தமாக ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமானால்; அதன் பெயர் தான் செழிப்பு!**

## செழிப்பு?: (What's the meaning?)

செழிப்பு! இதற்குள் என்னென்னவெல்லாம் இருக்கிறது என்பதை சுருக்கமாகப் பார்ப்போம். ***Success, Flourish (especially financially), thrive, grow, develop, accomplishment, social***

***status!*** இப்படிப்பட்ட பல நல்ல காரியங்கள் தான் இந்த வார்த்தைக்குள் வருகிறது. செழிப்பு என்றவுடன் பொருளாதாரத்தை மட்டுமே நம் கண் முன் கொண்டு வருவது பழக்கமாகிப் போய்விட்டது; சபைகளில் அப்படிப் பழக்கப்படுத்தி விட்டார்கள். சபையின் இருண்ட காலங்களில் சாத்தானால் திசை திருப்பப்பட்டவர்களால் ஏற்பட்ட தவறான போதனைகளால் இந்தச் செழிப்பு (ஏதேன் தோட்டம்) பின்னால் தள்ளப்பட்டுப் போனது. நாளாக ஆக ஏதேன் தோட்டம் இருந்த இடமே தெரியாத அளவுக்கு அதன் சுவடுகள் கூட அழிக்கப்பட்டுப் போனது. ஏதேன் தோட்டம் இருந்த இடம் மூழ்கடிக்கப்பட்டு இப்போது ஆஸ்திரேலியாவின் அருகில் கடலாழங்களில் இருப்பதாக ஆய்வாளர்கள் கணித்திருக்கிறார்கள்! (***Ref:*** எசே. 31 : 16, 18) நோவா காலத்தில் ஏற்பட்ட உலகளாவிய வெள்ளப்பெருக்கினால் இது நடந்தது. கடலின் ஆழங்களுக்குச் சென்று ஆராய்ச்சி நடத்தியவர்கள் ஏதேனின் செழிப்பை அடையவில்லை. தேவனுடைய ஆவியானவருடன் நீச்சலாழங்களுக்குள் பயணித்த நாம் அந்த செழிப்பை அடைந்திருக்கிறோம்! அல்லேலூயா!! (எசே. 47:5)

ஏதேனில் இருந்த செழிப்பு (1,00,000 நன்மைகள்) இப்போது கடலுக்குள் இல்லை. அவைகளெல்லாம் தேவனால் சுமார் 6000 – 7000 வாக்குத்தத்தங்களாக மாற்றப்பட்டு, ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்ற பொதிவுக்குள் பத்திரமாக வைக்கப்பட்டு; பிறகு இயேசுவுக்குள் வைக்கப்பட்டது. இந்தப் புதிய உடன்படிக்கையின் காலத்தில் அது இயேசுவின் மூலமாக நமக்குள்ளேயே வந்தும் விட்டது! *“ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதியாருக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று. கலா. 3:14”*

மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் பிரகாசிக்கிறார் இயேசு; அவருக்குள் இருந்து பிரகாசிக்கிறது ஏதேன் தோட்டம்! அந்த ஒரு லட்சம் ஆசீர்வாதங்களும் இப்போது நமக்குள் தான் இருக்கிறது; நமக்குள்ளே தேவனால் ***install*** செய்யப்பட்டிருக்கிறது. நாம் விசுவாச பயிற்சிகள் & முயற்சிகள் மூலமாக அவைகளை எடுத்துப் பிரயோஜனப்படுத்தும் வகையில் அவைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன ***(fix in position ready for use).***

## சாபத் தொடர்கதை சிலுவையில் – ‘‘முடிந்தது’’:

தன்னிடம் கொடுக்கப்பட்ட செழிப்பை ஆதாம் சாத்தானிடம் கோட்டை விட்ட சோகக்கதை அதோடு முடிந்துவிடவில்லை; அது இன்றளவும் தொடர்கதையாகிப் போனது. ஒட்டுமொத்த ஏதேனின் செழிப்பும் கொஞ்சம் கொஞ்சமாக சாத்தானின் ஆளுகைக்குள்ளாக இருப்பவர்களிடம் போய்விட்டது. இயேசு இருந்தும்; அவரைப் பற்றின அறிவு இல்லாததினால் சங்காரமாகிறார்கள். ***(My people are doomed because they do not acknowledge me.*** ஓசியா. 4:6) அதாவது தேவனைப் பற்றின முழுமையான அறிவு இல்லாததினால், அரைகுறை அறிவினால், முழுவதுமாகவே அவரை தப்பாகப் புரிந்து வைத்துக் கொண்டிருப்பதினால் தேவ ஜனங்கள் அழிந்து போகிறார்கள். பொருளாதார தாக்கத்தினாலும், வியாதியினாலும், பூமியின் சீர்கேடுகள் துரத்துவதினாலும் ஓடி ஓடி, நுரை தள்ளி செத்து சுண்ணாம்பாகிப் போகிறார்கள் ***(Death, destruction, terrible fate, failure, trouble, guilty, terror, poverty, disorder ... and so on).***

தேவன் வாக்களித்த பூமியின் சகல விதமான செழிப்பும் நமக்காகத் தான்! செழிப்பையடைய போதிய அளவுக்கு முயற்சிகளை நாம் எடுக்காததினால்; முயற்சிகளை எடுத்த உலகத்தாரிடம் அவைகள் போய்விட்டன; ஏறக்குறைய 99% அங்கே போய்விட்டன! தேவனுடைய இரசியங்களை அறிந்து கொண்ட தேவபிள்ளைகளிடம் இருப்பதோ 1% ஏதேன்! என்றாலும் இருப்பதை உபயோகித்து தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதில் தீவிரமாக இருக்கிறோம். பூமியைச் சுதந்தரிக்கப்போகிற எங்களுடைய ***team***-க்கு ஆட்கள் தேவை; உங்களையும் வரவேற்கிறோம். குறைந்த பட்ச மனிதர்களைக் கொண்டு பெருங்கூட்டத்தாரை முறியடிப்பதும்; அற்பமானவைகளைக் கொண்டு பயங்கரமான காரியங்களை நடப்பிப்பதும் நம் தேவனுக்கு கை வந்த கலை; அது அவரது போர்முறை! வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்! **கையிலிருக்கிற ஆயுதங்களை வைத்து அல்ல; நாம் யார், என்னவாக இருக்கிறோம், நமக்கு என்னவெல்லாம் உண்டு என்பதைப் பற்றிய வெளிப்பாடுதான் நம்முடைய வெற்றியை நிர்ணயிக்கப் போகிறது.**

நாம் கொஞ்சப்பேராக இருந்தாலும்; நமக்குள்ளிருந்து தேவனுடைய வல்லமை செயல்படுகிறது.

உலகம் தன்னுடைய சுயஞானத்தினால் பெரிய அளவில் சாதனைகள் செய்து வருகிறது. விஞ்ஞான முன்னேற்றங்களால் அவர்களின் பெலன் பெருகியிருக்கிறது. உலக முழுவதும் அவர்களின் வீர தீர சாகசங்களைப் பார்க்க முடிகிறது; சகலகலா வல்லவர்களாக இருக்கிறார்கள்! ஆனால் அவர்கள் இதுவரையிலும் தேவனுடைய திட்டத்திற்கிசைவாக எதையுமே உருப்படியாக செய்யவில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொண்டார்கள் தான்; ஆனால் தேவனுடைய மனவிருப்பத்திற்கேற்றபடி அவர்கள் அதைக் கீழ்ப்படுத்தவில்லை, ஆளுகை செய்யவுமில்லை. தேவனின் எதிர்பார்ப்பின்படி அதைப் பண்படுத்தவுமில்லை, காத்துக் கொள்ளவுமில்லை!

## அடி வாங்கும் தேவ திட்டம்!(collapse):

அப்படியானால் பூமியின் மீது என்னதான் நடக்கிறது? பூமியின் செழிப்பைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டார்கள். ஆனால் என்ன பிரயோஜனம்? அதைச் சரியான ரீதியில் (வேத பிரமாணத்தின்படி) பயன்படுத்தாமல் துஷ்பிரயோகம் செய்கிறார்கள். தேவனையறியாத வெகுஜனங்கள் சன்மார்க்க நெறிமுறைகளைக் கடைப்பிடித்து; நல்லவர்களாகவே வாழ்ந்து பூமிக்கு நன்மையை செய்ய முயற்சித்தாலும்; அதற்கான செய்முறை விளக்கக் கையேடு ***(manual - a book giving instructions)*** இல்லாததினால் முயற்சிகள் எல்லாமே முடிவில் அடி வாங்கி விடுகிறது ***(collapse).*** ஒரு மனிதன் பூமியில் வாழ்வதற்கும்; தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் ***Bible*** என்ற ***Manual*** த் தவிர வேறு எந்த வழிகாட்டியும் பூமியில் இல்லை என்பதை அவர்கள் மனதார அறியாமல் இருக்கிறார்கள். கண்களால் காண்கிற காரியங்களின் அடிப்படையில்; மனதில் தோன்றுகிறவைகளை சுயஞானத்தினால் செய்கிறார்கள். தங்களுடைய மனம் போன வழிகளில் நடந்து; தங்களுக்கு இஷ்டமானதையெல்லாம் செய்கிறார்கள். *"...அவனவன் தன் தன் பார்வைக்குச் சரி போனபடி செய்து வந்தான். நியா. 17:6." "மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதன் முடிவோ மரண வழிகள். நீதி. 14:12"*

**ஆனால் நாம் அவர்களைப் போல் செய்யக்கூடாது; செய்யவும் முடியாது. *Manual* இல்லாமல் காரை ஓட்டி மரத்தில் கொண்டு போய் இடிக்கக்கூடாது. அவர்களின் வழிகளில் நாம் போனோமானால்; கார் ஊர் போய் சேராது; நாம் பரலோகம் போய்ச் சேர்ந்து விடுவோம்!** *"... அவனவன் தன் தன் பார்வைக்குச் சரியானதையெல்லாம் செய்கிறதுபோல நீங்கள் செய்யாதிருப்பீர்களாக. உபா. 12:8"* – என்று அந்த ***manual*** நமக்கு ***instructions*** கொடுக்கிறது. நாம் இலக்கை அடைய வேண்டுமானால் (தேவனுடைய ***assign-ment*** ஐ கையிலெடுத்து வேலை செய்ய வேண்டுமானால்) அவருடைய சட்டதிட்டங்களின் படி ***(rules and regulations)*** போனால் தான் நடக்கும்!

இப்போது நாம் செய்ய வேண்டியது என்ன? பூமியின் மீதுள்ள சகல நன்மைகளையும் (செழிப்பு) நம்முடைய ஆளுகைக்குள் – கட்டுப்பாட்டுக்குள் ***(custody)*** கொண்டுவர வேண்டும். அதற்கு நமக்கிருக்கும் ஒரே வழி; 6000 க்கும் மேற்பட்ட வாக்குத்தத்தங்கள் தான். பூமியைச் சுதந்தரிப்பாய் என்ற ஒரே வார்த்தைக்குள் இந்த 6000 வாக்குத்தத்தங்களும் தொகையாய் அடங்கி விடுகிறது. பூமியின் மீது காணப்படுகிற சகலவிதமான செல்வச் செழிப்புகள் மட்டுமல்ல, சுகம், பரிசுத்தம், சமாதானம், சந்தோஷம், ஞானம், விடுதலை, வெற்றி, ஜீவன் இப்படிப்பட்ட ஆயிரக்கணக்கான நன்மைகள் இந்த வாக்குத்தத்தங்களின் வழியாக நம்மிடம் வந்து சேர்கின்றன. தேவன் நமக்காக ஆயத்தம் செய்து வைத்திருக்கும் செழிப்பின் வழி இது தான்!

*"... பாவஞ்செய்கிறவனுக்கோ தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன் வசமாய் வைத்துவிட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்து குவித்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார்;" "... பிர. 2:26 ...பாவியின் ஆஸ்தியோ நீதிமானுக்காகச் சேர்த்து வைக்கப்படும். நீதி. 13:22" எகிப்தின் சம்பாத்தியமும், எத்தியோப்பியாவின் வர்த்தக லாபமும், நெடிய ஆட்களாகிய சபேயரின் வர்த்தக லாபமும் உன்னிடத்திற்கு தாண்டி வந்து, உன்னுடையதாகும்; ஏசா. 45:14*

அவர்களின் ஆளுகைக்குள்ளாக இருக்கிற ஆசீர்வாதங்களெல்லாம் வேதபிரமாணங்களினடிப்படையில் சம்பாதிக்கப்பட்டவைகளல்ல; கர்த்தருடைய ஆசீர்வாதம் தந்த ஐசுவரியங்களுமல்ல. அவைகள் வேதனைகளைக் கூட்டுகிறவைகளாயிருக்கின்றன. தேவனற்ற உலக ஜனங்கள் ஐசுவரியத்தை சம்பாதிக்கத் தேவையான ஆலோசனைகளையும், வழிகளையும்,

ஞானத்தையும் உலகத்திலிருந்து தான் பெற்றுக் கொள்கிறார்கள். அதனால் உலகத்திலிருக்கிற சாபமும் அதனோடே சேர்ந்து விளைகிறது. பூமியைச் சுதந்தரிப்பதற்காக அவர்கள் விதைக்கும் விதைகள் பூமியின் சாபத்தை உறிஞ்சியே வளர்கிறது.

## கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள்! (தரிசனங்கள் எழுதப்படுகின்றன!)

சாபம் நிறைந்த அந்த நன்மைகள் எல்லாம் அப்படியே நம்மிடம் வருவதில்லை; அவைகள் சாபம் நீக்கப்பட்டவைகளாகவே வருகின்றன! அது எப்படி என்றால்; பூமியைச் சுதந்தரிக்கத் தேவையான ஞானத்தையும், விசுவாசத்தையும், ஆவிக்குரிய போராயுதங்களையும் நாம் பரலோக தேவனிடமிருந்து பெற்றிருக்கிறோம். எப்படியென்றால்; நாம் வாக்குத்தத்தம் செய்த தேவனையும்; அவர் அனுப்பின இயேசுவையும் விசுவாசிக்கிறோம். வாக்குத்தத்தம் செய்தவர் உண்மையுள்ளவர், வார்த்தை மாறாதவர், அவருடைய வார்த்தைகள் அனுப்பப்பட்ட காரியத்தை செய்து முடிக்காமல் திரும்பாது போன்ற இரகசியங்களை அறிந்திருக்கிறோம். வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கிறோம், அறிக்கை செய்கிறோம். அறிக்கை செய்யும் போது வாக்குப்பண்ணப்பட்ட காரியங்கள் உள்ளான மனிதனுக்குள்ளாகப் (இருதயம்) போகிறது. அதாவது வார்த்தைகளாக (எழுத்துக்களாக) உள்ளே போகிற காரியங்கள்; அங்கே போய் படமாக உருமாறுகிறது. அங்கே அது கனவு + கற்பனை கோட்டைகளாக விரிவாக்கம் செய்யப்படுகிறது. உள்ளத்தின் நிறைவினால் மீண்டுமாக நம் வாய் பேச ஆரம்பிக்கிறது. நாம் எதை விசுவாசிக்கிறோமோ; அதுவே வாய் வழியாக வெளியே வருகிறது. வெளியேறிய விசுவாச வார்த்தைகள்; அதற்கேற்ற கிரியைகளைச் செய்ய ***(actions)*** நம்மை உந்தித் தள்ளுகிறது. நம்முடைய விசுவாச முயற்சிகள் முடிவில் நம் வாழ்க்கையில் வெற்றியைக் கொண்டு வருகிறது.

இந்த விதைப்பும் அறுப்பும் பிரமாணம் நம் விஷயத்தில் இப்படித்தான் வேலை செய்கிறது. அதனால் அது சாபம் நீங்கப்பெற்று; பரிசுத்தமாக, வேதனையை கூட்டாத ரீதியில் (அதே நேரத்தில் நம்முடைய வேதனைகளையெல்லாம் நீக்கிப் போடுகிற விதத்தில்) வந்து சேருகிறது. *“நீதியாகிய கனியானது (goodness) சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது. யாக். 3:18.”* இந்த விதமாக நம்மிடம் வந்து சேருகிற செழிப்பைக் கொண்டு இந்தப் பூமிக்கு லாபகரமானவர்களாக நாம் வாழ முடியும்.

## செழிப்பும் தேவனுடைய திட்டமும்:

தேவனுடைய திட்டத்திலிருக்கிற நாம் செழிப்படையும் போது; அந்தச் செழிப்பை உபயோகித்து உலகத்தையே பூரண சுவிசேஷ மயமாக்க முடியும். சுவிசேஷம் பரவும் போது; பூமி கடலைப் போல தேவனைப் பற்றிய அறிவினால் நிரம்பும். (ஏசா. 11:9) தேவனை அறிந்து கொள்ளும் போது; ஜனங்கள் விடுதலையடைய ஆரம்பிப்பார்கள்; கண்கள் திறக்கப்படும். சத்தியத்தை அறிந்து கொண்ட உலக ஜனங்கள்; தங்கள் ஆளுகைக்குள்ளாக இருக்கிற ஐசுவரியங்களை அவர்களாகவே கொண்டு வந்து பரிபூரண சுவிசேஷ வயல்களில் விதைப்பார்கள். இப்படியாக வாக்குத்தத்த கதவோரங்களில் காத்திருக்கும் நாம் அந்த நன்மைகளை நம்முடைய எல்லைகளுக்குள்ளாக கொண்டு வர முடியும். விதைப்பு அதிகரிக்க அதிகரிக்க விளைச்சலும் அதிகமாகும்.

வெகுஜனங்கள் சத்தியத்தை அறிந்து விடுதலையாகிக் கொண்டேயிருப்பார்கள். விதைகள் நல்ல நிலத்தில் விழ ஆரம்பிப்பதால் பலனும் நன்மையாகவே இருக்கும். தேவனுடைய வேலைக்கு ஆட்கள் அதிகமாக வர ஆரம்பிப்பதால்; வேலையும் இலகுவானதாக எளிதானதாக மாற ஆரம்பிக்கும். முள்ளையும் குருக்கையும் விளைவித்துக் கொண்டிருந்த இருதயங்கள்; இயேசுவின் இரத்தத்தினால் நல்ல நிலங்களாகி; ஏதேனின் செழிப்பான மரங்களை முளைப்பிக்கும்! பூமி தேவனுடைய மகிமையினால் ***(glory - magnificence - bliss of heaven - very beautiful - impressive - excellent - outstanding)*** நிறைய ஆரம்பிக்கும். இப்படியாகப் பூமி முழுவதையும் ஏதேனாக்கும் தேவனுடைய செழிப்பின் திட்டம் வெற்றி பெற ஆரம்பிக்கும். இப்போதே இந்தக் காரியங்கள் நடக்க ஆரம்பித்து விட்டது; இதைத் தான் எழுப்புதல் என்கிறோம்.

## எழுப்புதல்? *(a View)*

எழுப்புதல்? ***(stirring - rise from sleep; begin to be active)*** உலகத்தார் பூமியின் மீது என்னென்னவோ செய்து; அதைப் பாதுகாத்து நன்றாக மாற்ற முயற்சிக்கிறார்கள். ஆனால் நாமோ இதே வேலைகளை மனிதர்களின் இருதயத்தில் செய்கிறோம். மனிதன் எப்படியிருக்கிறானோ; அப்படித்தான் பூமியும் இருக்கும். மனிதர்களின் இருதயம் செழிக்கும் போது பூமியும் செழிக்கும். உலகத்தாரிடமிருந்து பூமிக்குரிய ஆசீர்வாதங்கள் நம்மிடம் வரும் போது; நம்மிடமிருந்து ஆவி ரீதியிலான ஆசீர்வாதங்கள் அவர்களுக்கு அதிக அளவில் கடந்து செல்ல ஆரம்பிக்கும். இந்த மறுசுழற்சி ***(recycling)*** முறைமையின் தீவிரம் அதிகரிக்கும் போது; 99% ஆக இருக்கிற சாத்தானின் கூட்டத்தார் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து அங்கே 0% ஐ மட்டும் விட்டு விட்டு நம் பக்கமாக (இயேசுவின் ஆளுகைக்குள்) வந்து விடுவார்கள். 1% ஆக இருக்கிற நாம் (தேவனுடைய திட்டத்தில் இருப்பவர்களின் எண்ணிக்கை) கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாக 100% ஆகிவிடும். அல்லேலூயா ***X 1,00,00,000!***

கற்பனை நன்றாகத்தான் இருக்கிறது என்று கிண்டலடிப்பவர்களுக்கு: பூமியின் மீது **இதுவரையிலும் நடந்து கொண்டிருக்கிற எந்தவொரு நிகழ்வானாலும் சரி; அதன் துவக்கம் ஒரு மனிதனின் சிந்தனை மண்டலத்தில் தான் ஆரம்பமானது என்பதை நிச்சயமாக அறிந்துக் கொள்ளுங்கள்.** அற்பமான அந்த சிந்தனையில் உதித்த காரியம் நிஜமாகவே நடந்தால் எப்படியிருக்கும் என்பதை; கற்பனா சக்தி செய்முறையாகச் ***(demonstrate)*** செய்து காண்பிக்கிறது! இதெல்லாம் ஏற்கெனவே நாம் கற்றுக்கொண்டு வருகிற சத்தியங்கள்.

பிரேரி புல்வெளிப் பகுதிகளில் காட்டுத்தீ பரவினால்; புல் இருந்த அடையாளமே தெரியாதபடி எல்லாவற்றையும் எரித்துப் போட்டு விடும். இப்போது சபை மத்தியில் ஏற்பட்டிருக்கிற இந்த வெளிப்பாட்டின் விழிப்புணர்ச்சியை (எழுப்புதல்) இந்த காட்டுத்தீக்கு ஒப்பீடாக்கிப் பார்ப்போம்! *இனி ஒரு சாபமுமிராது... வெளி. 22:3* என்ற வார்த்தை நிறைவேறுதலுக்குள்ளாகி வரும் காலக்கட்டத்தை கடந்து வந்து கொண்டிருக்கிறோம்.

தேவன் தன்னுடைய திட்டங்களை வேதத்தில் பல இடங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். சிதறியிருக்கும் இந்தக் காரியங்களை ஆவியானவர் உதவியுடன் ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டும். ஒரு விஷயத்தை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இயேசு இல்லாமல் எந்த செயல்பாட்டுக்குள்ளும் இறங்கிவிடக் கூடாது. ஏனென்றால் பிதாவாகிய தேவன் தன்னுடைய சகல கிரியைகளுக்கும் மூலகங்களாக இயேசுவையே உபயோகித்தார். *"கர்த்தர் தமது கிரியைகளுக்கு முன் பூர்வ முதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். நீதி. 8:22." "...ஒரு காரியத்தை செவ்வையாய்ச் செய்வதற்கு ஞானமே பிரதானம். பிர. 10:10" "அவரே (இயேசுவே) தேவனால் நமக்கு ஞானமானார்.1 கொரி.1:31"*

இந்த 3 வசனங்களையும் கூட்டிக்கழித்துப் பார்த்தால்; பிதாவாகிய தேவன் தன்னுடைய சகல சிருஷ்டிப்பையும் இயேசுவையே ஞானமாக்கிச் செயல்பட்டார் என்று பார்க்கிறோம். அவருடைய சிருஷ்டிப்பான பூமியின் மீதும் அதன் நிறைவின் மீதும் அவருடைய திட்டத்தைச் செயல்படுத்தி வருகிற நாம்; அவரைப் போலவே செயல்பட்டால் தான் சரியாக வரும். இயேசு இல்லாமல் ஞானம் இல்லாமல் செய்யப்படுகிற செயல்பாடுகள் எல்லாமே வீணாக முடிந்து போகும். பிதாவாகிய தேவனே இயேசு இல்லாமல் எதையும் செய்யவில்லை என்றால்; நீங்களும் நானும் எப்படிச் செய்யக்கூடும்? உலகத்தாரின் மாயையான வழிகளைப் பின்பற்றி தேவ திட்டத்தை நிறைவேற்ற முயற்சியாதிருப்போமாக. கத்தியைத் தீட்டினால் ஒரு மரத்தைத்தான் வெட்ட முடியும். கொஞ்சம் நேரம் ஒதுக்கி புத்தியை தீட்டியிருந்தால்; ஒரு காட்டையே வெட்டி சாய்த்திருக்கலாம். இயேசுவை முன்னிறுத்தாமல் ஒரு செயலை, காரியத்தை செய்வதைவிட, அதைச் செய்யாமலிருப்பதே நல்லது.

## உலகத்தாரின் கைகளில் சிக்கித் திணறும் தேவ திட்டங்கள்!:

இயேசு இல்லாத உலகத்தார் இந்தப் பூமியை சுதந்தரித்து, கீழ்ப்படுத்தி ஆளுகை செய்து, பண்படுத்தி காக்க முயற்சிக்கிறார்கள். இதையெல்லாம் அவர்கள் செய்யாமல் சும்மா இருந்திருந்தாலே பூமி உருப்பட்டிருக்கும்! ஆனால் என்ன செய்வது? தேவபிள்ளைகளின்

அறியாமையினால் இருள் சூழ்ந்த உலகத்தில் அவர்கள் சில சிறு விளக்குகளை ஏற்ற முயற்சிக்கிறார்கள். தங்களுடைய உள்ளுணர்வுகளின்படி பூமியைப் பாதுகாக்க முயற்சியெடுக்கிறார்கள். தேவனுடையவர்கள் உதறித்தள்ளிய செழிப்பை உபயோகித்து எதையாவது செய்ய வேண்டுமே என்ற ஆதங்கம் அவர்களுக்கு! அவர்களைப் பார்க்கிற தேவ பிள்ளைகளுக்கு வெட்கம் உண்டாவதாக!! *"...ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்த பிரபஞ்சத்தின் பிள்ளைகள் ...அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள். (much more shrewd) லூக்கா. 16:8"* என்றார் இயேசு! அதாவது அதிகப்படியான சூட்சும புத்தியுடன், விவேகத்துடன், புத்திசாலித்தனமாக செயல்படுகிறார்கள் என்றார். நல்ல விஷயங்களில் மட்டுமல்ல, தவறான விஷயங்களிலும் இப்படியே செயல்படுகிறார்கள்.

மிக மோசமான பாவங்களைச் சட்டபூர்வமாக்கி, மக்களைப் பாதுகாக்க முயற்சிகள் எடுக்கின்றன அரசாங்கங்கள்! விபச்சாரம், மது, ஓரினசேர்க்கை திருமணங்கள் இப்படிப்பட்ட காரியங்களைச் சொல்லலாம். செய்கிற பாவத்தினால் வியாதிகள் பெருகாமல், உயிர்ச்சேதம் வராமலிருக்க பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்கின்றன தேசத்து அரசாங்கங்கள். பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக பணம் தண்ணீராக செலவழிக்கப்படுகிறது. என்னைத் தொட்டால் உடம்பு கெட்டுப்போகும்; உயிருக்கும் ஆபத்து என்று எழுதி ஒட்டிக்கொண்டு தான் வருகிறது சிகரெட்! லஞ்சம் கொடுக்காமல் இந்தக் காலத்தில் எந்த காரியத்தைத்தான் செய்ய முடியும? என்று சமாளிக்கிறார்கள். ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டுமானால்; அதற்காகச் சில தவறுகளை செய்யலாம் என்று சமாளிக்கும் மனநிலையில் தான் உலகத்தார் இருக்கிறார்கள். **மற்றவர்களைப் பாதிக்காத அளவில் எந்த தவறையும் செய்யலாம் என்கிறார் ஒரு உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்! விஞ்ஞான உலகமோ பாவங்களையெல்லாம் கணக்கிலேயே சேர்ப்பதில்லை; அவைகள் மனிதனின் குணாதிசயங்களாகக் கருதப்படுகின்றன. திருடனைத் தப்பியோட விட்டுவிட்டு பூட்டை பெரிதாக்குகிறார்கள்!** அநீதியான காரியங்களுக்கு தேவன் ஒத்துழைப்பு தருவதில்லையென்பதால்; தேவ திட்டத்தை நிறைவேற்ற முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

வியாதி விஷயத்தில்... ? இதுவரையிலும் 100% சுகமளிக்கக்கூடிய மருத்துவம் எந்த வியாதிக்கும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஓரளவுக்குச் சுகமாக்க, குறைக்க, கட்டுப்படுத்த... இப்படித்தான் கதை ஓடிக்கொண்டிருக்கிறது. பலவிதமான வியாதிக்கூறுகளோடு ஓட மனிதனும் பழகிக்கொண்டான்! ஜலதோஷம், காய்ச்சல் போன்றவை வியாதியே அல்ல; அவைகள் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இயற்கையாக உடம்பு எடுக்கும் நடவடிக்கை ***(action)*** என்று சொல்லி; வியாதியோடு ***compromise*** ஆகி ஒத்துப் போக ஆரம்பித்து விட்டான். எங்க தாத்தாவுக்குச் சர்க்கரை வியாதி இருந்தது; அதனால் அப்பாவுக்கு வந்தது; அதனால் எனக்கும் வரும் என்று சொல்லி; இன்னும் வராத வியாதியை விசுவாசித்து; அதை வரவழைக்கவும் ***(great in a friendly way)*** துவங்கி விட்டான். வியாதிகளைத் தெய்வமாக்கி; அதற்குக் கோயில் கட்டும் அலங்கோலங்களும் அரங்கேறுகின்றன! ***(e.g., chickenpox - caused by the varicella zoster virus)***

பூமியின் சாபக்கேடுகளுடன் ஒரு உணர்வுபூர்வமான ஒத்துழைப்பு! ***(mutual understand-ing!)*** அதுவும் கடவுளின் நியமம் தான் என்று தப்பாகப் புரிந்து கொள்ளுகிறான். பூமியில் மனிதன் அழுது கொண்டே பிறக்கிறான். பூமியின் மீது முள்ளையும் குருக்கையும் பார்த்த பிறகும் கூட அவன் மனம் சோர்ந்து போகவில்லை. பாடுகளைப் பார்த்துப் பின்வாங்காமல்; விரலைச் சொடுக்கி; சவாலிட்டு முன்னேறுகிறான். பிள்ளைகளைப் பெற்றுப் போடுகிறான்; அவர்களுக்கும் சவாலைக் கற்றுக் கொடுக்கிறான். சாவைப் பார்த்துக் கூட பயப்படுவதில்லை; ஒருவன் செத்தால் நூறு பேர் முளைத்தெழும்புகிறார்கள்! அந்த நூறு பேரும் யுத்தக்கலையைக் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

மனிதனின் நம்பிக்கை சிலந்திப்பூச்சியின் வீடு போலிருக்கிறது; கை பட்டாலே அறுந்து போகிறது. என்றாலும் மீண்டும் மீண்டுமாக கூடு கட்டுகிறான்; **Spider man** ஆக அதில் தாவித் தாவி ஏறுகிறான். சாபத்தை **Takeoff** செய்கிறான்; சாபம் சிண்டைப் பிய்த்துக் கொண்டு நிற்கிறது, சாத்தான் நசுக்கப்பட்ட தலையில் இல்லாத பல்லைக் கடிக்க முயற்சிக்கிறான்! இப்படியாக மனிதச்சங்கிலி நீண்டு கொண்டே போகிறது. தேவனைப் போலிருக்கும் மனிதன் இப்படி வீர சாகசங்களைச் செய்து முன்னேறிக் கொண்டேயிருக்கிறான்.

தரித்திரம்? அதுவும் பிரச்சனையேயில்லை; அரை வயிற்று கஞ்சி, கால் வயிற்றுக் கஞ்சி, பட்டினி, பசி, வயிற்றின் மேல் ஈரத்துணி என்று அதற்கும் பயிற்சி எடுத்துக் கொண்டான். பாறைகளுக்குள் உணவு எதுவுமின்றி வாழும் தேரைகள் போல வாழக் கற்றுக் கொண்டான். தனியொரு மனிதனுக்கு உணவில்லையென்றால்; இந்த ஜெகத்தினை அழித்திடுவோம் என்ற வீர முழக்கத்துடன் பல முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. பலவிதமான சட்டங்கள், சலுகைகள், விலை குறைப்பு, இலவசங்கள் என்று பட்டியல் நீளுகிறது. பாராட்டப்படவேண்டிய விஷயம் தான்; சாப்பாடில்லாமல் சாகிறவர்களின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து விட்டது தான்; ஆனால் தரித்திரம் மாறவில்லை. இன்றைய தினம் வரைக்கும் பிச்சைக்காரர்களைப் பார்க்க முடிகிறது.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் தேவ பிள்ளைகள்! நல்லவனுக்கு காலமில்லை! நல்லதுக்குக் காலமில்லை, நேரமே சரியில்லை, கலி காலம் இது, அவன் விதி அவ்வளவு தான், தலையெழுத்து அப்படி ஒன்றும் செய்ய முடியாது என்றெல்லாம் பேசிப் பேசி ஒய்ந்து போகிறார்கள். தேவனுடைய திட்டத்தில் இருக்கும் நாம் இப்படி வெட்டியாகப் பேசிக் கொண்டிருப்பதால் சாத்தான் அவனுடைய திட்டத்தில் வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கிறான். ஆரம்பத்திலிருந்தே இது தான் நடந்து வருகிறது. ஏதேனிலிருந்து மனிதன் வெளியேற்றப்பட்டவுடனேயே சாத்தான் தன்னுடையத் திட்டங்களுக்கான இலக்குகளை அமைத்துக் கொண்டான்; அதில் படிப்படியாக முன்னேறினான். சிலுவையில் சாத்தானுக்கு என்ன நடந்தது என்பது தேவஜனங்களுக்கு புரியாததினால்; சிலுவையில் சாத்தானின் தலை நசுக்கப்பட்டு விட்ட விபரம் புரியாததால், அவர்களுடைய அறியாமையின் இருட்டை சாத்தான் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான். தலை நசுக்கப்பட்டப் பிறகும் சாத்தான் தன்னுடையவர்களை உபயோகித்து இந்தப் பூமியை சுதந்தரித்து வைத்திருக்கிறான் என்றால்; தேவபிள்ளைகளின் பைத்தியக்காரத்தனத்தை எப்படிப்பட்ட வார்த்தைகளைக் கொண்டு விவரிப்பது?

சாத்தான் உலகத்தார் மூலமாக இந்தப் பூமியைக் கீழ்ப்படுத்தி ஆளுகை செய்கிறான்; ஆனால் மிகவும் மோசமான ரீதியில். அவன் ஆளுகை செய்கிற இலட்சணத்தைத் தான் மேலே பார்த்தோம். ஆனால் அவன் பண்படுத்தவுமில்லை, காத்துக் கொள்ளவுமில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்! விளைச்சலில்லாமல் தரிசு நிலங்கள் வாடிப்போனது; விதைகள் மணல் கட்டிகளினடியில் மட்கிப் போனது. தன்னுடைய பலனால்; அதாவது சாவு, வியாதி, தரித்திரம், இன்னும் சகல விதமான கேடுபாடுகளால் இந்தப் பூமியை நிரப்பினான்.

## தேவ திட்டத்தாராகிய நாம் செய்ய வேண்டியது என்னவென்றால்:...

தேவ திட்டத்தாராகிய நாம் செய்ய வேண்டியது என்னவென்றால்: தேவனுடைய திட்டத்திற்கேதுவாக நாம் ஒவ்வொருவரும் இலக்குகளை ***(target)***அமைக்க வேண்டும்; சாத்தானுடைய திட்டங்களுக்கு எதிரிடையாக அவற்றை அமைக்க வேண்டும். படிப்படியாக, ஒவ்வொன்றாக அவற்றைச் சுதந்தரிக்க ***(achieve*** பண்ண) வேண்டும். இந்தப் பூமியை நமக்குச் சொந்தமாக்க தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் 6000 வாக்குத்தத்தங்களும் இலக்குகளை அடைய நமக்குப் போதுமானவை. வாக்குத்தத்தங்களெல்லாம் உலகம் உருவாகும் முன்னதாகவே நமக்கென்று ஏற்படுத்தப்பட்டிருந்த சகல நன்மைகளையும் கண்டு, களிகூர்ந்து, பெற்றுக் கொள்ள ஏதுகரமானவை! ஏதேனிலிருந்த சகல நன்மைகளையும் மீண்டுமாக நமக்கு வரவழைத்துக் கொடுப்பவை! ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்ற பொட்டலத்தை நம்மிடம் கொண்டு வந்து சேர்ப்பவை! இயேசுவின் மூலம் சிலுவைக்கு கடத்தப்பட்ட ஆசீர்வாதங்களை பதிவிறக்கம் ***(download)*** செய்ய நம்மோடு ஒத்துழைப்பவை!

பூமியைச் சுதந்தரிக்க, அதாவது நமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வாக்குத்தத்தங்கள் மூலமாக இலக்குகளை அடைய வேண்டும். பூமியை நமக்குச் சொந்தமாக்காமல், அதாவது பூமியின் செழிப்புகளை நம்முடைய அதிகாரத்திற்குக் கீழ் கொண்டு வராமல் அதைக் கீழ்ப்படுத்த முடியாது. கீழ்ப்படுத்தாவிட்டால் ஆளுகை செய்ய முடியாது. ஆளுகை செய்யாமல் அதை பண்படுத்த முடியாது. பண்படுத்தாவிட்டால் பாதுகாக்கவும் முடியாது. இப்படியாக ஒன்றுக்கொன்று தொடர்பேற்படுத்தி வேலை செய்ய பரிசுத்தாவியானவர் நமக்கு உதவி செய்கிறார்.

## நீ உன்னையறிந்தால்... (நீ யாரென்று உனக்குப் புரிந்தால்):

நாம் யார் என்பது நமக்குத் தெரிய வேண்டியது மிக அவசியம். நம்மைக்குறித்த முழுவிபரமும் நமக்குத் தெரிந்தால் தான்; தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற நாம் எந்த அளவிற்கு ஏதுவானவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். உலகம் நம்மைப் பற்றி என்ன வேண்டுமானாலும் சொல்லியிருக்கலாம்; ஆனால் அது நிஜமல்ல. தேவன் நம்மைக்குறித்து வேதத்தில் என்னவெல்லாம் சொல்லியிருக்கிறாரோ அதுவே நிஜம். *"நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் ... (மத். 5:14)"* என்று வேதம் சொல்லுகிறது. தேவன் நம்மை அப்படித்தான் வைத்திருக்கிறார், அப்படித்தான் பார்க்கிறார், அப்படித்தான் நம்மை உபயோகிக்கிறார்.

ஒரு இருட்டு அரையின் அலமாரியில் ஒரு பெட்டிக்குள் போடப்பட்டிருக்கும் ஒரு சிறிய மெழுகுவர்த்தி தன்னை இதுவரை மறைத்துக் கொண்டிருந்தது. ஆனால் அது வெளியே எடுக்கப்பட்டு தீக்குச்சியினால் பற்ற வைக்கப்பட்ட பிறகு அதனால் மறைந்திருக்க முடியவில்லை. அதன் தீச்சுவாலையால் ஒளித்துக் கொள்ள முடியவில்லை. இருண்ட அரை முழுவதிலும் அது தன்னை வெளிப்படுத்தியது; மட்டுமல்ல இதுவரையிலும் இருந்த இருட்டையும் அது போக்கடித்துவிட்டது. இதுவரையிலும் பார்க்க முடியாதபடி அரையின் இருட்டுக்குள் சிறைப்பட்டிருந்த பல காரியங்களை பார்க்கவும், அதை எடுக்கவும் அது உதவி செய்தது. ஒன்று நிச்சயம்... உலகத்தில் உள்ள எல்லா இருளும் கூட்டுச் சேர்ந்தாலும் அந்த சிறு மெழுகுவர்த்தி தரும் ஒளியை மறைத்து விட முடியாது.

இப்படிப்பட்ட வெளிச்சமாக, நாம் இந்த உலகத்தின் மீது செயல்படுகிறோமென்றால் நாம் எந்த அளவுக்கு முக்கியமானவர்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். நாம் எந்த அளவுக்கு இந்தப் பூமிக்கு அத்தியாவசியமானவர்கள் என்பதையும் அறிந்து கொள்ளலாம். மின்விளக்கை ***(electric light - bulb)*** எரிய வைக்க ஸ்விட்ச் மேல் கையை வைக்கும் ஒவ்வொரு முறையும் தாமஸ் ஆல்வா எடிசனை நினைக்கிறேன். ***Light*** பல்பு எரிகிறதோ இல்லையோ அவரின் நினைவு என் சிந்தனைப் பகுதியில் மின்னி விட்டுப் போவதென்னவோ நிஜம்! உலகளவில் அவர் இந்த பூமிக்கு வெளிச்சமாயிருந்திராவிட்டால்; இரவு நேரங்களில் விளக்கொளியில் ஜொலிக்கும் இந்தப் பூமியை கனவில் கூட நீங்களும் நானும் பார்த்திருக்கவே முடியாது. அவர் இந்த உலகத்தை விட்டு மறைந்து போன பிறகும்; விளக்கின் வெளிச்சங்கள் அவரை அடையாளம் காட்டிக்கொண்டேயிருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால் **விளக்கின் வெளிச்சம் தேவையில்லாத பகலை விட; விளக்கொளியில் மின்னும் இரவே அதிக ரசனைக்குரியதாக இருக்கிறது!**

நாம் இந்த உலகத்துக்கு உப்பாக, நற்கந்தமாக, பனியாக, நடமாடும் நிருபமாக, ஜாமக்காரர்களாக, காவலாளிகளாக, பொறுப்பாளிகளாக இருக்கிறோம், ராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருக்கிறோம். (***Ref:*** மத்.5:13, 14 2கொரி. 2:15 3:3, சங். 110:3 எரே. 31: 6 வெளி 1:6) ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் எல்லாமே நாம் தான்; உயிர் மூச்சே நாம் தான், நாமில்லாவிட்டால் பூமி உயிரை விட்டு விடும்! கெட்டுப்போகும்... அல்லேலூயா!! சாபத்தால் இருண்டு போன பூமியின் (மனிதர்களின்) இதயத்தில் விளக்கேற்றி வைப்பதும், கெட்டழிந்து செத்துப் போகாமல் அவர்களைப் பாதுகாப்பதும், நாற்றங்களை போக்கி நறுமணம் வீசச் செய்வதும் கெட்டுப் போகாமலிருக்கச் செய்வதும் நம்முடைய வேலையாகும். பூமியின் மீது ஏதேனின் செழிப்பை மீண்டுமாகக் கொண்டு வருவதும், பரிபூரண சுவிசேஷ வேலையைச் செய்வதும், செழிப்பை சாத்தான் திருடாதபடி பாதுகாப்பதும், நம் வேலையாகும். இப்படிச் சொல்லிக்கொண்டே போகலாம்.

## நம்மால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை...

நம்முடைய கையிலிருக்கும் சிறு சிறு வேலைகளைக் கூட பொறுப்பாக, சந்தோஷமாக, முழு மனதோடு செய்யும் போது; இந்தப் பூமி தேவதிட்டத்தை நோக்கி முன்னேறுகிறது. நம்முடைய சிறிய சிறிய முயற்சிகள் கடலில் கரைத்த பெருங்காயம் போலிருக்கிறதே என்று நினைக்கக்கூடாது. சிறுதுளிகள் பெருவெள்ளமாகி கிராமங்களையே அழித்துப் போடுகிற சம்பவங்களைப் பார்த்து வருகிறோமே! ஏன்?, **நோவா காலத்தில் பூமியை மூடிய வெள்ளம், உயர்ந்த மலைச்சிகரங்களுக்கு மேலாக 22 முழ உயரத்திற்கு நின்ற வெள்ளம்; முதலில் ஒரு துளியாகத் தான் இறங்கியது!** தேவனைக் குறித்த சரியான அறிவோடு, சரியான தரிசனத்தோடு,

சரியான வெளிப்பாடுகளோடு ஒரு அடி எடுத்து வைத்தாலே போதும்; பூமியின் சாபக்கேடுகள் நிச்சயம் பின் வாங்க ஆரம்பிக்கும்!

இந்தப் பூமியில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற காரியங்கள் எல்லாமே மனிதர்களின் செயல்பாடுகளினால் உருவானவை. எல்லாமே முதலில் ஒரு மனிதனின் சிந்தனையில் மின்னலாய் உருவானது தான். பிறகு அது தீப்பொறியாகி பூமி முழுவதுமாக பரவுகிறது. நல்லதோ கெட்டதோ எதுவானாலும் இப்படித்தான் நடக்கிறது. தேவனுடைய மன விருப்பத்தின்படியான நீதி வாசமாயிருக்கும் புதிய பூமியை உருவாக்கும் வேலையில் ஒரு புதிய காரியத்தை நாம் ஏன் நம் சிந்தனையில் இன்றைக்கே துவங்கக் கூடாது? *"அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும் புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம். 2 பேது. 3:13."* வேதத்தில் உள்ள எந்தவொரு வாக்குத்தத்தமானாலும் சரி; அதனை விசுவாசிப்பதனால் மாத்திரமல்ல, விசுவாசத்திற்கேற்ற கிரியைகளை நடப்பிப்பதினாலும் தான் நிறைவேறுகிறது. நம்முடைய நல்ல தேவனுடைய நல்ல திட்டங்களை நம்முடைய சிந்தனைக்குக் கடத்திக் கொண்டு வருவோம். ஆதாம் தவறவிட்ட வேலையை நாம் கையிலெடுப்போம்.

*"தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். ஆதி. 2:15."* தேவன் பூமியின் மீது எந்த வேலையையும் முடிக்க வில்லை; துவக்கித்தான் வைக்கிறார்; செய்து முடிக்க வேண்டிய பொறுப்பை மனிதனிடம் விட்டு விடுகிறார் ***(completing & finishing touch).*** **எல்லாவற்றையுமே அவர் பார்த்துக் கொள்வதாக இருந்தால், அவரே செய்து முடித்து விடுவதாக இருந்தால் மனிதனே தேவையில்லையே? அவர் மனிதனை உருவாக்கி இவ்வளவு *risk* எடுக்க வேண்டிய அவசியமில்லையே? புரிந்து கொள்ளவேண்டும்! அவரைப் போலவே அவரால் உருவாக்கப்பட்ட நாம்; அவரைப் போலவே செயல்பட வேண்டும் என்று அவர் எதிர்பார்ப்பதில் எந்த தவறும் இல்லை!**

## *Finishing Touch* நம் கையில்!

பண்படுத்தவும் காக்கவும், தன்னைப் போலிருக்கும் மனிதனால் முடியும் என்று தேவனுக்குத் தெரியும். அதனால் தான் பொறுப்பை ஒப்படைக்கிறார். அவருடைய சாயலின்படியும் ரூபத்தின் படியும் ***(resemblance - portrait)*** என்றால்; அவரைப் போல என்று மட்டுமல்ல, அவரைப் போலவே செயல்படுகிற என்ற அர்த்தத்தில் வருகிறது. அவருக்குப் பதிலாக நாம் இந்தப் பூமியில் நின்று வேலை பார்க்கிறோம். அவர் பரலோகத்தில் செயல்படுவது போல் நாம் பூமியின் மீது செயல்பட வேண்டும். அவர் எதைச் செய்தாலும் அதை முன்னதாகவே மனதுக்குள் நினைத்து, அதை படமாக்கி, ஒழுங்குபடுத்துகிறார். பிறகு அதைப் பேசுகிறார்; பேசியது நடக்கும் என்று விசுவாசிக்கிறார். காலத்தை ஒழுங்குபடுத்தி செயல்படுகிறார்; சகலத்தையும் அதனதன் காலத்தில் நேர்த்தியாக செய்து முடிக்கிறார்.

*"பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று* ***தம்முடைய உள்ளத்தில் சொன்னார்.*** *ஆதி. 8:22."*

*"தேவன் வெளிச்சம்* ***உண்டாகக்கடவது என்றார்,*** *வெளிச்சம் உண்டாயிற்று. ஆதி. 1:3"*

*"அவர் தமது* ***வார்த்தையை அனுப்பி, ...*** *சங். 147:18"*

இப்படித்தான் நாமும் விசுவாசித்து, பேசி, உருவாக்க வேண்டும் என்பது அவருடைய எதிர்பார்ப்பு. ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில் அவர் சொன்னதெல்லாம் உடனடியாக நடந்து விட்டதைப் போலத் தோன்றும். ஆனால் கண்ணிமைப்பொழுதில் ***(fractional second)*** எதுவும் நடந்து விடவில்லை. அவர் வார்த்தையை அனுப்பிக்கொண்டே இருக்கிறார்; அனுப்பினவுடனேயே அது நடந்து விட்டதாகவே விசுவாசிக்கிறார். நடந்து விட்டதாகவே பார்க்கிறார்; மிக நன்றாக இருப்பதாகவும் சொல்கிறார்! எப்பேர்ப்பட்ட விசுவாசம் பாருங்கள்! சொல்லப்பட்ட வார்த்தைகள் காலத்தைக் கடந்து செல்கிறது. காலம் என்பது பூமியின் மீது தேவன் நியமித்திருக்கும் பலவிதமான பிரமாணங்களில் ***(law - rule - system)*** ஒன்று. தேவன் இந்தப் பிரமாணங்களின் அடிப்படையில் தான் பூமியின் மீது செயல்படுகிறார். பூமியும் அதன் நிறைவும் (நாமும்) இயற்கையின் மீது

தேவன் நியமித்திருக்கும் இந்த சட்ட திட்டங்களின்படி தான் இயங்கியாக வேண்டும்; வேறு வழியில்லை.

இப்படி தேவனால் அனுப்பி விடப்பட்ட வார்த்தைகள், காலம் என்ற சட்ட ஒழுங்கின்படி ஓடி; முடிவில் கண்களால் காணக்கூடிய ஒரு உருவத்தை அடைகிறது. ஆதியாகமம் 1—ம் அதிகாரத்தில் எல்லாமே இப்படித்தான் உருவானது. கவனியுங்கள்: ... *"தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் **முளைப்பிக்கக்கடவது** என்றார்: அது அப்படியே ஆயிற்று. பூமியானது ...முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார். (ஆதி. 1:11, 12)"*

அடுத்ததாக... இன்னொரு வசனத்தைக் கவனியுங்கள்: *"தேவன் தம்முடைய சாயலாக **மனுஷனைச் சிருஷ்டித்தார்,** அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். ஆதி. 1:27."* ஆனால் ஆதி. 2:5—ல் *"நிலத்தினுடைய சகலவிதச் செடிகளும் பூமியின் மேல் இன்னும் உண்டாகவில்லை, நிலத்தினுடைய சகலவித பூண்டுகளும் இன்னும் முளைக்கவில்லை; ஏனெனில் தேவனாகிய கர்த்தர் பூமியின்மேல் இன்னும் மழையைப் பெய்யப்பண்ணவில்லை, நிலத்தைப் பண்படுத்த மனுஷனும் இருந்ததில்லை."* என்று இருக்கிறது! ஏன்? தேவன் மனதுக்குள் விசுவாசித்து; தான் உருவாக்கப்போகிற காரியங்களைப் பற்றின ஒரு படத்தை ***(image - mental picture)*** தனது மனதுக்குள் உருவாக்குகிறார். பிறகு அதையே பேசுகிறார், பேசினபடியே நடந்து விட்டதாக விசுவாசிக்கிறார், நடந்து விட்டதாகவே அதற்கு ***response*** கொடுக்கிறார். பிறகு தன் விசுவாசத்திற்கேதுவான செயல்பாடுகளில் ***(actions)*** இறங்குகிறார். அப்பொழுது ஒவ்வொன்றாக கண் காணும் அளவில் நடக்க ஆரம்பிக்கிறது; தானாக அல்ல, அவரே நடப்பிக்கிறார்!

*"அப்பொழுது மூடுபனி பூமியிலிருந்து எழும்பி, பூமியையெல்லாம் நனைத்தது. தேவனாகிய கர்த்தர் **மனுஷனை பூமியின் மண்ணினாலே உருவாக்கி,** ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். ஆதி. 2:6,7."* ஆதியாகமம் 1, 2 அதிகார கால கட்டங்களில் பூமியின் மீது மழை பெய்யவில்லை; அதற்கான அவசியமும் இருந்ததில்லை. பூமியைச் சுற்றிலுமாக ஜலத்திரை ***(water canopy)*** இருந்ததினால்; மழை பெய்வதற்கான அவசியம் இருந்ததில்லை. பூமியின் மீது சீதோஷ்ண நிலை சமச்சீராக இருந்தது. சூரியக்கதிர்கள் ஜலத்திரையினூடாக கசிந்தது. பூமியின் மீது சுட்டெரிக்கும் வெப்பம் படாதபடியினால் கடல் நீர் ஆவியாகவில்லை; அதனால் வானத்தில் மேகங்களும் இருந்ததில்லை. மூடுபனி பூமியிலிருந்தே தோன்றி பூமியை நனைத்தபடியினால் விவசாயத்திற்கு பிரச்சனை இருந்ததில்லை. கடலில் உப்பில்லாத நல்ல நீர் இருந்தபடியினால்; பூமியின் ஜீவராசிகளுக்கு தண்ணீர் பிரச்சனையும் இருந்ததில்லை!

*"தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து **முளைக்கப்பண்ணினார்.** ஆதி. 2:9."* தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார். ஆதி. 2:15. தேவன் செயல்படும் விதத்தை இந்த வசனங்களின் மூலமாக புரிந்து கொள்ளலாம்.

முளைப்பிக்கக்கடவது என்றார்: அது அப்படியே ஆயிற்று. பூமியானது ... முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார். முளைப்பிக்கக்கடவது என்று தேவன் சொன்னவுடன் முளைக்கவில்லை தான்; ஆனால் முளைத்து விட்டதாகவே தேவன் பார்க்கிறார். மூடுபனி எழும்பி பூமியை நனைத்த பிறகு தான் தேவன் தாவர வகைகளை முளைக்கப் பண்ணுகிறார் (அதாவது முளைத்தது) என்று அறிந்து கொள்ளலாம். மனிதனைச் சிருஷ்டிக்கும் விஷயத்திலும் அப்படித்தான்; உடனே மனிதன் உருவாகிவிடவில்லை. பூமியின் மண்ணை மூடுபனி தண்ணீரினால் நனைத்து எடுத்து உருவாக்கி; ஜீவன் கொடுக்கிறார்; அப்போது தான் மனிதன் உருவாகிறான் என்பதையும் பார்க்கலாம். முதலில் நிலத்தைப் பண்படுத்த மனிதன் இருக்கவில்லை, பிறகு தான் மனிதனை உருவாக்கி, ஏதேனிலே கொண்டு வந்து வைத்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைக்கிறார் என்று பார்க்கிறோம். மனஉரு... விசுவாசம்... பேசுதல்... செயல்படுதல்... கண்

காணும் விதத்தில் கொண்டு வருதல்... இப்படியாக படிப்படியாக ஒன்றன் பின் ஒன்றாக தேவன் செயல்படுவதை, செயல்படுத்துவதைப் பார்க்கிறோம். இதைப் போலவே நாமும் செயல்பட்டு தேவனுடைய திட்டத்திற்கு *(finishing touch)* முடிவுரு கொடுக்க வேண்டும்.

## *Risk* எடுத்துதான் ஆக வேண்டும்:

பூமியின் மீதான தேவனுடைய திட்டத்தில் பெருமளவிலான காரியங்கள் தேவனுடைய தொடக்க வேகத்துடன் நின்று போனது, வெறும் கற்பனை *(imagination)* யுடன் நின்று போனது. தொடர்ச்சியாக வேலை செய்து எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தி முழுமைப்படுத்தும் பொறுப்பு நம்மிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. எப்படியென்றால் ஏதேனில் வைக்கப்பட்ட ஆதாமும் ஏவாளும் தேவன் கொடுத்த வேலையை உருப்படியாகச் செய்யவில்லை. அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்; ஆனால் அவன் பண்படுத்தினானா? காத்துக்கொண்டானா? என்பது தான் கேள்வி? இல்லை என்பது தான் பதில்! *"அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பி விட்டார். ஆதி. 3:23"*

அன்று முதல் இன்று வரை பூமியைப் பண்படுத்தும் வேலையைத் தேவனுடைய பிள்ளைகள் செய்து வருகிறார்கள். பூமியை என்றால் பூமியிலுள்ள மக்களைக் குறிக்கிறது. மனிதர்களை பண்படுத்தி விட்டாலே போதும், பூமி தேவன் எதிர்பார்த்த அளவுக்கு நேர்த்தியாக மாறி விடும். மனிதர்களின் இருதயத்தை பண்படுத்தும் வேலை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூமியின் மக்கள் தொகை 800 கோடியை நெருங்கிக்கொண்டிருக்கிறது. மூன்று விதமான பிரிவினர் இதில் காணப்படுகிறார்கள். இதில் 200+ *(approx.,)* கோடி ஜனங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டவர்கள் (புரியாத பாஷையில் சொல்ல வேண்டுமானால் "இரட்சிக்கப்பட்டவர்கள்"!) அடுத்த 200+ கோடி ஜனங்கள் *(approx.,)* இயேசுவைக் கேள்விப்பட்டிருக்கிறார்கள்; ஆனால் ஏற்றுக் கொள்ளவில்லை. அவரை ஒரு நல்ல மனிதனாக, மதத் தலைவனாக, சிறிந்த அறிஞராக, தேவனுடைய தூதனாக ஏற்றுக் கொள்கின்றனர். மூன்றாவது கூட்டத்தார் 300+ கோடி *(approx.,)* இயேசுவை கேள்விப்பட்டிராதவர்கள்; அவரின் பெயர் கூட தெரியாத ஜனங்கள்! அறிவியல் வளர்ச்சி வானைத் தொட்டுவிட்ட இந்தக் காலகட்டத்தில்; ஆயிரக்கணக்கான தகவல் தொடர்புகள் *(media - mass communication)* உண்டாக்கப்பட்டிருக்கிற இந்நாட்களில்; இந்த அளவுக்கு தரம் தாழ்ந்து, பின்தங்கிய நிலையில், மிருகங்களைப் போல வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் இன்னமும் இருக்கிறார்கள் என்பது நம்பவே முடியாத ஒரு காரியமாக இருக்கிறது. ஏனென்றால் இதுவரை பூமியின் மீது ஏற்படுத்தப்பட்ட எல்லா வழிமுறை ஊடகங்கள் (*media*-க்கள்) வழியாகவும் இயேசு அறிவிக்கப்படுகிறார்.

*"அவர்கள் கேள்விப்படவில்லையா என்று கேட்கிறேன்; கேள்விப்பட்டார்கள்; அவைகளின் சத்தம் பூமியெங்கும் அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறதே. ரோமர். 10:18."* இந்த வசனத்தை பவுல் வேறொரு சத்தியத்தை விளக்குவதற்காக எழுதுகிறார் என்றாலும்; இங்கேயும் இது பொருந்தும். சுவிசேஷத்தை எல்லோருமே கேட்டார்கள் தான்; என்றாலும் *"... கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை. எபி. 4:2."* அதாவது விசுவாசமில்லாமல் கேட்டார்கள் என்று பார்க்கிறோம்.

கீழே வரும் வசனங்கள் மூலமாக இன்னும் கொஞ்சம் விளக்கமாகப் பார்ப்போம்: கேள்விப்பட்டாலும், அவர்கள் விசுவாசித்து இயேசுவை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு இன்றைய பிரசங்கங்கள் இல்லை என்பது தான் உண்மை. **நான் இயேசுவை ஏற்றுக் கொள்ளும் முன்னதாக ஆயிரம் பிரசங்கங்கள் கேட்டதுண்டு; என்றாலும் நான் விசுவாசித்து சுவிசேஷத்தை ஏற்றுக் கொள்ளும் அளவில் ஒரு பிரசங்கம் தான் அமைந்தது! இந்த ஒரு பிரசங்கத்துக்காக நான் 999 பிரசங்கங்களைத் தாண்டி வரவேண்டியதாயிருந்தது!** தேடிச் செல்வது கஷ்டம் தான், கால்கள் சோர்ந்து போகும், மனம் களைத்துப் போகும், அலுப்பையும் சலிப்பையும் சந்திக்க வேண்டியதாயிருக்கும். என்றாலும் என்ன செய்வது; தேடுதல்கள் தேவையில்லாத, எந்தவொரு குறைவுமில்லாத செழிப்புள்ள வாழ்க்கைக்குள் போக வேண்டுமானால்; இப்போது எதற்கும் துணிந்தாக வேண்டும் (*risk* எடுத்துத்தான் ஆக வேண்டும்); வேறு வழியில்லை.

*"அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால்*

*எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்? ரோமர். 10:14, 15"*
ஒரு மனிதன் செழிப்பை அடைவதற்காக தேவன் எப்படி படிப்படியாக காய்களை நகரச் செய்கிறார் என்பதைக் கவனியுங்கள்! விசுவாசம் வளர வேண்டுமானால்; அதற்கேற்ற காரியங்களைக் கேள்விப்பட வேண்டும். விசுவாசம் வருவதற்கேதுவான காரியங்கள் தேவனுடைய வார்த்தையில் தான் புதைந்திருக்கின்றன. உலகத்தில் உள்ள பலதரப்பட்ட மனிதர்களால் எத்தனையோ விதமான வார்த்தைகள்; பற்பல சூழ்நிலைகளுக்கு நடுவே பேசப்படுகின்றன. ஆனால் அந்த வார்த்தைகளைக் கேட்கும் போது விசுவாசம் பிறப்பதில்லை. ஏனென்றால் காணப்படுகிற உலகத்தை நம்பி வாழ்கிற உலக மனிதர்களால், இன்னும் காணப்படாத காரியங்களை நம்பி பேச முடியாது. விசுவாசம் என்பது காணப்படாதவைகளை நம்பக்கூடிய ஆற்றலை நமக்குக் கொடுக்கிற ஒரு மாபெரும் பரலோக சக்தி. அது காணப்படாத தேவனுடைய வார்த்தைகளிலிருந்து தான் வெளிப்படுகின்றன. அப்படிப்பட்ட தேவனுடைய வார்த்தைகளை பிரசங்க வடிவத்தில் கொண்டு வரும் போது தான்; கேட்பவர்களின் மனதில் விசுவாசம் உருவாகும். விசுவாசம் வந்தவுடன் இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள்.

இயேசுவை இருதயத்தில் ஏற்றுக் கொண்டு; அவரை விசுவாசித்து, தொழுது கொள்ளும் மனிதனுக்கு; இரட்சிப்பைப் பற்றிய காரண காரியங்கள் சரியாக பிரசங்கிக்கப்படுவதில்லை என்பதே உடனடியாக தீர்வு காணவேண்டிய மிகப் பெரிய பிரச்சனையாகும். இதனால் தாங்கள் இரட்சிக்கப்பட்டதின் நோக்கம் முடிவு வரை அவர்களுக்குத் தெரியாமலேயே போய்விடுகிறது; அவர்களும் போய் விடுகிறார்கள் ஒரு முடிவை நோக்கி! **தங்களைக் குறித்த பூலோகத் திட்டத்தைப் பற்றி எதுவுமே தெரியாமல்; சோகத்தில் மூழ்கி பிழியப்பிழிய அழுது விட்டு பரலோகம் வந்து சேருகிறார்கள்; ஐயோ பாவம்! தேவனுடைய திட்டத்தின் மீது காலடி பதிக்காமல் பறந்து பரலோகம் சேர்ந்த தேவபிள்ளைகள் அங்கேயிருந்து பூலோகத்தைப் பார்த்து பிழியப்பிழிய அழுது கொண்டிருக்கிறார்கள் என்பது இவர்களுக்குத் தெரியுமா? (*ref:* வெளி. 21: 3, 4)**

## நிறைவானதை (செழிப்பை) பிரசங்கிப்போம்; குறைவானது (தரித்திரப்பிரசங்கங்கள்) தானாகவே ஒழிந்து போகும்:

...எல்லாருக்கும் கர்த்தரானவர் தம்மைத் தொழுது கொள்ளுகிற (இரட்சிக்கப்படுகிற) யாவருக்கும் ஐசுவரிய சம்பன்னராயிருக்கிறார். ரோமர். 10:12. இரட்சிக்கப்படுகிற இளம் விசுவாசிகள் ஒவ்வொருவரும் அடுத்தக்கட்டமாக ஒரு ஐசுவரியம் நிறைந்த செழிப்பின் வாழ்க்கைக்குள் (ஏதேனுக்குள்) அடியெடுத்து வைக்க வேண்டுமென்பதே நம் தேவனின் விருப்பமாக இருக்கிறது என்பதைப் பார்க்கிறோம். இப்படியிருக்க, **தேவனுடைய பிள்ளைகள் செழிப்பாக இருப்பது தவறு என்ற உட்கருத்தோடு செழிப்பை போதிக்கிற பிரசங்கங்களுக்கு எதிராக பிரசங்கம் செய்வதற்காகவே ஒரு பெருங்கூட்டம் எழும்பி முழுவேகத்தோடு செயல்படுகிறது!** அவர்களுக்கு, அதாவது **அவர்களின் தரித்திரப் பிரசங்கங்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பதற்காக ஒரு புயல் மையம் கொண்டிருப்பது உங்களுக்குத் தெரியுமா? வேறு எதுவுமில்லை, நாங்கள் தான் அந்த சூறாவளிப் புயல்! அழுமூஞ்சிப் பிரசங்கங்களுக்கும், ஒப்பாரிப் பாட்டுக்களுக்கும் *(full stop)* முற்றுப்புள்ளி வைக்கவே நாம் வந்திருக்கிறோம்! (புயலாக மையம் கொண்டிருக்கிறோம்; பெருமழை பெய்யப்போவது சர்வ நிச்சயம்!)** நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்து போம். 1 கொரி. 13:10

அங்குமிங்குமாக சிறு சிறு தூறல்கள்... ஜில்லென்று தென்றல் காற்று புன்சிரிப்போடு மெதுவாக நகர்ந்து கொண்டேயிருக்கிறது! **தரித்திரப் பாட்டுப் பாடி, கேட்டுக் கொண்டிருக்கிற அப்பாவி விசுவாசிகளின் கொஞ்ச நஞ்ச விசுவாசத்தையும் முழுவதுமாக கவிழ்த்திப் போட்டுக் கொண்டிருக்கிற நியாயப்பிரமாணம் சார்ந்த பிரசங்கியார்களுக்கு நிலவரம் புரியவில்லை. ஏனென்றால் இந்தப் புயலைப் பற்றிய எந்த வித அறிவிப்பையும் அரசாங்கம் கொடுப்பதில்லை, எச்சரிப்பின் கொடியையும் ஏற்றுவதில்லை!** ஆனால் **பரலோக அரசாங்கத்தில் *Government* இருந்து எச்சரிக்கிறோம்... கவனியுங்கள்: எந்த வினாடியிலும் புயல் கரையைக் கடக்கலாம்!** மூடப்பட்ட ஏதேனின் (செழிப்பின்) கதவைத் திறந்து வைக்கவே இயேசு வந்தார். மனுக்குலத்தை செழிக்கச் செய்யவே இயேசு வந்தார். (*ref:* நெகே. 9:35, சங். 65:9, 66:12, 72:7, ஏசா. 5:1, 29:17, 32:16, அப். 14:17,).

மூழ்கடிக்கப்பட்ட ஏதேனை மேலே கொண்டு வரவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். பூமியின் ஆரம்பக் கட்டத்திலேயே தேவனுடைய ஒரு செழிப்பின் திட்டம் (ஏதேன்) மூழ்கடிக்கப்பட்டுப் போனது. எங்கும் எழில் மயமாக பூத்துக் குலுங்கிய செழிப்பான பரலோக இராஜ்ஜியத்திற்கொப்பாக ஒரு பூலோக இராஜ்ஜியத்தை உருவாக்கத் தேவன் திட்டமிட்டார்; அதைச் செய்தும் முடித்தார். பரலோகத்தை நாம் கண்களால் பார்க்க முடியாது; ஆனால் பூலோகத்தை நம் கண்களால் பார்க்க முடியும்; இதைத் தவிர எந்த விதமான வித்தியாசமுமில்லாதபடி முப்பரிமாணமாக ***(three dimensional)*** பூமியை உருவாக்கினார். செழிப்பின் தேவன் (ஐசுவரிய சம்பன்னர் – ***richly blesses)*** தன்னைப் போலிருக்கும் மனிதன்; தன்னைப் போலவே எந்தவொரு குறைவுமில்லாதபடி செழிப்பாக இருக்க வேண்டும் என்று விரும்புவதில் ஆச்சரியம் எதுவுமில்லை. **மனிதனுக்காக பெரிய எதிர்பார்ப்போடும், கனவுகளோடும் உருவாக்கப்பட்ட ஏதேனின் செழிப்பு மனுக்குலத்தை விட்டுப் பறிக்கப்பட்டபோது; தேவனுடைய கனவுகள் எப்படிப்பட்ட வேதனைகளோடு கலைந்து போயிருக்கும் என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள்!**

*மனிதனை உருவாக்கியதற்காக தேவன் மனஸ்தாபப்பட்டார்;* ***he was so filled with regret.*** *ஏமாற்றமடைந்தார். (ஆதி. 6:6). மனிதன் இழந்து போன ஏதேனின் செழிப்பை மீட்டுக்கொடுக்க வந்த தேவனுடைய குமாரனாம் நம் கர்த்தர் இயேசு; தன் ஜனங்களின் நிலைமையைப் பார்த்து கண்ணீர் விட்டு அழுதார்! (லூக்கா 19: 41). ஏன்? தொடர்ச்சியான லூக்கா 19:42, 43, 44 வசனங்களை வாசித்துப் பாருங்கள். பரிசுத்தாவியானவரை துக்கப்படுத்தும் வேலைகளும் இன்றைக்கும் நடந்துகொண்டு தான் இருக்கின்றன (எபே. 4:30)* தங்களுக்காகத் தேவன் ஏற்படுத்தி வைத்திருக்கும் சகல நன்மையான காரியங்களைப் பற்றி தேவனுடைய பிள்ளைகள் சிந்திப்பது கூட கிடையாது! சோகக் கதைகளை எழுதி, படமெடுத்து, அழு அழு என்று அழுது; கண்ணீரை டவலில் பிடித்து பிழிவதே இவர்களின் வேலையாகிப் போனது. சோகமே இவர்களுக்கு சுகமாகிப் போனது; முகாரி பாடிய தாலாட்டுப் பாடல்களில் தூங்கியும் போனார்கள். திடீரென்று கண்விழித்து பார்த்தால் ... ? பரலோகத்தில் இருக்கிறார்கள்! தாங்கள் பூமிக்கு அனுப்பப்பட்ட நோக்கம் எதையும் நிறைவேற்றாததினால் அவர்களின் ***Project file*** ல் வெற்று வெள்ளைக் காகிதங்கள் படபடக்கின்றன. தேவன் அதை அவர்களுக்குக் காட்டி விளக்கிச் சொன்ன பிறகு தான் இந்த விவகாரமே தேவபிள்ளைகளுக்குப் புரிகிறது! பூமியிலிருக்கும்போது புரிந்திருக்க வேண்டிய காரியங்களெல்லாம் பரலோகத்திற்குப் போன பிறகு தான் புரிகிறது! என்ன செய்வது, புரியும் அளவுக்கு எடுத்துச் சொல்ல பூமியில் ஆளில்லாமல் போனது தான் (புதிய உடன்படிக்கையின் ஊழியர்களின் பற்றாக்குறை) இந்தச் சோக நிலைக்கு காரணமாகிப் போனது.

## கொண்டாடுவோம்! *Let us Celebrate!*:

பூமியின் சோக மேகங்கள் பரலோகம் வரையிலும் பரவிப்போகாதபடி பாதுகாக்கும் பொறுப்பு நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. *"...மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கும்... லூக். 15:7."* ஒவ்வொரு மனிதனும் இரட்சிக்கப்படும் போதும் பரலோகத்தில் ஒரு திருவிழாக் கொண்டாட்டமே நடக்கிறது! (1.3.1985 அன்று எனக்காகவும் ஒரு ***Celebration*** பரலோகத்தில் நடந்தது!) ஆனால் கவனிக்கப்பட வேண்டிய ஒரு காரியமுண்டு. அந்த ஒரு நாளுடன் பரலோகத்தில் மனந்திரும்புகிற மனிதனைக் குறித்த சந்தோஷம் நின்று போய் விடுவது தான் அது! மனந்திரும்பியவுடன் தங்களைக் குறித்த தேவனுடைய திட்டத்தை கையிலெடுத்து; சவாலுடன் முன்னேறிச் சென்று ஜெயிக்கும் தேவப்பிள்ளைகள் தான் பரலோகத்தின் சந்தோஷத்தை நீடிக்கச் செய்கிறார்கள். எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருக்கும் இந்தக் கூட்டத்தினரால் தான் பரலோகத்தின் சந்தோஷம் நீடித்துக் கொண்டிருக்கிறது.

பூலோகத்தின் சாபத்தை நீக்கி; ஏதேனின் சந்தோஷப்பூக்களை பிரசவிக்கச் செய்வதற்காக விண்ணின் மகிமையை துறந்து வந்தாரே இயேசு! அவர் சிலுவையில் தொங்கிய போது எந்த அளவிற்கு பரலோகத்தில் சோக அலையடித்திருக்கும்! இதையெல்லாம் யோசித்துப் பார்த்திருந்தோமானால்; நமக்குக் கொடுக்கப்பட்டிருந்த தேவனுடைய திட்டங்களடங்கிய ***Project file*** ஐத் தூக்கி பரண் மீது போட்டுவிட்டு, வெறுங்கையாக பரலோகத்திற்கு ***ticket*** எடுத்திருக்க மாட்டோம்! கர்த்தர் இயேசுவால் திறந்து வைக்கப்பட்ட ஏதேனின் அழகுப் பூக்களின் முகத்திலோ சோகத்தின் கருமை! அவைகள் அழ ஆரம்பிக்கும் முன்னதாக... இரட்சிக்கப்பட்ட

தேவபிள்ளைகளே, ஏதேனுக்குள் திரும்புவோம் வாருங்கள்!

*நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள்; இரட்டிப்பான நன்மையைத் தருவேன், இன்றைக்கே தருவேன். சக. 9:12* ***Return , you exciles who now have hope; return to your place of safety. Now I tell you that I will repay you twice over with blessing for all you have suffered.*** தேவன் உருவாக்கின செழிப்பான நாட்டிலிருந்து கடத்தப்பட்டு, முட்கள் நிறைந்த பாலைவனத்துக்குள் போய் வாழ்ந்து கொண்டிருக்கும் எந்தவொரு மனிதனுக்கும் சந்தர்ப்பங்கள் காத்துக் கொண்டிருக்கின்றன. யோசித்துக் கொண்டு நிற்காதீர்கள்; சந்தர்ப்பங்கள் காலப்பிரமாணத்துடன் இணைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் கடந்து போய்க்கொண்டேயிருக்கும். இயேசு கிறிஸ்து செத்து, சாத்தானை ஜெயித்து, உயிரோடு எழுந்த நாள் முதற்கொண்டே ஏதேனின் கதவுகள் திறந்து தான் கிடக்கின்றது. ஜீவவிருட்சத்திற்கு போகும் பாதையில் இப்போது காவல் காப்பவர்களும் இல்லை. ஆனால் இயேசு கிறிஸ்து உயிரோடு எழும்பி பரலோகத்திற்கு போய் 2000 வருஷங்கள் ஆன பிறகும்; இன்னமும் ஆதியாகமம் 3: 23, 24 வசனங்களையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கும் தேவ ஜனங்கள்! அறியாமையின் இருள் விலகி; இயேசுவின் முகத்தின் அறிவின் வெளிச்சம் எங்கும் வீசுவதாக! ஆமென்.

## நீச்சலாழத்திற்குப் போய், ஏதேனை மீட்டு வருவோம் வாருங்கள்!:

மனிதன் ஏதேனை விட்டு வெளியேற்றப்பட்டபிறகு பூமியில் ஏற்பட்ட சீற்றத்தினால் (நோவாவின் கால உலகளாவிய வெள்ளம்) அந்த செழிப்பின் தோட்டம் தண்ணீரினாழங்களில் மூழ்கடிக்கப்பட்டுப் போனதை எசே. 31: 16, 18 வசனங்களின் மூலம் நிதானிக்கலாம். *(... பூமியின் தாழ்விடங்களில் ஏதேனின் விருட்சங்களும்... ஏதேனின் விருட்சங்களோடே கூட நீயும் பூமியின் தாழ்விடங்களில் ... ).* பூமியின் ஆரம்பக் கட்டத்தில் தேவன் ஏற்படுத்தின எழுத்தின் படியான ஏதேனை மேலே இழுத்துக் கொண்டு வர முடியாது. அப்படியே மேலே கொண்டு வந்தாலும் அதனால் யாருக்கும் எந்தவித பிரயோஜனமும் இருக்கப் போவதில்லை. இப்போது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய சத்தியம் அதை விட முக்கியமானதொன்று. நம்முடைய தேவன் செழிப்பின் தேவன். தேவன் மனிதனை உருவாக்கத் தேவையான சகல காரியங்களையும் (மூலாதாரங்கள் – ***basic materials)*** தன்னிடமிருந்து தான் எடுத்தார் என்பது நமக்குத் தெரியும் (ஆதி. 1:26) அதனால் நிச்சயமாக அவர் மனிதனை செழிப்பானவனாகத்தான் உருவாக்கியிருக்க முடியும். ஆசீர்வதிக்கப்பட்டவனாக, சகல நன்மைகளாலும் நிறையப்பெற்றவனாகத்தான் அவனை இந்தப் பூமிக்கு அனுப்பினார். அதற்கேற்றபடி சகல நன்மைகளாலும் நிறைத்து; ஒரு குறைவுமில்லாத இடத்தில் அவனை வைத்தார்; அது தான் ஏதேன்!

பணமில்லாமல் தரித்திரத்தோடு, வியாதியோடு, சாபச் சீர்கேடுகளோடு, துன்ப துயரங்களோடு, கவலை கண்ணீர்களோடு வாழ மனிதனால் முடிவதில்லை. ஏனென்றால் இவைகளெல்லாம் மனிதனுக்காக உருவாக்கப்பட்டதல்ல. சாத்தானால் துவக்கி வைக்கப்பட்ட சாபத்தினால் உருவானவைகள். அதனால் தான் இவைகள் மனிதனுக்கு ஒத்து வருவதில்லை, மனிதனும் இவைகளுடன் ஒத்துப் போவதில்லை; அவைகள் மனிதனுக்கு அலர்ஜியாக ***(hypersensitive)*** இருக்கின்றன. பிரச்சனைகள் வந்தவுடனேயே முதலில் மனிதன் அதை எதிர்க்கிறான், வெளியே வரவே போராடுகிறான்.

அது போகட்டும், தேவன் நமக்காக வைத்திருக்கும் சந்தோஷமான, நேர்த்தியான, செழிப்பான வாழ்க்கையை நாம் ஏன் தவற விட ***(miss*** பண்ண) வேண்டும்? கண்டிப்பாகக் கூடாது; இனி மேலும் சாத்தான் நம்முடைய செழிப்பைத் தவறாக உபயோகிப்பதை ***(misuse*** பண்ணுவதை)ப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கக்கூடாது; ஒரு கை பார்ப்போம் அவனை! *ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு ஏதேன் ஒளிந்திருப்பது உங்களுக்குத் தெரியுமா? "மனுஷனுடைய இருதயத்தின் யோசனை ஆழமான தண்ணீர் போலிருக்கிறது; புத்திமானோ அதை மொண்டெடுப்பான். நீதி. 20:5"* தேவன் மனிதனுக்கென்று விசேஷித்த விதமாக உருவாக்கின "செழிப்பு" என்ற ***concept (an abstract idea*** – எண்ணம் – மனஉரு) அவனுக்குள்ளேயே தான் இருக்கிறது. எந்தவொரு குறைவுமில்லாமல் சகல சௌபாக்கியங்களோடு இந்தப் பூமியில் வாழ்ந்து சுகித்திருக்க என்னென்ன தேவையோ அத்தனை காரியங்களையும் அவனுக்குள்ளாகவே வைத்துத்தான் ***(attach)*** அனுப்புகிறார்.

ஆனால் பூமியில் அவன் வந்து பிறந்து வளர ஆரம்பிக்கும் போது இந்த உன்னதமான இரகசியங்களெல்லாம் அவனுக்கு மறைக்கப்பட்டுப் போகிறது. ஏன்? என்ன நடந்தது என்பதெல்லாம் ஓரளவுக்கு நமக்குத் தெரிந்தவைகள் தான். என்றாலும் இன்னும் தீர்க்கமாக *(accurate)* பார்ப்போம். மொத்த மனுக்குலத்தின் பிரதிநிதியான முதல் மனிதன் ஆதாம் பாவம் செய்ததினால்; ஒட்டுமொத்த மனுக்குலமும் அதனால் பாதிப்பிற்குள்ளானது. ஒட்டு மொத்த மனித குலமும் அவனுடைய பிரதிநிதித்துவத்துக்குள் தள்ளிவிடப்பட்டது. அவனுடைய வித்தின் மூலமாக பாவ சுபாவம் கடத்தப்பட்டு சந்ததி சந்ததியாக எல்லோருக்குள்ளும் வந்து விட்டது. அதனால் மனிதன் அப்படித்தான் பிறந்தாக வேண்டும் வேறு வழியில்லை. தேவன் பூமியின் மீதுள்ள எல்லா காரியங்களையுமே பிரமாணங்களினடிப்படையில் இயங்கும்படி வைத்து விட்டதால்; அதை மாற்றவும் முடியாது. *"... நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள். சங். 51:5."* அதுமட்டுமல்லாமல் கர்ப்ப வேதனையோடும், மனதுக்கத்தோடும் பிள்ளையைப் பெற்றெடுக்க வேண்டியதாயிருக்கிறது. (ஆதி. 3:16, 1 நாளா. 4:9).

சரீரத்திற்குள்ளாக இருக்கிற உண்மையான மனிதனின் ஆவிக்குரிய மனக்கண்கள் திறந்தால் தான்; அவன் தேவனுக்கென்று செயல்படமுடியும். *"தேவனுடைய சாயலாயிருக்கிற கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தின் ஒளி, அவிசுவாசிகளாகிய அவர்களுக்கு பிரகாசமாயிராதபடிக்கு, இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான். 2 கொரி. 4:4"*

## எசேக்கியேல் கண்ட நீச்சலாழங்களில் நாம் ... :

ஜென்ம பாவம் மனிதனை அவனுக்குள்ளிருக்கும் செழிப்பினடிப்படையில் வாழ முடியாதபடி செய்து; சாபத்தில் வாழும்படி அவனை உந்தித் தள்ளியது. இப்படியாக மனிதன் சாபத்தில் உழன்று சுழன்று வாழக் கற்றுக் கொண்டான். ஆனால் அவனுக்குள்ளாக வைக்கப்பட்ட *(place* பண்ணப்பட்ட) செழிப்பு *(prosperity - success - especially & financially)* எங்கேயும் போய்விடவில்லை. அது அவனுடைய ஆழங்களுக்குள்; அதாவது இருதயத்தின் ஆழங்களுக்குள் தள்ளப்பட்டு அடியிலே தங்கி விட்டது. அதாவது நோவா கால வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்ட ஏதேன் கடலாழங்களில் மூழ்கிக் கிடப்பதைப் போல! கடலாழங்களில் மிகவும் தடிமனான கருமை சூழ்ந்த இருள் காணப்படுவதால் அங்கேயுள்ள காரியங்களை வெளியுலக மக்களால் பார்க்க முடிவதில்லை. அங்கேயுள்ள பல காரியங்கள் அசைவற்று மௌனமாக தங்களுக்குள்ளாகவே சப்தித்துக் கொண்டு முனங்கியபடி இருக்கின்றன!

கடல் மூழ்காளிகள் கடலில் மூழ்குவதற்குத் தேவையான பலவிதமான உபகரணங்களோடும், பயிற்சிகளோடும், பாதுகாப்பு குழுவினரோடும் உள்ளே மூழ்கி, வெளிச்சத்தை கடலின் அடிமட்டங்களில் பாய்ச்சும் போது தான்; அங்கேயிருக்கும் காரியங்கள் வெட்டவெளிச்சமாகி மேலே மிதந்து வருகின்றன! *Discovery TV channel*–ல் இவற்றையெல்லாம் பார்த்து ஆச்சரியப்படுகிற பார்வையாளர்களுக்கு; அதன் பின்னணியத்திலிருந்து வேலை பார்த்த மனிதர்கள் பட்ட பாடுகள் தெரிய வாய்ப்பில்லை. மனிதர்களின் அடிமட்டத்தில் மூழ்கிக் கிடக்கும் அந்த ஏதேனை (செழிப்பை) மேலே கொண்டுவரத்தான் நாங்கள் எல்லாப் பாடுகளும் படுகிறோம். நாங்கள் செழிப்பை பிரசங்கிக்கவில்லை; தேவன் ஏற்கெனவே மனிதர்களுக்குள் வைத்து வைத்திருக்கும் *(fix* பண்ணியிருக்கும்) செழிப்பை (ஏதேனை) ஆழ்கடல் மூழ்காளிகளைப் போலவே வெளியே எடுத்து அவர்களுக்குக் காட்டுகிறோம் அவ்வளவு தான்!

விபத்துக்குள்ளாகி கடலாழங்களுக்குள் மூழ்கடிக்கப்பட்டுப்போன "சாத்கோ" கப்பலை கடல் மூழ்காளிகளும், இஞ்சினியர்களும் மீட்டு மேலே கொண்டு வந்து மிதக்கவிட்ட காட்சியை எங்கள் புத்தகம் விதைகள் பகுதி –5 ல் பார்க்கலாம்! அதைவிட அதிக *risk* கான அனுபவம் இது! கணுக்கால் அளவு, முழங்கால் அளவு, இடுப்பளவு ஆழங்களில் நம் கண்கள், காதுகள், மூக்கு, வாய் எல்லாமே நீர் மட்டத்திற்கு மேலே தான் இருக்கின்றன. ஆனால் மூழ்கிய பிறகு இவைகளெல்லாம் நீர் மட்டத்திற்கு கீழாகப் போய்விடுகின்றன. அதனால் கண், காது, மூக்கு, தொண்டைக்குள் நீர் புகுந்து உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தாமலிருப்பதற்காக; அதற்கான பாதுகாப்பு கவசங்களோடு, உடைகளோடு தான் மூழ்க வேண்டியதாயிருக்கிறது. பரிசுத்தாவியானவரால் நமக்கு கிருபையாகக் கொடுக்கப்பட்ட பிரகாசமுள்ள மனக்கண்களும், மறுரூபமடைந்த இருதயமும்,

அதில் தோன்றிய வெளிப்பாட்டு இரகசியங்களும், தீர்க்கமான தரிசனமும், தேவனைப் பற்றின அறிவுமே ஆவிக்குரிய கடலாழங்களில் மூழ்கிச் சென்று ஆராய்ச்சி நடத்த நமக்கு உபகரணங்களாகப் பயன்படுகின்றன.

கணுக்காலளவு, முழங்காலளவு, இடுப்பளவு ஆழங்களில் நிற்பவர்களைக் கரையிலிருந்து பார்க்க முடியும். ஆனால் தண்ணீருக்குள் மூழ்கிவிட்டவனை, கரையிலிருந்து பார்க்க முடியாது! சொல்ல வருகிற விஷயம் புரிகிறதா? கணுக்கால், முழங்கால், இடுப்பளவிலான தண்ணீரில் நின்று கொண்டிருப்பவர்களின் நிலை வேறு; தண்ணீருக்குள் மூழ்கியிருப்பவனுடைய நிலை வேறு! அவர்களின் கண்கள் நீர் மட்டத்திற்கு மேல் இருப்பதால்; வெளியுலகைப் பார்க்க முடியும். ஆனால் மூழ்கியிருப்பவனுடைய நிலைமை வேறு; அவனால் வெளியுலகத்தைப் பார்க்க முடியாது. இங்கே இன்னொரு பிரச்சனை என்னவென்றால் அவனால் தண்ணீருக்குள்ளும் பார்க்க முடியாது! கண்கள் திறந்தே இருந்தாலும் தண்ணீருக்குள் என்ன இருக்கிறது என்பது தெரியாது. தண்ணீருக்குள் பார்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட விசேஷித்த கண்ணாடியில்லாமல் பார்க்க முடியாது! ஆனால் தண்ணீருக்குள்ளிருந்து பார்த்தே ஆக வேண்டும்; பார்த்த அந்தக் காட்சிகள் எப்படியிருக்கிறது என்பதைச் சொல்லியே ஆக வேண்டும்.

*"இதற்காகத்தான் உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படிக்கு, என் கண்களைத் திறந்தருளும் (சங். 119:18)"* என்று ஜெபிக்கிறோம். எபே. 1:19ல் பிரகாசமுள்ள மனக்கண்களுக்காக பவுல் ஜெபித்ததைப் பார்க்கிறோம். கர்த்தருடைய ஆவியானவருடன் நீச்சலாழங்களில் பயணிக்கவே பிரகாசமுள்ள மனக்கண்கள் நமக்கு உண்டாயிருக்கிறது. கடலாழங்களில் மூழ்கி ஆராய்ச்சி நடத்துபவர்கள் உபயோகிக்கும் முத்துக்குளிப்பு உடையும், தண்ணீருக்குள் இருந்து பார்க்கக்கூடிய கண்ணாடிகள் பொருத்தப்பட்ட தலைக்கவசமும் அவர்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கின்றன. தண்ணீருக்குள் இருந்து கொண்டு வெளியுலகைப் பார்த்தாலும் சரி, தண்ணீருக்குள் இருப்பவைகளையே பார்த்தாலும் சரி; எல்லாமே வித்தியாசமாக – விசித்திரமாக இருக்கின்றன. நம்முடைய இயற்கையான பார்வைக் கோணம் மாறுபட்டுப் போவது தான் இதற்குக் காரணம். உதாரணமாக... மார்பளவு தண்ணீரில் மூழ்கி நிற்கும் மனிதனைத் தண்ணீருக்குள்ளிருந்து பார்த்தால் இப்படித்தான் தெரிவான்!



## தண்ணீர் மட்டத்திற்கு மேல் Vs தண்ணீர் மட்டத்திற்கு கீழ் கண்கள்!:

நம் ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாத காலம் வரையிலும் கால் தண்ணீரிலேயே படவில்லை; கடற்கரையில் நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தோம். நிலக்கடலை பார்சலை வாங்கிப் பிரித்தபடி கடற்கரை மண்ணில் நடந்து கொண்டேயிருந்த போது; தண்ணீரில் காலை நனைக்க வேண்டும் என்ற ஆசை வந்தது! மெல்ல காலைத் தூக்கி தண்ணீரின் மேல் வைத்த போது; ஓடி வந்த அலையின் நுனிப்பகுதி கணுக்காலை நனைத்து விட்டுத் திரும்பியது. அடுத்த கட்டமாக உடனடியான முழங்காலளவு தண்ணீரில் காலெடுத்து வைக்கவில்லை. படிப்படியாக நீர்மட்டம் உயர்ந்து முழங்காலளவுக்கு வந்தது. ஆனால் ஆரம்பத்திலிருந்தே நம்மை தேவ ஆவியானவர் தான் கரம் பிடித்து படிப்படியாக ஆழங்களுக்குள் இறங்கும்படிச் செய்கிறார்.

அடுத்தக்கட்டமாக முழங்காலளவிலிருந்து தண்ணீர் படிப்படியாக உயர்ந்து இடுப்பளவை அடைகிறது. இனிமேல் தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய காரியங்கள் வருகின்றன. கணுக்கால், முழங்கால், இடுப்பளவில் நின்று கொண்டிருக்கும் போதகர்கள் தான் சபையில் அதிகம். இவர்களின் போதனைகளைக் கேட்பதில் தான் சபை விசுவாசிகளுக்கு ஆர்வம் அதிகமாயிருக்கிறது. ஏனென்றால் இவர்களின் கண்கள் தண்ணீர் மட்டத்திற்கு மேல் தான் இருக்கிறது; காண்கிற உலகத்தையே ஆதாரமாகக் கொண்டு தான் இவர்களின் போதனையும் இருக்கிறது. கண்களால் காண்கிறவைகளை மட்டுமே நம்பிப் பழகிப் போன விசுவாசிகளை இப்படிப்பட்ட போதனைகள் பெருமளவில் ஈர்த்து விடுகின்றன.

ஆனால் நீச்சலாழத்திற்குள் செல்லும் வெளிப்பாடுகளைப் ***(revelation - surprising disclosure - extra ordinary)*** பெற்ற புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களின் பேச்சு பெருமளவில் எடுபடுவதில்லை! ஏனென்றால் கண்களால் காணமுடியாத காரியங்களை இவர்கள் சொல்லக் கேட்கும்போது; நம்புவதற்குக் கடினமாக இருக்கிறது; புரியாத புதிராக, குழப்பமாக, இருக்கிறது. ஏனென்றால் கண் காணக்கூடாத காரியங்கள் எதையும் இதுவரை இவர்கள் பார்த்ததேயில்லை! அப்படிப் பார்ப்பதற்குத் தேவையான விசேஷக் கண்ணாடிகள் (பிரகாசமுள்ள மனக்கண்கள் – இருதயத்தின் கண்கள் – உள்ளான மனிதனின் கண்கள் – என்று பல விதங்களில் வேதம் விளக்கம் தருகிறது.) எதுவும் இவர்களிடம் இல்லை. அதனால் இவர்கள் நீச்சலாழத்திற்குள் இறங்க முயற்சி எடுக்கவுமில்லை. இடுப்பளவு தண்ணீரில் வந்தவுடனேயே பயந்து போய் கரையை நோக்கி ஓட்டம் பிடிக்கிறார்கள்! (நாங்களும் ஒருக்காலத்தில் அப்படி ஓடி வந்தவர்கள் தான்!)

தண்ணீருக்குள் முங்கி விடாதே, உனக்கு நீச்சல் வராது, செத்துப் போயிருவே, சுறா இழுத்துக் கொண்டு போயிரும் என்று பயங்காட்டியே இழுத்துக் கொண்டு வந்து விட்டார்கள். செழிப்பின் உபதேசத்தை வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து விதைத்து விட்டுப் போய்விட்டார்கள், செழிப்பு ஆபத்தானது, பணம் நம்மைக் கெடுத்து விடும், பாடுகள் தான் நம்மைப் பரலோகத்தில் சேர்க்கும், அது இது என்று சொல்லி... செத்த மீனாக கரையில் வந்து விழுந்தோம்! **(செழிப்பின் உபதேசத்தை நாங்கள் நிச்சயமாக வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து இறக்குமதி செய்யவில்லை; சங். 65:9, 66:12, 72:7, நீதி. 28:25, ஏசா. 5:1, 29:17, 32:16, அப். 14:17 ஆகிய வசனங்களிலிருந்து தான் *download* செய்தோம்!)** முழங்காலளவு தண்ணீர் வந்ததும்; கால்கள் தள்ளாடியதால் திரும்பி விட்டவர்கள் பலர். கணுக்காலளவு வந்ததுமே குளிருகிறது, காலில் மண் ஒட்டினால் எனக்கு பிடிக்காது, உப்புத் தண்ணீர் அலர்ஜியாகி விடும் என்று சாக்குப் போக்குச் சொல்லி, மீண்டுமாக சுண்டல் வாங்கக் கரைக்குப் போய் விட்டவர்கள் அதிகம்! கடற்கரைகளில் கடைகள் பெருகிவிட்டால்; இப்போதெல்லாம் சாப்பிடுவதற்காகத்தான் கடற்கரைக்கே அநேகர் வருகிறார்கள்!

பூமியின் 70% ஐ வளைத்துப் போட்டுக் கொண்டிருக்கும் அழகான நீலப்பெருங்கடல்கள் மனிதர்களின் அவலங்களைப் பார்த்து பெருமூச்சுவிட்டு அழுது; கண்ணீரை அலைகளாக கரைக்குத் தள்ளுகின்றன. ஆனால் பயமுறுத்தல்களுக்கு அஞ்சாத ஒரு கூட்ட ஜனத்தார் அன்றிலிருந்து இன்று வரை கடலில் மூழ்கி முத்தெடுத்துக் கொண்டு தான் இருக்கின்றனர். இந்தக் கடைசிநாட்களில் கடல் மூழ்காளிகளின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது; இன்னமும் பெருகிக்கொண்டேயிருக்கிறார்கள். புதிய பிரமாண ஊழியர்களைத்தான் சொல்கிறோம்... இடுப்பளவு தண்ணீருக்கு வந்தவர்கள் தைரியமாக பரிசுத்தாவியானவரின் கைகளைப் பிடித்துக் கொண்டு மூழ்கி நீந்தத் தயாராகிவிட்டார்கள். அவர்களின் பழைய பிரசங்கங்களையும்; இக்கால ***(up to date)*** பிரசங்கங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, இது நன்றாகவே புரிகிறது. (விதைகள் பகுதி 1 முதல் 5 வரையான புத்தகங்களை, விதைகள் 6 முதல் 15 வரையிலான புத்தகங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தாலும் இது புரியும்!)

## போராட்டமாகிப்போன வாழ்க்கை & வாழ்க்கையாகிப்போன போராட்டம்:

பூமியின் மீது ஓயாமல் அடித்துக் கொண்டிருக்கும் சாபக்காற்றில் சிக்கி பறக்கின்ற மனிதர்கள் முடிவில் செழிப்பின் பக்கமே கரையொதுக்கப்படுகிறார்கள். தான் பூமியில் வந்து பிறந்த நோக்கம் எதுவென்றே தெரியாத ஒவ்வொரு மனிதனும் சாபத்தோடும் தரித்திரத்தோடும் வியாதியோடும்

எதிர்த்துப் போராடிவிட்டுத்தான் சாகிறான். சாகும் கடைசி நேரத்தில் கூட உயிருக்காகப் போராடுகிறான்! இந்த சாபச்சீர்கேடுகளெல்லாம் தனக்குரியதல்ல என்றும்; அவைகள் அந்நிய சக்திகள் என்பதும் அவனுக்குப் புரிந்து தான் இருக்கிறது.

*"பூமியிலே போராட மனுஷனுக்குக் குறிக்கப்பட்ட காலம் உண்டல்லவோ?... ...போராட்டத்தின் மேல் போராட்டம் அதிகரிக்கிறது. ...எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன். யோபு. 7:1, 10:17, 14:14."* மனிதன் வாழ்வதற்காக அல்ல, போராடுவதற்காகவே பிறக்கிறான் என்ற எண்ணம் தான் மனிதர்களின் மனதில் இருக்கிறது. என்றாலும் அவனுடைய மனது ஒரு நல்ல மாற்றத்துக்காக ஏங்குகிறது. தனக்கு கிடைக்காத நல்ல காரியங்களுக்காக ஆசைப்படுகிறான்; யாருக்கும் தெரியாத இரகசிய கற்பனையுலகத்தை ஏற்படுத்திக் கொள்ளுகிறான். ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்பார்கள்; ஆறிலும் ஆசை நூறிலும் ஆசை தான்! ஆசைக்கு வயதில்லை, அது அழிவதும் இல்லை! ஏன் இப்படி? தேவன் மனிதனுக்கென்று ஏற்படுத்தின ஏதேனின் செழிப்பு அவனுடைய ஆழ்மனதின் அடிமட்டத்தில் உறங்கிக் கொண்டிருக்கிறது. அங்கேயிருந்து வெளிப்படும் பெருமூச்சின் சலனங்கள்தான் இந்த ஆசைகள்... கனவுகள்... கற்பனைகள்... போன்றவைகள். இவைகளெல்லாம் நிச்சயமாக தவறான காரியங்கள் அல்ல. ஏனென்றால் நம் அப்பாவுக்கும் (தேவன்) இந்த ஆசைகள், கனவுகள், கற்பனைகள் எல்லாம் உண்டு!

அவற்றையெல்லாம் மிகச் சரியாக ஒருங்கிணைத்து செயல்முறைப் படுத்தி ***(planning)*** அவர் அழகான உலகத்தையும் அதன் செழிப்பையும்; குறைவில்லாத மனிதனையும் அவனுடைய வெற்றி வாழ்க்கையையும் வடிவமைத்தார் ***(a drawing produced to show the look and function of Eden before it is made)*** எந்தவொரு குறைவுமில்லாமல் செழிப்போடு இருக்கும் தேவன் அவரைப் போலவே நன்றாக வாழ்ந்து சுகித்திருக்கவே மனிதனைப் பூமியில் தோன்றப் பண்ணினார். அவர் எதிர்பார்த்தபடி ஏதேனின் மகிமையான வாழ்வை நாம் பெற்றுக்கொள்ள வேண்டுமானால்; அதற்கான உபகரணங்களை ***(raw meterials)*** ஒருங்கிணைத்து ***(co-ordination)*** வேலை செய்ய வேண்டும்.

## ஒருங்கிணைப்பு உபகரணங்கள்:

1. நமக்குள் தேவன் இயேசுவால் துவங்கி வைக்கப்பட்ட விசுவாசம் (ஆசைகள், கனவுகள், கற்பனைகள் ஆகியவை விசுவாசம் சம்பந்தப்பட்ட காரியங்கள் தான்) **மனதின் ஆசைகள் கனவுகளாகப் பறந்து சென்று கற்பனைக் கோட்டைகளுக்கான பாறாங்கற்களைக் கொண்டு வருகின்றன.** *"இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். மாற். 9:23"*

2. அடுத்தபடியாக மனதிலிருக்கிற இந்த கனவுருக்காட்சிகளைக் கண் காணும் உலகத்துக்குக் கொண்டு வரவேண்டும். விசுவாசத்திற்கேற்ற கிரியைகளையும் செய்ய வேண்டும் ***(actions).*** ஏனென்றால் கிரியையில்லாத விசுவாசம் செத்தது என்று வேதம் எச்சரிக்கிறது ***(if faith is alone and includes no actions, then it is dead. Faith without actions is dead.*** *(யாக். 2:17, 26).* அப்படியானால் நாம் விசுவாசம் என்ற உபகரணத்துடன்; விசுவாசக் கிரியைகள் என்ற உபகரணங்களையும் சேர்த்து எடுத்துக் கொண்டு நீச்சலாழங்களுக்குப் போகவேண்டும். வெறும் விசுவாசத்தை மட்டுமே கொண்டு போனால் ... ? ஏதேனைப் பார்க்க மட்டும் தான் முடியும்; ஆனால் அதன் செழிப்பை வெளியே எடுக்கவும் அனுபவிக்கவும் முடியாது! நாம் நிறைய நிறைய எக்கச்சக்கமாக விசுவாசித்தும் இன்னமும் பெற்றுக் கொள்ளாமலிருப்பதற்கு காரணம் புரிகிறதா? ஏட்டுச்சுரைக்காய் கறிக்கு உதவாது என்பார்கள். பேப்பரில் வரையப்பட்ட சுரைக்காயின் படத்தை வெட்டி சமைக்க முடியாது; அதற்கு நிஜமான சுரைக்காய் வேண்டும். **விசுவாசத்தால் மனதில் படத்தை மட்டும் தான் உருவாக்க முடியும். விசுவாசத்திற்கேதுவான முயற்சிகள் தான் நிழலை நிஜமாக்குகிறது; *(two dimension* ஐ *three dimension* ஆக்குகிறது)**

## உதாரணமாக... *e.g.,:*

நிழலை நிஜமாக்குவது எப்படி? விசுவாசத்தை செயல்முறைப்படுத்துவது எப்படி? விசுவாசத்துடன் கிரியையை இணைத்துச் செயல்படுத்துவது எப்படி? ***Two dimension*** ஐ ***three***

***dimension*** ஆக்குவது எப்படி? போன்ற கேள்விகளுக்கு பதிலை ஒரு எளிதான (கஷ்டமான!) உதாரணத்துடன் பார்க்கப் போகிறோம். கீழே இருக்கிற படங்களை கவனியுங்கள்; மீன் தொட்டிக்குள் ஒரு மீன் இருக்கிறது. உண்மையில் இதை இரண்டு படங்கள் என்று சொல்வது சரியாக வராது; ஒரு படம் தான் மீண்டுமாக வரையப்பட்டிருக்கிறது! ***(repeating - do the same picture again)***

தட்டையான படங்களை புடைப்பியல் கொண்ட கனவுருக்காட்சிகளாக உருவாக்க ஸ்டீரியோஸ்கோப் ***(Stereoscope)*** என்ற கருவி பயன்படுத்தப்படுகிறது ***(a device by two photogaphs of the same object taken at slightly different angles are viewed together, creating an impression of depth and solidity - 3D).*** நமது கண்களைச் சரியாகப் பழக்கிக்கொண்டால்; இப்படிப்பட்ட இரட்டைப் படங்களை ஸ்டீரியோஸ்கோப் இல்லாமலேயே ஒன்றாக்கிப் பார்க்க முடியும். திரும்ப திரும்ப பயிற்சி செய்வதால் நல்ல பலன் கிடைக்கும். படத்தில் தட்டையாகத் தெரியும் இரண்டு மீன் தொட்டிகளையும் ஒன்றாக்கிப் பார்க்கும்போது; புடைப்பியல் (முப்பரிமாண) கொண்ட மீன் தொட்டியைப் பார்க்க முடியும். நம்முடைய கண்களில் இயற்கையாகவே அமைந்திருக்கும் இந்த இயல்பைப் பயன்படுத்தித்தான் "வீட்ஸ்ட்டன்" என்பவர் ஸ்டீரியோஸ்கோப்பைக் கண்டுபிடித்தார். இரண்டு வித்தியாசமான கோணங்களில் எடுக்கப்பட்ட ஒரே படம் தான் இது. வலது கண்ணை மூடிக்கொண்டு பார்க்கும்போது படம் 1ஐப் போலவும்; இடது கண்ணை மூடிக்கொண்டு பார்க்கும் போது படம் 2ஐப் போலவும் காட்சியளிக்கிறது. நம்முடைய கண்களில் இயற்கையாகவே இருக்கிற இந்த இயல்பினை பயிற்சிக்கும் போது இரண்டு படங்களும் நடுவில் ஒன்றாக இணைந்து முப்பரிமாணத்துடன் நிஜமான மீன்தொட்டியாக காட்சியளிக்கிறது. தண்ணீர் பளிங்கு போல பளபளப்பதாகத் தோன்றுகிறது. நம்முடைய விசுவாசத்தை நிஜமாக்கவும் இப்படிப்பட்ட ஆவிக்குரிய முயற்சிகள் தேவையாயிருக்கிறது.



ஒரு சின்னப் பையன் இப்படிப்பட்ட ஒரு மீன் தொட்டியைப் பார்க்கிறான். தனக்கும் இப்படியொரு மீன்தொட்டி வேண்டுமென்று ஆசைப்படுகிறான். அந்த மீன் தொட்டியையே பார்த்துக் கொண்டிருக்கிறான்; அது அப்படியே அவனுடைய மனதில் பதிந்து விடுகிறது. அவன் அங்கிருந்து நகர்ந்து வெளியே போன பிறகும்; அந்தப் படம் அப்படியே அவன் மனதுக்குள் தான் இருக்கிறது! ஆனால் அவன் ஆசைப்பட்டதாலோ, மீன் தொட்டியின் உருவத்தை மனதில் பதித்துக் கொண்டதாலோ அவனுக்கு மீன்தொட்டி கிடைத்து விடவில்லை. கண்ணாடித் தொட்டிகள் விற்கும் கடைக்குப் போய் தன் மனதில் இருக்கிற படத்திற்கு ஒப்பனையான தொட்டியைத் தேடிப்பிடித்து வாங்குகிறான். கிடைக்காவிட்டால் அப்படியொரு தொட்டியை செய்து தரும்படி கேட்கிறான்; தன் மனதில் இருக்கிற படத்தை விவரித்துச் சொல்லுகிறான்; இல்லாவிட்டால் வரைந்து காட்டுகிறான். தன்னுடைய முயற்சியின் முடிவில் நிஜமாகவே தான் விரும்பிய மீன் தொட்டியைப் பெற்றுக் கொள்கிறான். சந்தோஷமாக அதில் ஒரு மீனை வாங்கிப் போட்டு; அதை வீட்டில் கொண்டு வந்து வைத்து அழகு பார்க்கிறான்! சந்தோஷத்துடன் சிரிக்கிறான், துள்ளிக் குதிக்கிறான்! பக்கத்து வீட்டுப் பையனைக் கூப்பிட்டுக் காட்டுகிறான்! (கண்ணாடித் தொட்டி செய்ய ரூ. 2000 செலவானது, மீனின் விலை ரூ. 500/–! இந்தப் பணத்தை அவன் அவனுடைய அப்பாவிடமிருந்து வாங்க அவன் வைத்த செப்படி வித்தை ...அது தனி கதை! அதையெல்லாம் எழுதினால் இடம் கொள்ளாது!)

## இதுதான் நான் சொல்ல வரும் விசுவாசத்தின் கதை!:

விசுவாசம் கிரியையுடன் சேர்ந்து முயற்சி செய்து ஜெயித்த கதை! ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே***(hearing the message)*** வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே ***(preaching Christ)*** வரும். ரோம. 10:17. அதனால் நமக்குள் உறங்கிக் கிடக்கும் விசுவாசத்தின் தூக்கத்தைக் கலைத்துத் தட்டியெழுப்பக்கூடிய பிரசங்கங்களைக் கேட்க வேண்டும். தாலாட்டுப் பாடி தொட்டிலை

ஆட்டி, தூங்க வைக்கக்கூடிய பிரசங்கங்களைக் கேட்பதை நிறுத்த வேண்டும். பொழுது போகவில்லையென்பதற்காகக்கூட இப்படிப்பட்ட அழுமூஞ்சிப் பிரசங்கங்களைக் கேட்கக்கூடாது! என் அனுபவத்தைச் சொல்லுகிறேன்; அனுபவித்துச் சொல்லுகிறேன்! தேவனை அறியாதிருந்த நாட்களில் நான் பார்த்த சினிமாக்கள் என்னில் ஏற்படுத்திய பாதிப்புகளை விட, மிக மோசமான பாதிப்புகளை, இப்படிப்பட்ட பிரசங்கங்கள் என் வாழ்க்கையில் ஏற்படுத்தி விட்டது என்பதே நிஜம்!

**3.** விசுவாசத்தின் கிரியைகள் பல விதங்களில் நடப்பிக்கப்படுகின்றன. நம்முடைய விசுவாசத்தை வெளியே இழுத்துக் கொண்டு வந்து; அதோடு கூட்டு சேர்ந்து முயற்சிகளைச் செய்து; வெற்றியை நோக்கிப் பயணம் செய்ய இவைகள் உதவுகின்றன. விசுவாச கிரியைகளில் முதலாவது வருவது விசுவாச அறிக்கை தான். *"... நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே. எபி. 10:23."* கடந்த காலங்களில் நாம் பேசின வார்த்தைகள் மூலமாகத்தான் தற்போதுள்ள நிகழ்காலத்தை நாம் உருவாக்கியிருக்கிறோம். தோல்விகளைப் பேசியதால் நிகழ்காலத்தை சோகம் மூடியது. நம்முடைய நிகழ்காலத்தை உருவாக்கும் சக்தியும் அதிகாரமும் நமக்கு இருக்கிறதென்றால்; நிச்சயமாக நம்முடைய எதிர்காலத்தையும் உருவாக்கிவிட முடியும். வெற்றியையே பேச ஆரம்பிப்போம்; வருங்காலம் நிச்சயம் நம் கைவசமாகும்.

வாயினால் வெறுமனே பேசுவது ஒரு பெரிய விசுவாசக்கிரியை என்று சொல்ல முடியுமா? என்று தோன்றலாம். ஆனால் நாம் செய்யப்போகிற காரியங்களெல்லாவற்றையும் விட வார்த்தை வல்லமை வாய்ந்தது என்பதை மறந்துவிடக்கூடாது. ஆதி. 1 ஆம் அதிகாரம் முழுவதிலும் இதைப் பார்க்கலாம். முதலில் வார்த்தை போகிறது; பிறகு அதற்கேற்றபடியான செயல்கள் ஆரம்பமாகிறது; தேவனைப் போல தான் நாமும் வேலை செய்யணும்! *"நான் ...செய்தது போல நீங்களும் செய்யும்படி... யோவா. 13:15" "... கிறிஸ்துவும் ...நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார். 1 பேது.2:21"*

## *Man's (God's) power:*

தேவனுடைய திட்டத்தில் இருக்கிற புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஏதேனின் செழிப்பை நோக்கி முன்னேறும் போது; பூமியும் தேவனுடைய திட்டத்தை நோக்கி முன்னேற ஆரம்பிக்கும். இந்த உலகத்திலேயே அதிக சக்தி வாய்ந்ததொன்று இருக்குமானால் அது மனிதனுக்குள்ளிருக்கும் ஆற்றல் தான் ***(Manpower).*** பூமியிலுள்ள எல்லா மனிதர்களும் (800 கோடி) பூமியின் வளிமண்டலத்தை விட்டு வெளியேறி; அதற்கு மேலாக ஒரு இடத்தில் நின்று கொண்டு; ஒரே நேரத்தில் ***(fractional second*** கூட பிசகாமல்) பூமியின் மேலே குதிக்க முடியுமானால்... அப்படிக் குதித்தவுடன் $23^1/_2$ டிகிரி ***(axis)*** அச்சில் சரிவாகத் தற்போது சுற்றிக்கொண்டிருக்கும் பூமி நிலை மாறி ஆரம்பத்திலிருந்தது போல சரியான "0" டிகிரிக்கு வந்து விடும்! (?) என்று ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது! ***Manpower*** இந்த அளவுக்கு சாதிக்குமானால்; அவனுக்குள்ளிருக்கும் ***God's power*** எந்த அளவுக்கு சாதிக்கும் என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியாது!

தன்னுடைய பலம் என்ன என்பது தெரியாததினால்; பிரமாண்டமான யானை மிகவும் வலிமை குறைந்த இரும்புச் சங்கிலிக்குள் தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டு அடிமைத்தன வாழ்க்கை நடத்துகிறது! (யோசித்துப் பார்ப்போம்.)

**தேவனுடைய திட்டத்தில் நிறைவேற்றப்பட வேண்டியவைகளை முடிக்க நம் இருதயத்தின் வேகத்தை அதிகமாக்குவோம்! வாக்குப்பண்ணப்பட்ட சகல நன்மைகளையும் பெற்றுக்கொள்ள மூச்சிரைக்க முயற்சிகள் எடுப்போம்!** நம் தேவன், பூமியின் மீது செய்யப்பட்ட, செய்யப்பட்டுக்கொண்டு இருக்கிற, செய்யப்படப்போகிற எல்லாவற்றையுமே தன் வார்த்தைகளுக்குள் பொதிந்து வைத்திருக்கிறார்; அவைகளெல்லாமே நன்மையானவைகளே. அதனால் கண்டிப்பாக அவற்றையெல்லாம் கைப்பற்றினால் தான் அவற்றை வைத்து அவருடைய வேலையைப் பூமியில் செய்ய முடியும். (எண். 10:29, 2 சாமு. 7:28).

பாலும் தேனும் ஓடுகிற ஏதேனின் செழிப்பும் வாக்குத்தத்த ரூபத்தில் தான் இருக்கிறது (உபா. 9:27). தன்னுடைய வார்த்தைகளைப் பாதுகாக்கிறார்; சொல் மாறாமல் அதின்படியே

செய்கிறார் (1 இரா. 8:24). நாம் விடாப்பிடியாக (பலவந்தம் பண்ணி) அவைகளைப் பிடிக்க வேண்டும். **இயேசு,** அவர் மூலமாக நமக்கு கிடைத்த இரட்சிப்பு, **பரிசுத்த ஆவியானவர்,** அவர் மூலமாக கிடைத்த அபிஷேகம், **அதன் மூலமாக கிடைத்த வெளிப்பாடு,** பிரகாசமுள்ள மனக்கண்கள், **மறுரூப இருதயம்,** புதிய உடன்படிக்கையின் ஊழியம், **அவருடைய கிருபை,** நமக்குள்ளிருக்கும் விசுவாசம், **நாற்காலி,** அதன் மேலிருக்கும் நான், **என்னுடைய கண்,** அதன் மேலிருக்கும் கண்ணாடி, **மேஜை,** அதன் மேலிருக்கும் கணினி, **என்னுடைய கை,** விரல், **பைபிள்** அது **இது... எல்லாமே வாக்குத்தத்தங்களின் வழியாகத்தான் கிடைத்திருக்கிறது!** இவற்றையெல்லாம் சரியானபடி உபயோகித்து (விசுவாசக் கிரியைகளை நடப்பித்து) இன்னும் மீதமிருக்கிற வாக்குத்தத்தங்களையெல்லாம் சொந்தமாக்கும்போது... ? பூமியும் நம் வசமாகும், ஏதேனாகும், தேவனுடைய மகிமையினால் நிரம்பும், இயேசுவுக்கு வழி ஆயத்தமாகும், அவர் வருவார், புதிய பூமி உருவாகும், அது பரலோகத்துடன் இணைக்கப்படும், அவருடைய திட்டம் வெற்றியாக முடியும் (நம் மூலமாக) நமக்கு வெகுமதிகள் ***(gift)*** கிடைக்கும், அல்லேலூயா!

## வார்த்தைகளுக்குள் மறைந்திருக்கும் சாவிகள்:

வாக்குத்தத்தங்களெல்லாம் தேவனுடைய வார்த்தையினடிப்படையில் இயங்குகிறது. அவைகள் நல்லதாக தரம் உயர்ந்தவைகளாக ***(high standard - wonderful)*** இருக்கிறது. (எண். 10:29, 2 சாமு. 7:28). ஒரு விதையைப் போட்டதும் அது உடனடியாக அல்லது அடுத்த நாளே முளைப்பதில்லை. சில நாட்களுக்குப் பிறகு துளிர்க்கிறது; வளர்ந்து பலன் தர சில மாதங்களோ, சில வருஷங்களோ பிடிக்கிறது. தேவனுடைய வாக்குத்தத்தங்களும் இப்படித்தான் வேலை செய்கிறது. அதனால் **அவர் தாமதிப்பதாக நினைத்து பொறுமையிழந்துவிடக்கூடாது. பொறுமையிழந்தவர்களால் பூமியெங்கும் மண்கட்டியினடியில் மட்கிப்போன விதைகள் கோடாகோடி! அவைகளெல்லாம் துளிர்த்திருக்குமானால்; என்றோ பூமி ஏதேனாகியிருக்கும்! (2 பேதுரு. 3:9).** தேவனுடைய வார்த்தைகளெல்லாம் பாதுகாப்பானவைகள்***(safe - excellent - outstanding)*** அவற்றை தாராளமாக நம்பலாம். அவைகள் மாறிப்போக சந்தர்ப்பமே இல்லை; ***(being achieved!)*** அப்படி மாறிப்போயிருக்குமானால் வானமும் பூமியும் அதிலுள்ளவைகளெல்லாம் உருவாகியிருக்க முடியாதே! (1 இரா. 8:24, 56)

பிதா வாக்குப்பண்ணின பரிசுத்த ஆவியானவரை இயேசு நமக்கு அனுப்பிக் கொடுத்திருக்காவிட்டால் ... ? நானும் இல்லை, வெளிப்பாடும் இல்லை, தரிசனமும் இல்லை, இந்த விதைகள் புத்தகமும் இல்லை, செழிப்பும் இல்லை, அல்லேலூயா! (லூக். 24:49, அப். 2:33). பிதா வாக்குப்பண்ணியபடி இயேசுவை இந்தப் பூமியின் மீது பிறக்க வைக்காமல் இருந்திருந்தால் ... ? இந்தப் பூமியே இன்றைக்கு இல்லை! பூமியில்லாவிட்டால் ...? பூமிக்காகத் தேவன் ஏற்படுத்தின சந்திரன், சூரியன், நட்சத்திரங்கள், ஏன் அண்டசராச்சரமே இல்லை! சூனியமாகிப்போன ஒரு வெற்றிடம் தான் சுழற்சியிலிருந்திருக்கும்! (அப். 13:23, 33)

வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்ற விசுவாசத்தினடிப்படையிலேயே இந்த ஊழியமும் புத்தகமும் நிலைநிற்கின்றன, நிறைவேறுகின்றன, வெளிவருகின்றன! (அப். 26:6) உலகமுழுவதும் சுவிசேஷமயமாக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன; அதற்காகப் பணம் தண்ணீராக ஊற்றப்படுகின்றது! தேவன் வாக்குரைத்திராவிட்டால் இந்தச் சுவிசேஷமே இல்லை; பூமி முழுவதும் தார் பாலைவனமாகி... சஹாரா பாலைவனமாகி... மணலை வீசிக்கொண்டிருந்திருக்கும். ***(dull - lacking interest - absent - go away)*** (ரோமர். 1:4) **வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும் ஆற்றல் அவருக்குள் இருக்கிறபடியினால் தான் அவர் வாக்குத்தத்தமே செய்கிறார்! முதலில் சாவியை செய்து விட்டுத்தான்; அதைப் போட்டு திறக்கும் விதத்தில் பூட்டைச் செய்கிறார்கள்! (ரோமர். 4:21)**

...தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே. 2 கொரி. 1:20. அதாவது வாக்குத்தத்தங்களெல்லாம் ஏற்கெனவே நிறைவேறிவிட்டதாகவே எடுத்துக்கொள்ள வேண்டும். நாம் வாக்குத்தத்தத்தைச் சுட்டிக்காட்டி ஜெபிக்கும்போது தேவன் அவற்றை அவசர அவசரமாக உருவாக்குவதில்லை; ஏற்கெனவே எல்லாவற்றையும் தயாராக வைத்திருக்கிறார். நாம் விசுவாசித்து – விசுவாசித்ததைப் பேசி – பேசியதைச் செயல்படுத்தும் போது ***(practically)*** – நாம் விரும்பியது தானே வந்து சேருகிறது. உலக மனிதர்கள் கூட இந்த சட்ட திட்டத்தின்படி தான் தாங்கள் விரும்பியதைப்

பெற்றுக் கொள்ளுகிறார்கள். உதாரணமாக; ஒரு மனிதன் கார் வாங்க வேண்டும் என்று நினைக்கிறான், ஆசைப்படுகிறான் (இது விசுவாசம் சார்ந்த காரியங்கள்). மனதுக்குள் இருப்பது வாய் வழியாக வெளியே வந்து விடும்; கார் வாங்க வேண்டுமென்கிற தன்னுடைய மனதின் விருப்பத்தை வெளியே சொல்லுகிறான். அடுத்த கட்டமாக அதற்கான முயற்சிகளைச் செய்யும் போது கார் வந்து சேருகிறது. இதில் அவனுடைய முயற்சிகள் பல கட்டங்களைக் கடந்து செல்கிறது. எல்லோரும் அவன் எடுக்கிற முயற்சிகளை மட்டுமே பார்க்கின்றனர். ஆனால் ஆரம்பத்தில் அவன் மனதுக்குள் விழுந்த இந்த காருக்கான விதையை மட்டும் யாருமே பார்ப்பதில்லை; பார்க்கவும் முடியாது! கண்ணுக்குத் தெரியாதபடி தான் விதைகள் போடப்படுகின்றன.

ஆனால் இப்படிப்பட்ட விசுவாசம் என்கிற வல்லமையான ஆவிக்குரிய சக்தியை தங்களுக்குள்ளாக வைத்திருக்கும் தேவனைப் பற்றியும், விசுவாசத்திற்கு காரணமான இயேசுவைப் பற்றியும் உலக மனிதர்களுக்குக் கவலையில்லை. தேவன் இயற்கையாகவே பூமியின் மீது இயக்கத்தில் வைத்திருக்கும் சட்ட திட்டங்களை ***(Law)*** எடுத்துக் கொண்டார்கள்; அதை உருவாக்கியவரை ***(Law maker)*** ஐ விட்டு விட்டார்கள். ஆசைப்பட்டது எப்படியாவது ஒரு காலத்தில் நடக்கும், பேசினால் நடக்கும், முயற்சி செய்தால் கிடைக்கும் என்பதெல்லாம் அவர்கள் அனுபவத்தில் கற்றுக் கொண்ட காரியங்கள். இந்த விதிமுறைகளுக்கெல்லாம் காரணகர்த்தாவாகிய தேவனைப் பற்றி அவர்களுக்கு எதுவும் தெரிவதில்லை; ஏனென்றால் **தேவனைப் பற்றிய சரியான முன்னுரை *(introduction)* அவர்களுக்கு கொடுக்கப்படவில்லை. அதனால் புரியாத புதிராக இருக்கிற தேவனைத் தங்களுடைய வாழ்க்கைக்குள் வரவிட்டு; இருப்பதையும் ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும் என்று பயந்துவிடுகிறார்கள். இயேசு கிறிஸ்துவைக் கொண்டு போகும் சுவிசேஷகர்கள் பந்தாடப்படுவதற்கு இது தான் காரணம்!**

தலையுமில்லாமல் வாலுமில்லாமல் சுவிசேஷகர்கள் கொண்டு போகும் சுவிசேஷத்தால் அநேகர் இயேசுவை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்படுவதென்னவோ உண்மை தான். ஆனால் இயேசுவில் நிலைகொண்டிருந்து; அவரைப் பிரயோஜனப்படுத்தி வாழ்வில் செழிப்படைந்து, வெற்றி பெற்று ஓட்டத்தை முடித்தவர்கள் எத்தனை பேர்? இந்தப் பிரபஞ்சத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உருவாக்கிய மாபெரும் தேவனையும், அவருடைய நேச குமாரனையும் தங்களுக்குள் வைத்திருக்கும் கிறிஸ்தவர்கள்; தேவனற்ற உலக மக்கள் முன்பாக தோற்றுப் போய் தலை குனிந்து நிற்பதற்கு என்ன காரணம்? தேவனுடையத் திட்டத்தை பூமியில் நிறைவேற்றி முடிக்க லாயக்கில்லாத அவர்களின் எல்லைகளுக்குள்ளாக பூமியின் செழிப்பைக் குவிய விட்டுவிட்டு; சாபத்தின் எல்லைகளுக்குள் போய் வறுமையையும், வியாதிகளையும், இன்னும் சகல கெட்ட காரியங்களையும் இழுத்துக் கொண்டு வந்து போட்டுக் கொண்டிருப்பதற்கு என்ன காரணம்? தேவ இரகசியச் செயல்கள் தெரியாமல் போனது தான் இதற்குக் காரணம்!

## இரகசியம்... அது எல்லோருக்கும் தெரிய வேண்டியது அவசியம்!:

அண்ட சராசரத்தை (பரந்து விரிந்து கிடக்கிற கற்பனைக் கெட்டாத பிரம்மாண்ட பிரபஞ்சம்) தன்னுடைய குமாரன் இயேசுவின் மூலமாக உருவாக்கிப் படைத்த தேவனால், அவரைப்போலவே படைக்கப்பட்டிருக்கிறோம் நாம்! அவரோடு சேர்ந்து அவருடைய வேலையைப் பூமியில் நடப்பிப்பதற்காக தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிற நாம் தெரிந்து கொள்ளத் தவறிய கிறிஸ்வர்களின் வேத (தேவ) இரகசியங்களை ***(Bible secrets)*** தேவனையறியாத உலக மக்கள் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள் என்பதற்குச் சில உதாரணங்களைக் கீழே பார்ப்போம். வசனங்களிலிருந்து இரகசியத்தை மட்டும் கடத்திக்கொண்டு போய் பெரிய அளவில் வெற்றிகளை குவித்து வரும் உலகத்தாரின் சிந்தனைகளை அடைப்புக்குறிக்குள் ***(bracket)*** கொடுத்திருக்கிறேன்:

*"... ஒளியின் பிள்ளைகளைப்பார்க்கிலும் இந்த பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள். லூக். 16:8" "அநேக துன்மார்க்கருக்குள்ள செல்வத்திரட்சியைப் பார்க்கிலும், ... சங். 37:16" "கொடிய பலவந்தனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன்; அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சைமரத்தைப்போல் தழைத்தவனாயிருந்தான். சங். 37:35"*

(உலகத்தில் சம்பாதிக்கப்படும் பணத்தில் 96% உலக மக்களில் 1 சதவிகிதத்தினரிடம்

மாத்திரமே குவிந்திருக்கிறது; இதற்கு என்ன காரணம்? இது தற்செயலான ஒரு காரியமல்ல; எதிர்பாராமல் நடக்கிற விபத்துக்களைப் போன்றதும் அல்ல. எல்லாமே திட்டமிடப்பட்டவை என்பதை அறிந்து கொள்ளுவோம். **அவர்கள் ஏதோ ஒரு இரகசியத்தை அறிந்து வைத்திருந்தனர்; அதை முயற்சித்தனர், பணம் வந்து குவிந்தது அவ்வளவு தான்!** – பாப் பிராக்டர்)

*"துன்மார்க்கன் பயப்படும் காரியம் அவனுக்கு வந்து நேரிடும்; நீதிமான் விரும்புகிற காரியம் அவனுக்குக் கொடுக்கப்படும். நீதி. 10:24" "நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது; நான் அஞ்சினது எனக்கு வந்தது. யோபு. 3:25"*

(உங்கள் மனக்கண்ணால் ஒன்றைப் பார்க்க முடிந்தால்; கண்டிப்பாக அது உங்கள் கைகளுக்கு வரும். உங்கள் வாழ்க்கை எல்லாவிதத்திலும் அபரிமிதமாக இருப்பதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள்; கண்டிப்பாக அதை ஈர்ப்பீர்கள்! நீங்கள் நம்பினாலும் சரி, நம்பாவிட்டாலும் சரி, இந்த ஈர்ப்பு விதி எப்போதும் இயங்கிக் கொண்டு தான் இருக்கிறது. ஈர்ப்பு விதி தான் படைப்பு விதி. மொத்தப் பிரபஞ்சமே சிந்தனையிலிருந்து தோன்றியது தான் என்று குவாண்டம் ***(quantum)*** இயற்பியலாளர்கள் கூறுகின்றனர். நீங்கள் அறிந்திருந்தால் தான், அது வேலை செய்யும் என்றில்லை. உங்களையுமறியாமலேயே இது உங்கள் ஒவ்வொருவருடைய வாழ்வில் முழுவதுமாக இயங்கி வந்துள்ளது. இதை நீங்கள் உணர்ந்து கொள்ளும் போது; **உங்கள் சிந்தனையினாலேயே வாழ்க்கையை உருவாக்கும் உங்கள் சக்தியைக் கண்டு ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்** – பாப் பிராக்டர்

எண்ணங்கள் பௌதிக பொருட்களாக பரிணமிக்கும்! – மைக் டூலி)

*"... அவர்கள் நினைவுகளின் பலனாகிய தீங்கை வரப்பண்ணுவேன். எரே. 6:19" "ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத்துக்கும், பதறுகிறவனுடைய நினைவுகள் தரித்திரத்துக்கும் ஏதுவாகும். நீதி. 21:5" "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்; ... நீதி. 23:7"*

(நீங்கள் எதை அதிகமாக சிந்திக்கிறீர்களோ அதுவாகவே ஆகிவிடுவீர்கள். நீங்கள் நினைப்பது எதுவோ; அது உங்களை நோக்கி வரும். இன்றைய உங்கள் வாழ்க்கை உங்கள் கடந்த கால எண்ணங்களின் பிரதிபலிப்பே! உங்கள் சிந்தனைகளை உற்றுக் கவனியுங்கள்; உங்கள் வார்த்தைகளை உன்னிப்பாகக் கேளுங்கள்! மனிதர்கள் தங்களுக்கு எது வேண்டாமோ அதையே சிந்தித்துக் கொண்டு, பேசிக்கொண்டு, செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இதுவே மனிதர் மத்தியில் காணப்படும் மிக மோசமான தொற்று நோய் ஆகும்! – ஜான் அஸராப்)

*"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும்; அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, தான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும். ஏசா. 55:11"* – வார்த்தைகள் சிந்தனையிலிருந்து தான் புறப்பட்டு வருகின்றன.

"... அவைகளின் சத்தம் பூமியெங்கும் அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறதே. ரோமர்.10:18"

(நீங்கள் ஒரு மனித ஒளிபரப்புக் கோபுரம் தான்***(Antenna)***. இது தொலைக்காட்சி ஒளிபரப்பு கோபுரத்தைவிட சக்தி வாய்ந்தது. உங்களுடைய ஒளிபரப்பு உங்கள் வாழ்க்கையை படைக்கிறது; இந்த உலகைப் படைக்கிறது. நீங்கள் ஒளிபரப்பும் உங்கள் எண்ணத்தின் அலைவரிசை நகரங்களுக்கு அப்பால், நாடுகளுக்கு அப்பால், இவ்வுலகத்திற்கு அப்பால், பிரபஞ்சமெங்கும் எதிரொலிக்கிறது. உங்கள் எண்ண ஒளிபரப்பிலிருந்து நீங்கள் பெறும் காட்சிகளே உங்கள் வாழ்க்கைக் காட்சிகள்! எண்ணங்கள் காந்த சக்தியுடையவை. நீங்கள் சிந்திக்கும் போது எண்ணங்கள் குறிப்பிட்ட அலைவரிசையில் பிரபஞ்சத்திற்குள் அனுப்பப்படுகின்றன. அவை அதே அலைவரிசையிலுள்ள எல்லாவற்றையும் கவர்ந்திழுக்கின்றன. (எண்ணங்கள் ஒவ்வொன்றும் வார்த்தைகளாக வெளிப்பட்டுத்தான் ஆகவேண்டும்; வேறு வழியில்லை) **பிரபஞ்சத்திற்குள் அனுப்பப்படும் ஒவ்வொன்றும் மூலத்துக்குத் திரும்பும்; அந்த மூலம் நீங்கள் தான்!** – சார்லஸ் ஹானல் 1866 – 1949

ஈர்ப்பு விதி ஒரு இயற்கை விதி, அது நடுநிலையானது, நல்லது கெட்டது என்ற

பாகுபாடெல்லாம் அதற்குக் கிடையாது. அது உங்களது எண்ணங்களைப் பெற்றுக் கொண்டு அதை வாழ்பனுபவங்களாக உங்களுக்கே திருப்பியனுப்பி விடுகிறது! – லிசா நிக்கோல்ஸ்

விடாப்பிடியான ஆதிக்க எண்ணங்கள்; காந்தச் சமிக்ஞைகளை வெளியே அனுப்பி; அவற்றிற்கு இணையானவைகளை உங்களிடம் ஈர்க்கிறது. – ஜோ விட்டாலே)

*"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு. ரோமர்.12:21. நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். 1 கொரி.13:10"*

(உங்களுக்கு என்ன வேண்டுமோ அதை உங்கள் மனதில் சிந்திக்க முடியுமென்றால்; அதை உங்கள் ஆதிக்க எண்ணமாக மாற்ற முடியுமென்றால்; அதை நீங்கள் உங்கள் வாழ்க்கையில் கொண்டு வரப்போவது உறுதி. எதிர்மறையான எண்ணங்களைவிட நேர்மறையான எண்ணங்கள் நூறு மடங்கு சக்தி வாய்ந்தவை என்ற உண்மை அறிவியற்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. – பாப் பிராக்டர்)

*"... மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். கலா.6:7"*

(உங்கள் இன்றைய சிந்தனை நாளைய வாழ்க்கை! எதை விதைக்கிறீர்களோ அதையே அறுவடை செய்வீர்கள். உங்களுடைய சிந்தனை தான் விதை. அறுவடை நீங்கள் விதைக்கும் விதையைப் பொறுத்தே இருக்கும் – மைக்கேல் பெர்னார்டு பெக்வித்)

## திருடப்பட்ட தேவ இரகசியங்களை மீட்டெடுப்போம்:

இப்படி நிறைய சொல்லிக்கொண்டே போகலாம். இதுவரையிலும் நாம் வேதத்திலிருந்து கற்றுக் கொண்டு வந்த இரகசியங்கள் நாம் தெரிந்து கொள்வதற்கு முன்னதாகவே திருடு போய்விட்டதை பார்த்தீர்களா?! ஆனால் அதற்காகக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. பூமியின் செழிப்பில் பெரும் பகுதியை அவர்கள் தங்கள் ஆளுகைக்குள் வைத்திருந்தாலும்; அவர்கள் தேவனுடைய திட்டத்திற்கு வெளியே தான் நிற்கிறார்கள் என்பது நமக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய விஷயம் இல்லையா? மிகச் சிறிய அளவில் தான் நம் எல்லைக்குள் இருக்கிறது; என்றாலும் நாம் தேவனுடைய திட்டத்தில் இருக்கிறோம் என்பதையறிந்து தைரியங்கொள்ளுங்கள்! **அவர்கள் கொள்ளையாடிக்கொண்டு போன எல்லாவற்றையும் (இரகசியங்கள் உட்பட); அவர்களைப் பின்தொடர்ந்து போய் திருப்பிக் கொள்ளலாம் வாருங்கள்! (1 சாமு. 30:8)**

என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது என்று இயேசு சொல்லியிருக்கிறாரே! (யோவா.15:5). ஆயிரம் இரகசியங்கள் அவர்களால் பிடிக்கப்பட்டிருக்கலாம்; கடத்தப்பட்டிருக்கலாம்; அதை வைத்து லட்சம் வெற்றிகளை அவர்கள் குவித்திருக்கலாம். செழிப்பு அவர்களின் கைவசமாகியிருக்கலாம்; அதை வைத்து ஏராளமான நன்மைகளை அவர்கள் செய்திருக்கலாம். ஆனால் எல்லாமே தேவனுடைய திட்டத்திற்கு வெளியே தான் செய்யப்படுகிறது. அவர்கள் நல்லவர்களாக இருந்து, நன்மைகளை மாத்திரமே செய்தாலும் தேவனுடைய மனதின் விருப்பம் எதையும் எள்ளளவு கூட அவர்கள் முடிக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளுவோம். மனதின் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தி, அதையே பேசி, செயல்முறைப்படுத்தி எல்லாவற்றையும் தங்கள் காலடிக்குக் கீழே கொண்டு வந்து விட்டாலும்; அதனால் பிரயோஜனம் என்ன? எல்லாவற்றிற்கும் காரணகர்த்தாவாகிய இயேசுவை விட்டுவிட்டார்களே!

## இரகசியங்களின் அப்பன்!:

*"கர்த்தர் தமது கிரியைகளுக்கு முன் பூர்வ முதல் என்னை (இயேசு) தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார். நீதி. 8:22 (The LORD created me (Jesus Christ) first of all, the first of his works, long ago. I was made in the very beginning)'* பரலோகத்தையும் அதிலுள்ளவைகளையும், அண்டசராசரத்தையும் அதிலுள்ளவைகளையும், பிரபஞ்சத்தையும் (பூமி) அதிலுள்ளவைகளையும், மனிதனையும் அவனுக்குள்ளிருக்கிற சகலவிதமான ஆற்றலையும் உருவாக்கிப் படைத்த தேவன்; எல்லாவற்றிற்கும் காரணியாக *(basic meterial)* தன்னுடைய குமாரனாகிய (வார்த்தை) இயேசுவையே பயன்படுத்துகிறார் என்று பார்க்கிறோம். அவர்களுக்குத் தெரியாத ஒரு பரம இரகசியம் நமக்குத் தெரியும்; அது என்ன தெரியுமா?

*"... கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே* ***அந்த இரகசியம்!*** *கொலோ.1:27"* **அவர்கள் கண்டுபிடித்த இரகசியங்களுக்கெல்லாம் அப்பனான இரகசியம் நமக்குள்! அல்லேலூயா!!** அவர்கள் வெறும் சட்ட திட்டங்களின் ***(Principles, fundamental truth, natural law, scientific theorem)*** அடிப்படையில் செயல்படுகிறார்கள். நாமோ சட்ட திட்டங்களை உருவாக்கியவரின் ***(Lawmaker)*** அடிப்படையில் செயல்படுகிறோம். யாருக்கு வல்லமை அதிகம்? ஜெயிக்கப்போவது யார்? தேவனுடைய திட்டம் நிறைவேற்றப்படப்போவது யாரால்? என்ற கேள்விகளுக்கெல்லாம் நீங்களே பதில் சொல்லிவிட முடியும். அவர்கள் நிறைய பேர்; நாமோ கொஞ்சம்! என்றாலும் அவர்களிடம் ஒதுங்கிக் கிடக்கும் செழிப்பிற்கு காரண கர்த்தாவாம் இயேசு நமக்குள்! இந்தச் செழிப்பையெல்லாம் வாக்குத்தத்த உருவத்தில் தனக்குள்ளே ஆம் என்றும் ஆமென் என்று வைத்திருக்கிற இயேசு மகிமையின் நம்பிக்கையாக நமக்குள்!

*"... பாவியின் ஆஸ்தியோ (இயேசு இல்லாதவர்கள்) நீதிமானுக்காகச் சேர்த்து வைக்கப்படும். நீதி. 13:22." "... பாவஞ்செய்கிறவனுக்கோ* ***(இயேசுவை ஏற்றுக் கொள்ளாததே பாவம்)*** *தமது பார்வைக்கு நல்லவனாயிருக்கிறவன்* ***(தேவ சித்தம் செய்பவன்)*** *வசமாய் வைத்துவிட்டுப் போகும் பொருட்டுச் சேர்த்துக் குவித்து வைக்கும் தொல்லையை அவர் நியமித்திருக்கிறார்; ... பிர. 2:26."* ஒரு சின்ன கணக்கு: பூமியின் செழிப்பு – ஐசுவரியம் – நன்மைகள் – முக்கியமாக பணம் ... இதில் நாம் பணத்தை எடுத்துக் கொள்வோம். உலக மக்கள் தொகை எண்ணூறு கோடி (8,00,00,00,000) ***(approx.,).*** இதில் 1% என்றால் எட்டு கோடி (8,00,00,000) வரும். பூமியின் மீது சம்பாதிக்கப்படுகிற மொத்த பணத்தில் 96% இந்த எட்டுகோடி பேரின் ஆதிக்கத்திற்குள் இருக்கிறது. மீதியிருக்கிற 4% பணம் மட்டும் மற்ற 99% (7920000000) மக்களிடம் பரவிக் கிடக்கிறது! இதில் தேவனுடைய திட்டத்தில் இருக்கிற புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களிடம் இருக்கிற பணத்தின் சதவிகிதத்தை கணக்குப் பார்த்தால் .0000 என்றுதான் ஆரம்பிக்க வேண்டியதாயிருக்கும்! மிக சொற்ப % அளவில் இருக்கும் நாம்; இந்த சொற்ப அளவிலான பணத்தை வைத்துக் கொண்டு தேவனுடைய திட்டத்தைத் தைரியமாக கையிலெடுத்திருக்கிறோமென்றால்; நாம் அவர்களைப் பார்த்து திகைத்து ***(upset)*** நின்றுவிடவில்லை என்பதையே அது காட்டுகிறது!

சங்கீதம் 37–ஐ வாசித்துப் பாருங்கள்; அவர்கள் நமக்கு ஒரு பிரச்சனையே அல்ல, பணம் முழுவதும் அங்கே போய் மாட்டிக்கொண்டிருப்பதும் நமக்கு பிரச்சனை அல்ல! தேவன் சகல நன்மைகளையும் நமக்காகத்தான் பூமியின் மீது வைத்தார். நாம் விவரம் தெரியாமல்; தேவனுடைய திட்டம் புரியாமல் திருதிருவென்று முழித்துக்கொண்டு நின்ற கால இடைவெளியில்; அவர்கள் அவற்றையெல்லாம் வளைத்துப் போட்டுக்கொண்டார்கள்! தேவன் தன்னுடைய சித்தம் செய்யும் தன்னுடைய பிள்ளைகளுக்காக வைத்திருந்த எல்லாவற்றையும்; அவருடைய வேதபிரமாணங்களின் சட்டதிட்டங்களின்படியே அவர்கள் சுரண்டி எடுத்துக் கொண்டார்கள். தேவனை விட்டுவிட்டு, அவருடைய பிரமாணங்களை மட்டும் இயக்கினார்கள்; எல்லாம் அங்கே போய்க் குவிந்தது. என்றாலும் என்ன; எல்லாம் விழலுக்கு இறைத்த நீராகிப் போனது. வாரியிறைக்கிறார்கள், ஏழைகளுக்கு கொடுக்கிறார்கள், கேட்கிற எவனுக்கும் கொடுக்கிறார்கள், நன்மை செய்கிறார்கள், இரங்கிக் கடன்கொடுக்கிறார்கள்; செய்த நன்மைகளின் பலனை விளைய வைத்து மீண்டும் மீண்டுமாகப் பெற்றும் கொள்கிறார்கள். தங்களுடைய கிரியைகளுக்குத் துவக்கமாக அவர்கள் இயேசுவை கொண்டிராதக் காரணத்தினால் எல்லாமே வீணாகிக்கொண்டிருக்கிறது. பூமியின் மீது சீர்கேடுகள் குறையவில்லை; மாறாக நாளுக்கு நாள் பிரச்சனைகள் அதிகமாகிக்கொண்டிருக்கிறது. புல்லின் பூக்களைப் போல, எழும்பி மறையும் புகையைப் போல மாயமாகிக் கொண்டிருக்கிறார்கள். மணலின்மேல் கட்டப்படும் வீடுகள் இடிந்து விழுந்து கொண்டேயிருக்கின்றன.

## இயேசுவோடு களமிறங்குவோம்:

வெறும் சட்ட திட்டங்களினடிப்படையில் செய்யப்படும் காரியங்கள் பிரச்சனைகளுக்குத் தீர்வாக முடியாது; இயேசுவே தீர்வு என்பதை அவர்கள் அறிய வேண்டும். வெறும் பிரமாணங்களினடிப்படையில் இயங்கியே பூமியின் செழிப்பையெல்லாம் கைவசமாக்கியிருக்கும் இவர்கள்; இந்த முயற்சியில் இயேசுவோடு சேர்ந்து களமிறங்கியிருப்பார்களானால்; பூமி ஏதேனாகியிருக்கும். ஆண்டவனின் தோட்டத்திலே அழகு சிரித்துக்கொண்டிருந்திருக்கும்; ஆகாயம்

பூமியெங்கும் இளமை சிரித்துக்கொண்டிருந்திருக்கும்! இந்தப் பூமியை எழில் மயமாக்கும் பொறுப்பு நம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தேவன் வாக்குரைத்தபடி பூமியைச் சுதந்தரித்து; அதிலுள்ள செழிப்பை வாக்குத்தத்தங்களின் வழியாகச் சுத்தப்படுத்தி, உறிஞ்சியெடுத்து, நம்முடைய எல்லைகளுக்குள்ளாகக் கொண்டு வரவேண்டும். மந்திரத்தால் மாங்காய் காய்க்க வைக்கிற கதையை இங்கே நான் பேசவரவில்லை. நம்முடைய கையின் பிரயாசத்தை ஆசீர்வதித்து; அதன் வழியாக செழிப்பைக் கொண்டு வரும் கதையையே பேச வருகிறோம்.

96% உலக சொத்துக்களைக் குவித்திருக்கும் உலக பணக்காரர்கள்; அதற்காக தங்களிடமுள்ள மனதின் ஆற்றலில் (விசுவாசம் + அறிக்கை) வெறும் 5% ஐ மட்டும் தான் உபயோகித்திருக்கிறார்கள். ஆனால் நாம் இயேசுவோடு சேர்ந்து இந்த விசுவாச முயற்சிகளை எடுக்கும் போது; நூறு சதவிகிதம் நமக்குள் இருக்கும் தெய்வீக ஆற்றலை வெளியே கொண்டு வர முடியும். நம்முடைய தேவன் சர்வவல்லமையுள்ளவர்; அவருக்கு ஈடு இணை அவர் தான்! அவர் தன்னுடைய வார்த்தைகளை அனுப்பி இந்த பிரபஞ்சம் (அண்டசராசரம்), பால்வெளி மண்டலம், அதிலுள்ள சூரியன், அதைச் சுற்றிவரும் நம்முடைய கிரகமான பூமி, அதிலுள்ள மனிதர்கள், மனிதனின் உடலுறுப்புகள், உயிரணுக்கள், அணுவின் மூலக்கூறுகள், அந்த அணுக்களின் இறுதியான ஆற்றல், ***so on.,*** எல்லாவற்றையும் உருவாக்கினார் என்பதை ஆதி. 1ஆம் அதிகாரத்தில் பார்க்கிறோம். பேசி வார்த்தைகளை அனுப்புவதற்கு முன்; தான் பேசப்போகிற காரியங்களைப் பற்றி மனதில் நினைத்து, சிந்தனை செய்து, கற்பனை செய்துவிட்டு பிறகு தான் அவற்றை வார்த்தையுருவத்திற்கு கொண்டு வந்து அனுப்புவதையும் பார்க்கிறோம். (ஆதி.8:22)

## காரியத்தின் கடைத்தொகையைக் கேட்போமாக:

*"தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்; எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. பிர. 12:13."* தேவனற்ற உலக மக்கள் சகல ரீதியிலும்; தேவனுடைய சொந்தப்பிள்ளைகளைப் பார்க்கிலும் செழித்திருப்பதை, நன்றாக இருப்பதைப் பார்த்து குழம்பிப் போக வேண்டிய அவசியமில்லை. அவர்கள் தேவன் உருவாக்கிய பிரபஞ்சத்தோடும் அதிலுள்ள காரியங்களோடு மட்டும் தொடர்பு வைத்திருக்கிறார்கள். எல்லா மனிதனுக்குள்ளும் இயற்கையாகவே அவர்களுடைய படைப்பாளராகிய தேவனுடைய வல்லமை ஆற்றல் நிலைகொண்டிருக்கிறது. சிந்தனைப் பகுதியிலிருந்து வெளிப்படுகிற அந்த ஆற்றலின் உதவியைக் கொண்டு அவர்கள் செழிப்படைந்து வருகிறார்கள். ஒரு மழை பெய்ததும் சில நாட்களிலேயே குப்பென்று துளிர்த்தெழும்பும் புற்களின் பூவைப் போல பளிச்சென்றிருக்கிறார்கள், பச்சைப் பசேலென்றிருக்கிறார்கள்! நீதிமானாகிய லோத்து ஏமாந்தது கூட இப்படிப்பட்ட செழிப்பைப் பார்த்துத்தான்.

*"லோத்து தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்து: யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக் கண்டான். கர்த்தர் (சோதோமையும் கோமோராவையும் அழிக்கும் முன்னே) சோவாருக்குப் போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் (ஏதேன்) எகிப்து தேசத்தைப் போலவும் இருந்தது. ஆதி. 13:10."* தேசம் செழிப்பாகத்தான் இருந்தது; ஆனால் அழிக்கப்பட்டுப் போனது என்பதைப் பார்க்கிறோம். லோத்தின் முடிவு என்னவானது என்பதும் எல்லோருக்கும் தெரியும். செழிப்பாக வாழ வேண்டும் என்பது தேவனுடைய திட்டத்திலேயே முதன்மையானது, அவசியமானது. ஆனால் அதை அடைவதற்காக நாம் போகப்போகிற வழிகளைக் குறித்து எச்சரிக்கையாயிருப்பது மிகவும் அவசியம்.

சர்வமும் சக்தி மயம் என்பார்கள் உலகத்தார்; ஆம்... உண்மை தான். காணப்படுகிற சகல காரியங்களும் காணப்படாத தேவனுடைய வல்லமையின் சக்தி – ***(power)? skill to do something).*** தேவனால் உருவாக்கப்பட்ட பிரபஞ்சமும் அதிலுள்ள சகல காரியங்களும் ஆற்றலின் வடிவத்தில் தான் இருக்கிறது; எல்லாவற்றிலும் ஒரு இயக்கம் இருந்து கொண்டேயிருக்கிறது. எதுவும் எதுவுமே செய்யாமல் அசைவில்லாமல் இருந்த இடத்திலேயே இருப்பதில்லை; சகலமும் இயங்கிக் கொண்டே... ஏதாவது ஒரு வேலையைச் செய்தபடி... முன்னேறிக்கொண்டே... வளர்ந்து பெருகிக்கொண்டே இருக்கிறது.

மனிதர்களும் கூட தேவனுடைய சாயலாக உருவாக்கப்பட்டுள்ள ஒரு சர்வ சக்தி வடிவம் தான். ஆவி – ஆத்மா – சரீரம் ஆகிய முப்பரிமாணத்தில் தேவனைப் போலவே இயங்கும்

ஆற்றல் அவனுக்குள் வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் மனிதன் தன்னுடைய சிந்தனை என்கிற ஆற்றலின் மூலமாக எதை வேண்டுமானாலும் உருவாக்கிவிட முடியும். உலகத்தோற்ற முதல் இதுவரையிலுமாக வாழ்ந்த மனிதர்கள் தங்களுடைய சிந்தனையின் மூலமாக வடிவமைத்தது தான் இன்றைய உலகம். இப்போதிருக்கிற நாம் நம்முடைய சிந்தனையின் மூலமாக உருவாக்கப்போவது தான் இனிமேல் இருக்கப்போகிற உலகம்! நாம் எதை சிந்திக்கிறோமோ அதைத்தான் பேசப்போகிறோம். தேவனுடைய சாயலாயிருக்கிற நம்முடைய வார்த்தைகளுக்கு அவருடைய வார்த்தைகளுக்கொத்த அதே ஆற்றல் இருக்கிறது.

## அவர்களின் வழி நம் வழிகளல்ல:

உலகத்தாருடைய செழிப்பைப் பார்த்து பிரமித்து நிற்க வேண்டிய அவசியமில்லை, பொறாமையோ ஏக்கமோ பெருமூச்சோ கூட அவசியமுமில்லை. நாம் அவர்களைப் போல் தேவனற்றவர்களில்லையே! தேவனை விட்டுவிட்டு மாயையைப் பின்பற்றிப் போக நமக்கென்ன அவசியம் வந்து விட்டது? அவர்கள் பிரபஞ்சத்தை உற்று நோக்கி, தங்களுடைய ஆற்றலை அதற்குள்ளாக அனுப்பி தாங்கள் விரும்பியதைப் பெற்றுக் கொள்கிறார்கள். சங்கீதம் 73—ஐ வாசித்துப் பாருங்கள்: இந்தப் பிரபஞ்சத்தையே உருவாக்கியவரை நமக்குள்ளாக வைத்திருக்கிற நாம்; உலகத்தாருடைய வழிகளில் போய் செழிப்படைய வேண்டிய அவசியமுமில்லை. நம்முடைய வழி வேறு, நம்முடைய ***level*** வேறு, நம்முடைய ***category*** வேறு.

அவர்கள் தங்களுக்கு என்ன விருப்பமோ; அந்தக் காரியங்களை வேதத்தின் சட்டதிட்டங்களை உபயோகித்துப் பெற்றுக் கொள்கிறார்கள். **நாமோ தேவனுக்கு என்ன விருப்பமோ; அந்தக் காரியங்களை அவருடன் சேர்ந்து அவருடைய சட்ட திட்டங்களின்படி செயல்பட்டு பெற்றுக் கொள்கிறோம்.** தாங்கள் பெற்றுக் கொண்ட காரியங்கள் தேவனுக்கு பிரியமானது தானா என்பதெல்லாம் கூட அவர்களுக்குத் தெரியாது. **ஆனால் நாம் தேவனுடைய மனதின் விருப்பமறிந்து; அதையே கேட்டுப் பெற்றுக் கொள்கிறபடியினால் மனநிறைவோடிருக்கிறோம்.** தாங்கள் பெற்றுக் கொண்ட காரியங்களினால் பூமிக்கு என்ன நன்மை என்பதையெல்லாம் பற்றிய ஒரு வெளிப்பாடு அவர்களுக்கு இல்லை; அதனால் அவர்களால் தேவனுடைய திட்டம் பூமியின் மீது நடப்பதில்லை. **ஆனால் நாம் தேவனிடமிருந்து பெற்றுக் கொண்ட சகல நன்மைகளைப் பற்றிய வெளிப்பாடு, அதன் இரகசியம் நமக்குத் தெரியும்.** அவர்கள் நிறைய பேர்; ஆனால் அவர்களால் தேவனுக்கு எந்த பிரயோஜனமுமில்லை. **நாம் கொஞ்சம் பேர்; ஆனால் தேவனுடைய சித்தம் செய்வதே நம் உயிர் மூச்சு.** அவர்களிடத்திலிருப்பது அதிகம்; ஆனால் பூமியை கீழான நிலைமைக்குக் ***(degrade)*** கொண்டு போய்க்கொண்டேயிருக்கிறார்கள். **நம்மிடமிருப்பது கொஞ்சம்; ஆனால் குறைவில்லாத அழகான பூமியை *(high degree) (hyper)* உருவாக்கிக் கொண்டிருக்கிறோம்.**

அவர்கள் கண்களால் காண்கிற காரியங்களை அடித்தளமாகக் கொண்டு நம்பிக்கையோடு செயல்படுகிறார்கள். **நாமோ கண்களால் பார்க்கமுடியாத காரியங்களை அடித்தளமாகக் கொண்டு விசுவாசத்தோடு செயல்படுகிறோம்.** அவர்களுடைய குதிரையோ வண்டிக்குப் பின்னே; **நம்முடைய குதிரையோ வண்டிக்கு முன்னே!** அவர்களுடைய கவனம், நினைவுகள், நினைவு சார்ந்த முயற்சிகள், பேச்சு, நம்பிக்கை எல்லாமே தேவனுடைய கையின் கிரியைகளின் மீது தான் இருக்கிறது. வேதத்தின் பிரமாணங்கள் அவர்கள் விஷயத்திலும் செயல்படத்தான் செய்கிறது; அதனால் தான் ஜெயிக்கிறார்கள்; பூமியின் செழிப்பை தங்கள் வசப்படுத்தி விட்டார்கள். **நாமோ நம்முடைய இவை எல்லாவற்றையும் இயேசுவிலிருந்து துவக்குகிறோம்; அண்டசராசரத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உருவாக்கியவரின் மேல் நம்முடைய தளத்தைப் போட்டிருக்கிறோம்.**

சிந்தனை மண்டலத்தை அவர்கள் தங்களுடைய வெற்றியின் ஆரம்பத் தளமாகக் கொண்டு இயங்குகிறார்கள். **நாமோ சர்வத்தையும் படைக்கும் ஆற்றலுள்ள அந்தச் சிந்தனை மண்டலத்தை நமக்குள் திட்டம் பண்ணி *(sketch)* வைத்த தேவனை, நம் வெற்றியின் ஆரம்பத் தளமாகக் கொண்டிருக்கிறோம்.** ஆனால் அவர்களுக்கு சிந்தனையின் ஆற்றலைப் பற்றின இரகசியம் புரிந்த அளவுக்கு நமக்குப் புரியவில்லை. **ஆனால் அதை விட மேலான இரகசியம் ஒன்று நமக்குண்டு.**

*“புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். (which is the secret he hid through all past ages from all mankind but has now revealed to his people) கொலோ. 1:27”* தேவ ஜனங்களால் புறக்கணிக்கப்பட்ட, அறியப்படாமல் போன தேவனுடைய இரகசியங்களின் கீற்றுகள் தேவனையறியாத உலக ஜனங்களுக்குள் சிதறடிக்கப்பட்டுப் போனது. தேவ ஜனங்களிடமிருந்து பறிபோன எத்தனையோ காரியங்களில் இந்த இரகசியமும் ஒன்று. ஆனால் பறிபோன எல்லாவற்றையும் விட மிகவும் முக்கியமான காரியமும் இது தான். தேவனை மட்டும் விட்டு; இரகசியங்களை மாத்திரம் எடுத்துக் கொண்டு போன உலகத்தார்; ஏதேனின் செழிப்பை தன்வசப்படுத்திக் கொண்டார்கள்; ஆபிரகாமின் ஆசீர்வாதப் பொட்டலம் பறிபோனது. இயேசுவின் மூலமாக சிலுவையிலிருந்து இறங்கிய ஆசீர்வாதங்களில் இரட்சிப்பைத் தவிர வேறெதுவும் தேவ பிள்ளைகளுக்கு மிஞ்சவில்லை!

## ... அதற்கு அவர்: அதைப்பின் தொடர்; அதை நீ பிடித்து, சகலத்தையும் திருப்பிக் கொள்வாய் என்றார். 1 சாமு. 30:8:

நான் இழந்து போன, தொலைத்துப் போட்ட எல்லாவற்றையும் மீட்டுக் கொள்ளும் காலகட்டம் இது தான். பூமியை சுதந்தரிப்பாய் என்ற முதல் வாக்குத்தத்தம் மூச்சிறைக்க நிறைவேறி ஓடிவந்து கொண்டிருக்கிறது! உலக ஜனங்களின் செழிப்பின் இரகசியத்தை அவர்களை பின் தொடர்ந்து போய் பிடித்து; மீட்டுக் கொண்டோம்! அந்த இரகசியங்களடங்கிய பெட்டியைக் ***(case)*** கைப்பற்றி விட்டோம். புதிய உடன்படிக்கையின் சகல இரசியங்களையும் உலகத்தாரிடம் தொலைத்து விட்டு; நியாயப்பிரமாணத்தோடு முட்டி மோதிக் கொண்டு கிடக்கும் தேவபிள்ளைகளின் அறியாமை இருளுக்கு ஒரு முற்றுபுள்ளி வந்து விட்டது.

1 சாமு. 30:8 ஐ முழுவதுமாக வாசித்துப் பார்த்து விட்டு என்ன நடக்கிறது என்பதை கவனியுங்கள்: *“...எல்லாவற்றையும், ...தாவீது விடுவித்தான். அவர்கள் கொள்ளையாடிக் கொண்டு போன எல்லாவற்றிலும்...”* ஒன்றும் குறைவுபடாமல் எல்லாவற்றையும் தாவீது திருப்பிக் கொண்டான். இந்த வேலையைத்தான் இப்போது நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். செய்யச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். கர்த்தருடைய இரசியங்கள் இப்போது நம்மிடத்தில் இருக்கிறது (நீதி. 3:32) நாங்கள் கண்டுபிடித்த இந்த இரகசியத்தை யாருக்கும் சொல்லாமல் மூடி மறைக்காமல் அதை அம்பலமாக்கிக் கொண்டிருக்கிறோம். தேவன் தன்னுடையவர்களுக்கு இரகசியத்தை வெளிப்படுத்தாமல் எதையும் செய்வதில்லை, செய்யவும் முடியாது. ஏனென்றால் நாம் அவருடைய கையின் கிரியைகள், அவருடைய அவயவங்கள், அவருடைய வாய், அவருடைய எழுத்தாணி... ஒரே வார்த்தையில் சொல்லப்போனால் நாம் தான் அவருடைய ஊடகம்! நம்மை ஊடுருவாமல் அவரால் உலகத்திற்குள் ஊடுருவ முடியாது. அதற்காகத்தான் நமக்குள்ளாக இயேசுகிறிஸ்துவையும், பரிசுத்தாவியானவரையும் கொடுத்திருக்கிறார் ***(fix in position ready for use)***

தேவனற்ற உலகத்தாரிடம் செயல்பட்டுக்கொண்டிருந்த நம்முடைய இரகசியங்களைத் திருப்பிக் கொண்டோம். இனிமேல் அந்த இரகசியப் பிரமாணங்களை ***(core)*** நாம் எடுத்து அதை விதைகளாக உபயோகிக்க வேண்டும். நாம் அவர்களைப் போல் தனியாக இல்லை; இயேசுவோடு சேர்ந்து இயங்கிக் கொண்டிருப்பதால்; ஏற்ற காலத்தில் பூமியின் செழிப்பு நம் எல்லைகளுக்குள் வந்து குவியப்போவது நிச்சயம்! இரகசியம்... அது எல்லோருக்கும் தெரிய வேண்டியது அவசியம் என்ற தலைப்பின் கீழ் முன்னதாகவே சில காரியங்களை நான் எழுதியிருந்தேன். இப்போது அந்த இரசியங்களின் இன்னும் சில காரியங்களை எழுதி முடிக்கப் போகிறேன்.

## இன்னும் சில இரகசியங்கள்:

இந்தப் பூமியின் மீது எத்தனையோ தீமையான காரியங்கள் நடக்கின்றன. ஆனால் அவற்றை எதிர்த்து போராட்டம் நடத்தக் கூடாது. நீங்கள் எதிர்ப்பது வலுக்கும் என்கிறார் கார்ல் ஐ (1875–1961) போர் எதிர்ப்பு ஊர்வலம் எதிலும் நான் கலந்து கொள்ளப் போவதில்லை; அமைதிப்பேரணி இருந்தால் கூப்பிடுங்கள், கலந்து கொள்கிறேன் என்றார் அன்னை தெரசா! ***(ref:*** மத். 5: 38–41)

எதிர்மறையான விஷயங்களில் கவனம் செலுத்துவதன் மூலம் நீங்கள் உலகத்திற்கு உதவி செய்ய முடியாது; மாறாக அது அதிகப்படியான கேடுகளைக் கொண்டு வருகிறது. விரும்பத்தகாத காட்சியொன்று மனதில் தோன்றினால்; உடனடியாக நல்ல காட்சிகளடங்கிய புதிய சமிக்ஞைகளை *(signal)* நாம் அனுப்ப வேண்டும். இப்படிச் செய்வதின் மூலம் ஒரு உலகளாவிய பிரச்சனையைக் கூட நம்மால் மாற்றியமைக்க முடியும். பூமியிலுள்ள எல்லோருமே சந்தோஷமாக இருப்பதாக, அபரிமிதமாக இருப்பதாக நினையுங்கள்; அதற்கு உங்கள் எண்ணங்களின் சக்தியை கொடுங்கள் – ஜாக் கேன்ஃபீல்டு *(ref: சங். 72:19, ஏசா. 6:3)*

நாட்டு நடப்புகள் தங்களுக்கு தெரிந்திருக்க வேண்டியது அவசியம் என்று நினைத்து மக்கள் தொலைக்காட்சி செய்திகளை பார்க்கின்றனர், செய்திப் பத்திரிக்கைகளை வாசிக்கின்றனர். அது உண்மை தான், ஆனால் நீங்கள் தகவல் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட வேண்டிய அவசியமில்லையே? நான் இரகசியத்தைக் கண்டுபிடித்தவுடன், இனி தொலைக்காட்சிச் செய்திகளைப் பார்ப்பதில்லையென்றும், செய்தித்தாள்களைப் படிப்பதில்லையென்றும் முடிவு செய்தேன். ஏனென்றால் அவை மகிழ்ச்சியான மனநிலையில் வைத்திருக்க எனக்கு உதவி செய்வதில்லை. பத்திரிக்கைகளும் தொலைக்காட்சி நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு மோசமானச் செய்திகளையே நமக்கு விற்க முயல்கின்றன. ஊடகங்கள் வெறும் விளைவுகள் தான்; நாம் தான் காரணகர்த்தா! நாட்டில் என்ன நடந்தால் நன்றாக இருக்கும் என்பதில் கவனம் செலுத்தி, நல்ல காரியங்களை நினைத்து சமிக்ஞைகளையே அனுப்ப வேண்டும். அப்போது ஊடகங்கள் நமக்கு நல்ல செய்திகளைக் கொண்டு வரும் – *ஜேம்ஸ் ரே (ref: பிலி. 4:8)*

என்னிடம் கேட்கப்பட்ட கேள்விகளில் ஒன்று: இரகசியத்தை அறிந்த ஒவ்வொருவரும் அதைப் பயன்படுத்தி, இந்தப் பிரபஞ்சத்தை ஒரு பொருட்பட்டியலாக பாவித்தால்; எல்லாப் பொருட்களும் தீர்ந்து விடாதா? எல்லோரும் வங்கியை நோக்கி ஓடி அதை திவாலாக்கி விட மாட்டார்களா? என்பது தான் அந்த கேள்வி. பூமியிலுள்ள எல்லோருக்கும் போதுமான அளவிற்கும் அதிகமாகவே நன்மை செய்யக்கூடிய காரியங்கள் பூமியின் மீது இறைந்து கிடக்கின்றன. மனித குலத்தின் மனதில் புகுந்து, விஷக்கிருமியாய்ச செயல்படும் பெரிய பொய் ஒன்று இங்கு சுற்றி சுற்றி உலா வந்து கொண்டிருக்கிறது!(?) பூமியின் மீது பற்றாக்குறை இருப்பதாகவும், அது அதிகரித்துக் கொண்டே போவதாகவும், இனி வரும் காலங்களில் மனித குலமே பூமியில் வாழ முடியாது என்பதைப் போலவும் அந்தப் பொய் உலகமெங்கும் சுற்றியலைந்து புழுகித் திரிகின்றது! இதனாலேயே மக்கள் பயத்திலும், பேராசையிலும், கஞ்சத்தனத்திலும் வாழ்கிறார்கள்! உலகம் ஆலாகால விஷத்தை விழுங்கியுள்ளது. உங்கள் மனம் தான் எல்லாவற்றின் படைப்புச் சக்தியாக இருக்கிறது. அப்படியிருக்கும் போது பற்றாக்குறை என்பது எவ்வாறு சாத்தியம்? – ஜாண் அஸரப் *(எபே. 3:20, மத். 23:15, ஆதி. 1:28)*

உங்கள் கைகளை ஒரு சக்தி மிக்க நுண்பெருக்கியின் கீழே வைத்துப் பார்த்தால், ஆற்றலால் அதிர்ந்து கொண்டிருக்கும் ஒரு தொகுதியைப் பார்க்கலாம். இந்தப் பிரபஞ்சம், நமது பால்வெளி மண்டலம், நமது கிரகம் (பூமி), மனிதன், உடலுறுப்புகள், உயிரணுக்கள், அணு மூலக்கூறுகள், அணுக்கள், இப்படி எல்லாமே ஆற்றலில் தான் வந்து முடிகிறது. பெரும்பான்மையான மக்கள் இந்த பூதவுடலைக் *(physical structure)* கொண்டு தங்களை வரையறுத்துக் கொள்கின்றனர். சிந்தியுங்கள். நீங்கள் வெறும் உடம்பல்ல, நீங்கள் ஒரு ஆன்மா. மாபெரும் சக்தி வெளியில் இயங்கிக் கொண்டிருக்கும் ஓர் ஆற்றல் தளம். நீங்கள் தான் ஆற்றல்; ஆற்றலை அழிக்கவோ உருவாக்கவோ முடியாது. நீங்கள் எப்போதுமே இருந்து வந்துள்ளீர்கள்; நீங்கள் ஒரு போதும் இல்லாமல் போக முடியாது. நீங்கள் இல்லாத நிலையை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? முடியவே முடியாது; ஏனென்றால் அது சாத்தியமேயில்லை, நீங்கள் அழிவற்ற ஆற்றல் – ஜேம்ஸ் ரே *(சங். 139:14–16)*

பிரபஞ்சம் எண்ணத்திலிருந்து தான் வெளிப்படுகிறது என்பதையும், நம்மைச் சுற்றி இருக்கும் பருப்பொருட்கள் *(able to be seen)* அனைத்தும் உருமாற்றமடைந்த எண்ணங்கள் தான் என்பதை குவாண்டம் இயக்கவியல் உறுதி செய்துள்ளது. நாம் தான் இந்தப் பிரபஞ்சத்தின் மூலம். நம்மால் எதை வேண்டுமானாலும் படைக்க முடியும்! நாம் தான் இந்தப் பிரபஞ்சத்தின் தலைவிதியை நிர்ணயிக்கிறோம். மனதின் ஆற்றலுக்கு எல்லையே கிடையாது – ஜாண் ஹேகலின் *(ஆதி. 1, 2 பேதுரு 3:5)*

நம்முடைய உடலாலும் பௌதீக இருப்பாலும் நமது கவனம் சிதறி விடுகிறது. உங்கள் ஆன்மாவைத் தற்காலிகமாகச் சிறை வைத்திருக்கும் ஒரு சாதனம் தான் உங்கள் உடல். உங்கள் ஆன்மா மிகப் பெரியது, நீங்கள் ஆதியும் அந்தமும் அற்றவர்கள். கச்சிதமாக வடிவமைக்கப்பட்டுள்ள மனித வடிவிலான கடவுளின் பிரதி நீங்கள்! நீங்கள் தான் உங்கள் தலைவிதியை நிர்ணயிக்கப் போகிறவர்கள். கதாசிரியரும் நீங்கள் தான், கதையும் நீங்கள் தான், எழுத்தாணி உங்கள் கையில். நீங்கள் எதைத் தேர்ந்தெடுப்பீர்களோ அது தான் கதையின் போக்கு, அது தான் கதையின் முடிவு! – **லிசா நிக்கோல்ஸ்**

நாம் கடவுளின் பிம்பம். மலர்ந்து கொண்டிருக்கும் சாத்தியக்கூறுகளின் முடிவற்ற தளம். உங்களுடையதில் 99% உங்களால் பார்க்க முடியாதது, தொட முடியாதது!

உங்களுக்குள் உறைந்திருக்கும் அக ஒளியின் மீது கவனத்தைச் செலுத்துங்கள். அதன் முன்னால் எந்தக் குறைபாடுகளும் நிற்க முடியாது. நீங்கள் உங்களுடைய கச்சிதமான கண் பார்வையை மீட்டெடுக்கலாம், வியாதிகளிலிருந்து விடுதலையாகலாம், ஏழ்மையைப் போக்கி செழிப்பைக் கொண்டு வரலாம், வயதாவதையும் சீர்கேடுகளையும் புரட்டிப் போடலாம். அந்த அக ஒளியின் மீதே தொடர்ந்து கவனம் செலுத்துங்கள்; முழுமை உங்கள் முன் தோன்றி தரிசனம் தரும் – **சார்லஸ் ஹானல்**

## முடிக்கப் போகிறேன் ...:

முடிக்கப் போகிறேன்... நம்முடைய வேதத்தின் இரகசியங்கள் எந்த அளவிற்கு இந்த உலகத்திற்குள் சிதறடிக்கப்பட்டுப் போயிருக்கிறது என்பதை நிதானித்திருப்பீர்கள். நமக்குள் மகிமையின் நம்பிக்கையாக வாசம் செய்கிற இயேசுகிறிஸ்துவும், பரிசுத்தாவியானவரும் இரகசியங்களை மீட்டெடுத்து; அதைச் செயல்முறைப்படுத்த நமக்கு உதவி செய்கிறார்கள். தேவனுடைய உன்னத திட்டத்தின்படி இந்தப் பூமியை மாற்றி அதற்குப் பெருமை சேர்க்கவும், அதன் மதிப்பைக் கூட்டவுமே தேவன் நம்மை அவரைப் போலவே சிருஷ்டித்து அனுப்பியிருக்கிறார். உலகத்துக்குள் சிதறடிக்கப்பட்ட தெய்வீக இரகசியத்தை இப்போது நாம் திருப்பிக் கொண்டோம். திருப்பிக் கொள்ளப் போகிறோம்...

இரகசியத்தையறிந்த உலகத்தார் மனம் போல் வாழ்வு என்றொரு பழமொழியை எழுதி வைத்தார்கள். நீ உன்னையறிந்தால் உலகத்தில் போராடலாம்; உயர்ந்தாலும் தாழ்ந்தாலும் தலை வணங்காமல் நீ வாழலாம் என்கிறான்! உலகத்தாரிடம் இதுவரை இயங்கிக் கொண்டிருந்த இரகசியத்தின் ஊற்று இயேசு தான்! அவர் நமக்குள்ளிருப்பது அந்த இரகசியத்துக்கெல்லாம் பெரிய இரகசியம், பரம இரகசியம், சிதம்பர இரகசியம்! மூடி மறைக்கப்பட்ட இரகசியம் அம்பலப்படுத்தப்படும் நாட்கள் இது. இதுவே எழுப்புதல்! புதிய உடன்படிக்கை ஊழியத்தின் சாராம்சமே இரகசியங்களை வெளிப்படுத்துவது தான். வெளிப்படுத்தியிருக்கிறோம்; எங்கள் பணியை நிறைவேற்றியுள்ளோம். எடுத்துக் கொண்டு போய் செயல்முறைப்படுத்தும் பொறுப்பு உங்களுடையது.

உங்களுடைய வாழ்க்கை உங்கள் நினைவலைகளில் ஆரம்பிக்கிறது. அது வார்த்தைகளாக உருமாறி அடிமேல் அடியெடுத்து வைக்கிறது, கிரியைகளை நடப்பிக்கிறது. படிப்படியாக நமக்குள்ளிருக்கிற தெய்வீக ஆற்றல் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. இப்போது நாம் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த உலகத்தை நமக்கு முன்பாக வாழ்ந்துவிட்டுப் போனவர்கள் இப்படித்தான் உருவாக்கியிருக்கிறார்கள்! நினைத்தார்கள்... பேசினார்கள்... வேலை செய்தார்கள்! கடந்து போன மனிதர்களின் நினைவுகளாலும், வார்த்தைகளினாலும், நடவடிக்கைகளினாலும் உருவாக்கப்பட்ட இவ்வுலகம் எப்படியிருக்கிறது என்பது எல்லோருக்குமே தெரியும். மோசமான உலகம் இது, உலகம் கெட்டுப் போச்சு, காலம் கெட்டுக் கெடக்குது, எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பதே தெரியவில்லை போன்ற வார்த்தைகளை நாம் கேட்டு வருகிறோம். பூமியை அலசி ஆராய்ந்து கொண்டிருப்பவர்கள் ***(skimming)*** அனுபவப் பூர்வமாக பார்த்த உலகத்தைப் பற்றின வர்ணனைகள் தான் இது.

வாழ்ந்து முடித்துவிட்டுப் போன மனிதர்களால் பூமி மோசமாகிப் போனதென்னவோ உண்மை தான். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பக்காலம் முடிந்து விட்டது. இப்போது பூமியின்

மீது உயிரோடிருக்கிற நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதே கேள்வி. உலகத்தோற்ற முதல் இதுவரை வாழ்ந்துக் கொண்டிருக்கிற தேவனுடைய பிள்ளைகளால் தான் இன்றைய தினம் வரையிலும் பூமி நிலைத்திருக்கிறது. அவர்களுக்கு ஒருவேளை இரகசியம் சரிவர புரியாமல் விளங்காமல் போயிருக்கலாம். என்றாலும் இரகசியத்தின் ஊற்றாகிய இயேசு அவர்களுக்குள் இருக்கிறார்; சும்மா அல்ல மகிமையின் நம்பிக்கையாக! இரகசியத்தை மட்டும் எடுத்துக் கொண்டுப் போய் பூமியின் செழிப்பை தன் வசப்படுத்தி, வெற்றி பெற்ற தேவனற்ற உலகத்தார் எதைச் சாதித்தார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

தேவ இரகசியத்தின் மூலம் பெற்ற செழிப்பையும், வெற்றியையும் கூட மூட்டைக் கட்டிக்கொண்டார்கள். அவர்களுக்குத் தேவனைப் பற்றின சரியான முகவுரையோ, விழிப்புணர்வோ, அறிவோ கிடையாது என்பதால் இன்றளவும் பூமி சாபச்சீர்கேடுகளை எரிமலையாகக் கக்கிக்கொண்டிருக்கிறது, பாலைவனச்சூறாவளியாக வீசிக்கொண்டிருக்கிறது. நாம் எண்ணிக்கையில் கொஞ்சம் பேராக இருந்தாலும் இந்தப் பூமியையும், அதிலுள்ள மனிதர்களையும், மற்ற எல்லாவற்றையும் காப்பாற்றும் பொறுப்பு நம் கையில் தான் விடப்பட்டிருக்கிறது. தான் ஒருவராய் பெரிய காரியங்களைச் செய்கிற தேவனுடைய பிள்ளைகள் நாம். அப்படியிருக்க புதிய உடன்படிக்கையின் ஊழியர்களாகிய நாம் ஒன்று சேர்ந்து தேவ இரகசியத்தை செயல்படுத்தும் போது; தேவனுடைய திட்டம் நிறைவேறும். பூமி உருவாகும் முன்னதாக தேவன் தன்னுடைய மனதில் அது எப்படியிருக்க வேண்டும் என்று கற்பனை செய்திருந்தாரோ; அப்படிப்பட்ட ஒரு பூமி நம் மூலமாக உருவாவதைக் கண்டு அவர் அகமகிழ்வார்.

தேவனுடைய சிந்தனையை நம் சிந்தனையாக்குவோம், அவரைப் போலவே பேசுவோம், அவரைப் போலவே வேலை செய்வோம். உலகத்தாரை முந்துவோம், வீழ்த்துவோம், சூழ்ந்து கொள்ளுவோம், கைப்பற்றுவோம் செழிப்பை! அதுமட்டுமல்ல உலகத்தாரையும் இயேசுவுக்குள் இழுத்து வருவோம், இரகசியத்தை விவரித்துக் காட்டுவோம், இயேசு இல்லாத பிரமாணம் வேலை செய்யும் ஆனால் பிரயோஜனப்படாது என்பதை அவர்களுக்கும் புரிய வைப்போம். சாபமில்லாத பூமியை உருவாக்கிக் காட்டுவோம்.

இயேசுவை உள்ளே வைத்துக் கொண்டு தோல்வியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை அறைகூவி அழைக்கிறோம். இயேசு இல்லாமல் மாயையான வெற்றியில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களையும் அன்போடு அழைக்கிறோம். எல்லோருக்குமே சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறது, நிறைய வேலையிருக்கிறது. யோசித்துக்கொண்டு நிற்காமல் எதிர்காலத்துக்குள் இருக்கிற ஏதேனின் செழிப்பை நிகழ்காலத்துக்குள் இழுத்துக் கொண்டுவர வாருங்கள். நிகழ்காலத்தில் காணப்படும் சாபச்சீர்கேடுகளை இறந்த காலத்துக்குள் கொண்டு போய் புதைக்க வாருங்கள். எல்லாமே நம் சிந்தனையிலும், பேச்சிலும், செய்கையிலும் தான் இருக்கிறது.

பூமியைச் செழிப்பாக்கக்கூடிய இரகசியம் உலகத்தாரின் கையில் சிக்கியிருந்தாலும்; அவர்கள் அதைச் செய்யவில்லை. செழிப்பின் ஊற்றாகிய இயேசுவை நமக்குள் வைத்துக் கொண்டிருக்கிற நாமும் அதைச் செய்யவில்லை! சரி, அதனாலென்ன, இப்போது இரகசியத்தை திருப்பிக்கொண்டோம், அதை உபயோகித்துச் செழிப்பையும் திருப்பிக் கொள்வோம், அவர்களுக்கும் சொல்லிக்கொடுப்போம். அப்போது பூமி இழந்து போன தன்னுடைய மகிமையை மீண்டும் பெற்றுக்கொள்ளும். ஏதேன் தோட்டம் தான் இழந்து போன பூக்களை மீண்டுமாக பெற்றுக் கொள்ளும். பூக்கள் தாங்கள் இழந்த வாசனையை திரும்பப் பெற்றுக்கொள்ளும்!

*"புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். கொலோ. 1:27." "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். 2 கொரி. 2:14." "நித்தியமும் அழிவில்லாமையும் அதரிசனமுள்ள ராஜனுமாய், தாம் ஒருவரே ஞானமுள்ள தேவனுமாயிருக்கிறவருக்கு, கனமும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமேன். 1 தீமோ. 1:17"*

தேவ இரகசியங்கள் இனிவரும் புத்தகங்களில் தொடர்ச்சியாக விவரிக்கப்படும். அதனால் இனிவரும் விதைகள் – 16 புத்தகத்தை விரைவில் எதிர்பாருங்கள், சீக்கிரம் வரும் என்று விசுவாசியுங்கள், பேசுங்கள், எங்களோடு சேர்ந்து வேலை செய்யுங்கள். நன்றி.

*"நீங்கள் என்னிடத்தில் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்; அப்பொழுது சமாதானத்தின் தேவன் உங்களோடிருப்பார். பிலி. 4:9."*

*"...நான் என் கையினால் எழுதி, உங்களை வாழ்த்துகிறேன். ... கொலோ. 4:18"*

*"பிதாவாகிய தேவனாலும் பிதாவின் குமாரனாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், கிருபையும் இரக்கமும் சமாதானமும், சத்தியத்தோடும் அன்போடுங் கூட, உங்களோடிருப்பதாக. 2 யோவான் 1:3"*

*"...அவருடைய வாக்குத்தத்தத்தின்படியே நீதி வாசமாயிருக்கும் புதிய வானங்களும், புதிய பூமியும் உண்டாகுமென்று காத்திருக்கிறோம்... 2 பேதுரு 3:13"*

தொடரும்... வெளிப்பாடுகள்... இரகசியத்தின் ஊற்றுக்குள்ளிருந்து...